

கல்கி
மணியம்.
KALKI 4-5-1958
30 நயா பைசா

பத்மினியின் தேக காந்தியோடு

நீங்களும் மிளிரலாம்!



பாரத் ப்ரொடக்ஷன்ஸ்
'விக்ரமாதித்தன்' படத்தின்
அழகு நட்சத்திரம் பத்மினி



பத்மினி தலைசிறந்த நாட்டிய நடிகையாகப் பிரகாசிப்பது அவரது கலைத் திறனால் மட்டுமல்ல, அழகினால் கூடத்தான். பத்மினி போன்ற சினிமா அழகிகளுக்கு எப்படியோ அதே போல உங்களுக்கும் மாசற்ற மேனியே மகத்தான செல்வம். பேரழகி பத்மினி தந்துதவும் குறிப்பு இதோ: "மேனியழகிற்காக நான் உபயோகிக்கும் தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மென்மையே மென்மை!" லக்ஸ் சோப்பின் மிருதுவான நுரையிலும், கொள்ளை கொள்ளும் நறுமணத்திலும் இன்பம் காண்கிறார் பத்மினி. நீங்களும் அவ்விதமே இன்புறலாம் — இன்றே லக்ஸ் சோப் உபயோகித்துப் பாருங்கள்!

தூய, வெண்மையான **லக்ஸ் டாய்லெட் சோப்**

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு. LTS. 565-50 TM

கல்கி

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 17
இதழ் 40

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி௵
சித்திரைமீ 21உ

சினிமாத் தொழிலுக்கு நெருக்கடி

ஒவ்வொரு சமயம் சர்க்கார் நடந்து கொள்ளும் முறையைப் பார்க்கும்போது, தொட்டிலையும் ஆட்டிவிட்டு, குழந்தையையும் கிள்ளிவிட்ட கதையாக இருக்கிறதே என்று நினைக்கத் தோன்றுகிறது.

சர்க்கார், "குடிசைத் தொழில் பெருக வேண்டும்; அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும்!" என்று பிரமாதமாக இரைச்சல் போடுவதில் குறைவில்லை. கூடவே, குடிசைத் தொழிலாக இருந்துவரும் மிகப் பெரிய தொழிலான கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமான உதவி செய்ய முடியாமல் காலந் தள்ளி வருகிறார்கள். இதை என்னவென்று சொல்வது!

இதேபோல் மற்றொரு விஷயமும் சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது.

சினிமாப் பட முதலாளிகளைச் சர்க்கார் சமீபத்தில் "சபாஷ்!" என்று முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டி யிருக்கிறார்கள். சினிமாப் பட முதலாளிகள் சிலர் நல்ல படங்களாக எடுத்ததற்காக, அவர்களுக்குப் பணமுடிப்பும், பாராட்டுப் பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். இப்படிப் பாராட்டப் பெற்றவர்களில் தமிழ்நாட்டுப் பெரும் பட முதலாளியான திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரும், திரு எம். ஏ. வேணுவும் இருந்தார்கள் என்பது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம். அதேபோல் சிறப்பாக நடித்த நடிகர்களையும் பாராட்டி யிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டப்பட்டவர்களில் ஒரு சில தமிழ் நடிகர்களும் உண்டு. இவையெல்லாம் சினிமாத் தொழில் என்னும் குழந்தைத் தொட்டிலை ஆட்டி விடுவதற்கு ஒப்பாகும்.

இதைப் பார்த்தபோது, 'ஆகா! சினிமாத் தொழிலை நல்ல வழியில் திருப்ப, சர்க்கார் தங்களாலான முயற்சியைச் செய்கிறார்களே' என்று மகிழ்ந்தோம்.

ஆனால் இந்தப் பாராட்டு வைபவ நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் வெளியான அதே சமயம் பட முதலாளிகள், "நாங்கள் நசித்து வருகிறோம், எங்களைக் காப்பாற்றுங்கள்!" என்று கூக்குரலிட்ட அலறல் ஒலியும் கேட்டது.

'இது என்ன வம்பு?' என்று நாம் சற்றுக் கூர்ந்து பார்த்தால், மேல் நாட்டிலிருந்து இறக்குமதியாகி வந்த 'கச்சா பிலிம்' இறக்குமதியை மத்திய சர்க்கார் அறுபது சதவிகிதம் வெட்டிவிடத் தீர்மானித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது. இதனால் பல பட முதலாளிகள் பலவகையான தொல்லைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

1. சிலர் பாதிப் படம் எடுத்துள்ளனர். மற்றப் பாதியை முடிக்கப் போதிய பிலிம் இல்லாமல் தவிக்கின்றனர்.

2. சிலர் படம் எடுத்து முடித்து விட்டிருக்கின்றனர். அந்தப் படத்தைப் பிரதி எடுத்து வெளியூர்களுக்கு அனுப்பித் திரையிடப் போதிய பிலிம் இல்லாமல் பெட்டியில் மூடி வைத்திருக்கின்றனர்.

3. இவை யெல்லாவற்றையும் விடப் பெருத்த தீங்கு இந்த சினிமாத் தொழிலை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து தெருத்தெருவாக அலைந்து வருவதுதான். காமிராமென் என்றும், ஒலிப்பதிவாளர்கள் என்றும், சங்கீத கோஷ்டியினர் என்றும் எத்தனையோ தொழிலாளிகள் வேலையிழந்து விட்டிருக்கின்றனர். இத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட தொழில்கள் நூற்றுக்கு மேலானவை. அவர்கள் வாழ்வில் எல்லாம் மண் விழுந்திருக்கிறது!

இந்தப் பரிதாபத்தைப் பார்க்கும்போது, கச்சாபிலிம் இறக்குமதி விஷயத்தில் மத்திய சர்க்கார் வெகு சீக்கிரமாகப் புனராலோசனை செய்ய வேண்டும் என்று சொல்ல

வேண்டியிருக்கிறது. இல்லையேல், "தொழில்கள் பெருக வேண்டும்; வேலை வாய்ப்புக்கள் பெருக வேண்டும்" என்றெல்லாம் மந்திரிகளும் அதிகாரிகளும் வாய் கிழியக் கத்துவதற்குப் பொருள் இல்லாமற் போகும்!

பட முதலாளிகள் ஒரு விஷயத்தைக் கூறி வருகிறார்கள். இப்பொழுது நம் நாட்டுக்குத் தேவையான கச்சாபிலிமுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவாகிறது. அதனால் நமது அந்நிய மூலதனம் குறைந்து போகிறது என்று வருத்தப்படலாம். ஆனால் பட முதலாளிகள் அதே இரண்டு கோடி ரூபாயை, நாங்கள் படமெடுத்துக் கிழக்காசிய நாடுகளுக்கு அனுப்பிச் சம்பாதித்துத் தந்து விடுகிறோமே என்கின்றனர். சர்க்கார் இவ்விஷயத்தைத் தீர்க்கமாக ஆலோசித்துப் பட முதலாளிகளுக்கு உதவ வேண்டியது அவசியம்.

மேலும் சென்னையில் தயாரிக்கப்படும் தமிழ் தெலுங்குப் படங்கள்தான் முக்கியமாக மலேயா, இலங்கை, இந்தோனேசியா முதலிய நாடுகளுக்குச் சென்று அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கின்றன. அதனால் சென்னை சர்க்கார் இவ்விஷயத்தில் சிரத்தை கொண்டு மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

அதைத் தவிர, ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் சினிமா வரி மூலம் ஏராளமான பணம் வெகு சௌகரியமாகச் சம்பாதித்து வருகின்றனர். சமீபத்தில் சென்னை சர்க்கார், இந்தத் 'தமாஷா வரி'யை சினிமா டிக்கட்டுகளின் மீது உயர்த்தி இன்னும் கொஞ்சம் சம்பாதிக்க முனைந்திருக்கிறது. படங்களின் உற்பத்தி தடைப்பட்டால், புதுப் படங்கள் வராவிட்டால் தமாஷாவரியும் கணிசமான அளவுக்குக் குறைந்துவிடும். அதனால் எல்லா ராஜ்ய சர்க்கார்களும் சேர்ந்து கச்சா பிலிம் இறக்குமதி விஷயத்தில் மத்திய சர்க்காரின் திட்டத்தை மாற்றிக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

பட முதலாளிகளுக்கும் ஒரு வார்த்தை நாம் சொல்ல விரும்புகிறோம்!

கச்சா பிலிம் நம் நாட்டில் உற்பத்தி செய்வதில்லை. மேல் நாட்டிலிருந்து வருகிறது. அதை எவ்வளவு ஜாக்கிரதையாக உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவு ஜாக்கிரதையாக உபயோகப்படுத்த வேண்டும்.

சில படமுதலாளிகள், தாங்கள் என்ன கதை எடுக்கப் போகிறோம் என்ற நிர்ணயமே இல்லாமல், தங்களுக்குப் பிடித்தமான நடிகர்களை வைத்து, ஏதேதோ காட்சிகள் எடுத்து விட்டு, பிறகு அதை ஏதோ கதையாக ஜோடிக்கப் பார்க்கிறார்கள். இப்படி எடுக்கப்பட்ட ஒரு படத்துக்குச் சுமார் எட்டுப் படம் எடுப்பதற்கான 'பிலிம்' வீண் செலவு செய்யப்படுகிறது. ஒரு வீடு கட்டும்போது எவ்வாறு திட்டம் போடுகிறோமோ அதற்கு வேண்டிய சாமான்கள் சேகரிக்கிறோமோ அதைப்போலவே கூடிய அளவு படத்தொழிலையும் நடத்த வேண்டும்.

மற்றொரு விஷயம், நம் நாட்டுப் படங்கள் நீளமாகவே இருந்தாக வேண்டும் என்று பொதுமக்கள் நினைப்பதாக, அவர்கள் தலையில் பழி போட்டு அளவுக்கு மிஞ்சிய நீளமான படத்தை எடுக்கிறார்கள். இருபது மைல் தூரத்திலிருந்து வண்டியைக் கட்டிக்கொண்டு சினிமா பார்க்க வரும் மக்களுக்கு மூன்றரை மணிக்குக் குறைவில்லாமல் படம் காட்டவில்லையானால் அவர்கள் அதிருப்திப்படுகின்றனர் என்கின்றனர். இவை தவிர மற்றொரு வாதமும் உண்டு. நம் மக்களுக்கு ஒரு விஷயம் புரிய வைக்கச் சற்று நீளமாகப் படம் எடுக்க வேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர்.

இந்த வாதங்களை நாம் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

இரண்டரை மணி நேரம் உணர்ச்சி நிரம்பிய படம் காட்டினால் நம் மக்கள் மிகுந்த திருப்தி யடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மற்றொரு விஷயம், இருபதாண்டுகளுக்கு முன் மக்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள நீளமாக எடுக்க வேண்டியிருந்தால், அதே நீளம் இன்றும் வேண்டியிருக்கும் என்று நினைப்பது சரியல்ல. மக்கள் படம் பார்க்கும் திறமையில் தேர்ச்சி யடைந்து கொண்டுதான் வருகிறார்கள். பழையபடியேதான் படம் எடுக்க வேண்டும் என்பதில்லை.

பிலிம் தொழிலுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி கவலை யளிப்பதாக இருப்பினும் பிலிம் சேதப்படாமல் படம் எடுக்கும் முறைகளும் பட முதலாளிகள் ஆரம்பித்து, இத் தொழில் சீர்ப்படலாம்.


ஆயினும், பாரத சர்க்கார் முன்னால் கடைப்பிடித்த தாராளமான இறக்குமதிக் கொள்கையினால் சினிமாத் தொழில் இவ்வளவு வளர்ந்து விட்டது. திடீரென்று இப்பொழுது கட்டுப்படுத்தினால் தொழிலில் உள்ளவர்கள் பெருங் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள். அதிலும் முக்கியமாக, சென்னையில் இத்தொழில் பெருத்த அளவு வளர்ந்திருப்பதால், இந்தக் கட்டுப்பாட்டினால் சென்னையிலுள்ளவர்களே பெரு நஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். அதனால் மத்திய சர்க்கார் சற்று யோசித்துக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும்.

உதகமண்டலத்தில் பிலிம் உற்பத்தி செய்யப்போவதாக சில நாட்களாகப் பேச்சு அடிபடுகிறது. கச்சா பிலிம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யும் யோசனைகளைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு நடத்துவதும் மத்திய சர்க்காரின் கடமையாகும்.

அம்ருதசரஸில் கம்யூனிஸ்ட்டுகள்

கம்யூனிஸ்ட்டுகள் அம்ருதசரஸில் கூடினர். "இனிமேல் நாம் நல்லவர்களாக, நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும்!" என்று தீர்மானித்தனர். இதைக் கேட்டதும் தேசத்திலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நடுங்கத் தொடங்கி விட்டனர்.

கம்யூனிஸ்டுகள் நீண்ட நாட்களாக, மற்ற நாடுகளிலும் இந்தியாவிலும் கூட பலாத்காரம், நம்பிக்கைத் துரோகம், மோசடி, போன்ற காரியங்களைத் தங்கள் நோக்கங்களை அடைய பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அதனால், கம்யூனிஸ்டுகள் எவ்வளவுதான்


கச்சா பிலிம் இறக்குமதியில் ௬௦ சதவிகிதம் குறைத்தது, சினிமாத் தொழிலுக்குத் தீங்கு விளைவிப்பதன்றி அந்நியச் செலாவணியை யும் இழக்கச் செய்து விடும் என்று இந்தியப் படாதிபதிகள் கூறுகின்றனர்!
௬௦% குறைப்பு
அந்நியச் செலாவணி
நேருஜியின் கேரள விஜயம் கேரள காங்கிரஸுக்கு உதவி புரியுமா என்று சிலர் சந்தேகப் படுகின்றனர்.
உச்சி மகாநாடு
"நாங்கள் மகாநாட்டுக்குப் போக விரும்பவில்லை என்று யார் சொன்னது?"

தாங்கள் நல்லவர்களாகி விட்டதாகச் சொல்லிக் கொண்டாலும் மக்கள் பரிபூரணமாக நம்பிவிட மாட்டார்கள். இது கர்ம நியதி. திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ''நாங்கள் பிராமணர்களைத் தாக்க வில்லை; பார்ப்பனீயத்தைத் தான் தாக்குகிறோம்'' என்கிறார்கள். என்றாலும், மக்கள் அவர்களை நம்பவில்லை. அவர்கள் நடத்தையை இன்னும் கூர்ந்து கவனித்து வருகிறார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் முரணில்லாமலிருக்கிறதா என்று பார்த்து வருகிறார்கள்.

மகாநாடுகள் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றுவதாலோ, மேடை மீது ஏறித் தொண்டை கிழியப் பிரசங்கங்கள் செய்வதாலோ மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட முடியாது. நடத்தை தான் மக்களிடையே நம்பிக்கை வளர்க்கச் செய்யும்.

கம்யூனிஸ்ட்டுகள் கேரள நாட்டில் ஆட்சி நடத்துகிறார்கள். அங்கு அவர்கள் நல்லபடியாக நடந்து கொண்டார்களானால் மக்களின் நம்பிக்கை பெற உதவும். ஒரு நாள் நன்னடத்தையோ, ஒரு மாத நன்னடத்தையோ கண்டு மக்கள் ஏமாந்து விட மாட்டார்கள். நம் நாட்டு மக்கள் எழுத்து வாசனை இல்லாமலிருக்கலாம், விஷய அறிவில் அவர்கள் குறைந்தவர்கள் அல்ல. யாரையுமே அவர்கள் எளிதில் இனம் கண்டு கொள்வார்கள்.

காங்கிரஸ் கட்சி நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகிறது என்பதைக் கண்டு, கம்யூனிஸ்ட் கட்சியார் இனி தங்களுக்குத்தான் மக்களின் ஆதரவு என்று நினைத்துக் கொண்டார்களானால் அது வெறும் பகற்கனவாகத்தான் முடியும்! காங்கிரஸின் பலவீனத்தையே கம்யூனிஸ்ட்டு கட்சி நம்பிவிடக் கூடாது. அவரவர்கள் நன்னடத்தையே அவரவர்களுக்கு பலம் தரும்.

மேலும் ஒரு விஷயம். பலாத்காரத்தை விட்டுவிட வேண்டும் என்பது நம்முடைய கட்சி. கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் பழைய முறைகளை விட்டுவிடத் தீர்மானித்து இனி பலாத்காரத்தில் இறங்கமாட்டோம் எதிர்க் கட்சிகளை அடக்கி நிர்மூலமாக்கும் தந்திரத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று பகிரங்கமாக அறிக்கை விட்டால் காங்கிரஸ்காரர்கள் இதை ஆதரிக்க வேண்டுமே ஒழிய 'ஒப்புக்கொள்ள மாட்டோம்' என்று சொல்வது தவறு. பலாத்காரம். மேலும் இல்லாமலிருப்பது நாட்டுக்குப் பெரிய நன்மை. அரசியல் கட்சியின் லாப நஷ்டங்களைக் கருதி எந்தக் கட்சியாவது இனி நாம் பலாத்காரத்தைப் பயன்படுத்த மாட்டோம், மறைமுகமும் மோசமும் நம்முடைய திட்டத்தில் இல்லை என்று பொது மக்கள் அறிய உறுதி கூறினால் அதை ஏளனம் செய்யலாகாது.

என்ன சேதி?


யார் உயர்ந்தவர்?

காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்கள் சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்து பல கூட்டங்களில் பேசிப் பலப் பல கருத்துக்களை உதிர்த்தார். ஒரு கூட்டத்தில், தாம் பிராம்மணர் என்றும், தாம் உயர்ந்தவர் என்றும் காந்திஜியோடு தொடர்பு ஏற்படும்வரை தவறாக எண்ணி வந்ததாகவும் பிறகு தான் அடக்கம் மேற்கொண்டதாகவும் அறிவித்தார். இந்தக் கூற்றை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். பிராமணர்கள் மற்றவர்களை உயர்த்த வேண்டும் என்றும் சொன்னார். இதிலும் ஓரளவு உயர்வு உணர்ச்சி கலந்துதான் இருக்கிறது. மற்றவர்களைத் தம் நிலைக்குமேல் தூக்கவேண்டுமானால் தாம் உயர்ந்த நிலையிலிருப்பதாகவே கருத வேண்டுமல்லவா? குணத்தினாலும், பண்பாட்டினாலும் உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பதாலும் உயர்ந்த நிலை ஏற்படுகிறது. அவை இல்லாவிடில் பிராமணர்கள் பிராமணர்களல்ல. அந்தச் சுத்தத்தைப் பெற்றவர்கள் யாராயினும் உயர்ந்தவர்களே. இதையெல்லாம் வெகு நாட்களுக்குமுன் புத்தர் பெருமானும் திருவள்ளுவரும் இன்னும் மற்றப் பெரியோர்களும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாப் பிராமணர்களும் அகங்காரம் கொண்டவர்கள் என்பது திரு தேபரவர்கள் சொன்னதின் கருத்தல்ல.

ஆனால் இத்தகைய கூற்றைத் தி. கழகத்தார் விஷம முறையில் பயன்படுத்திக் கொண்டால் வியப்பதற்கில்லை.

எது அவசியம்?

கிரகணத்தின்போது சில நியமங்களும் விரதங்களும் அனுசரிப்பதுபற்றி காங்கிரஸ் தலைவர் திரு தேபர் வருந்தினதாகச் செய்தியில் காணப்பட்டது. இதற்காக அவ்வளவு கோபித்தது நியாயமாக நமக்குத் தோன்றவில்லை. சில விரதங்களும் நியமங்களுமாவது இன்னும் கவனிக்கப்பட்டு, தெய்வசித்தனை அவ்வப்போது தருவித்துக் கொள்கிறார்களே என்று திருப்திப்படவேண்டியது அவசியம். விரதங்களை விட்டு விடுவது எளிது. விரதங்களோடு பக்தியும் மறைந்து விடுவது இயற்கை. ஆகவே அவற்றை விட்டுவிடச் செய்யும் பிரசாரத்தைவிட பக்திப் பிரசாரம் அவசியம். கிரகணங்களின் உண்மைக் காரணத்தை நம்முடைய மூதாதையர்கள் அறியாமல் இருக்கவில்லை. கணக்குப் பார்த்துப் பஞ்சாங்கத்திலும் சொல்லியே வந்தார்கள். ஆயினும் சூரியோதய அஸ்த



'ரோட்டரி கிளப்' என்ற பெயரில் உலகிலுள்ள ஒவ்வொரு நகரிலும் ஒரு கழகம் இருக்கிறது. இந்தக் கழகத்தில் பெரும்பாலும் நீதிபதிகளும், வக்கீல்களும், தொழில் அதிபர்களும், பிரமுகர்களும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். அடிக்கடி ரோட்டரிக் கழக அங்கத்தினர்கள் ஒன்று கூடிப் பல பிரச்னைகளைப்பற்றி விவாதித்து நாடு நலம்பெற நல்ல யோசனை செய்வார்கள். அகில உலகிலும் உள்ள இந்த ரோட்டரிக் கழகத்தின் கவர்னர்கள் மகாநாடு அடுத்த மாதம் அமெரிக்காவில் கூடப்போகிறது. இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக டி. வி. எஸ். மோட்டார் தொழில் ஸ்தாபனத்தின் அதிபரும் சென்னை, கேரளம், ஆந்திரம், கன்னடம், இலங்கை ஆகிய இந்து பிரதேசங்களில் உள்ள ரோட்டரிக் கழகத்தின் கவர்னருமான திரு டி. எஸ். ராஜம் அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்கிறார். ஏப்ரல் மாதம் 26ந் தேதி ஏராளமான ரோட்டரிக் கழக அங்கத்தினர்களும், தொழில் பிரமுகர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்திருந்து திரு டி. எஸ். ராஜம் அவர்களையும் அவரது மனைவியாரையும் வழியனுப்பி வைத்தனர். அகில உலக ரோட்டரிக் கழக கவர்னர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் ரோட்டரிக் கழக கவர்னர் திரு ராஜம் மேற்படி மகாநாட்டில் நாடு நலம் பெற நல்ல யோசனைகள் சொல்லி, வெற்றியுடன் திரும்புவார் என்பதில் சந்தேகமில்லை.

மணங்களைப் பிரார்த்தனைக் காலங்களாகக் கருதியதைப் போலவே, அவற்றைவிட ஓரளவு முக்கியமாகச் சூரிய சந்திர கிரகணங்களை விரத காலங்களாகவும் பிரார்த்தனை காலங்களாகவும் நடத்தி வந்தார்கள். அதில் குற்றம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

ரொட்டிச் சங்கடம்

பம்பாயிலிருந்து ஒரு நண்பர், பம்பாயில் வாரத்தில் இரண்டு நாட்கள் கோதுமை ரொட்டி சாப்பிட வேண்டியிருக்கிற சங்கடத்தைப் பற்றி ரொம்பவும் குறைப்பட்டு எழுதியிருந்தார். சென்ற வாரம் நமது வட்ட மேஜைப் பகுதியில் அக்கடிதம் வெளியாகியிருந்தது. அந்தக் கடிதத்துக்கு ராஜாஜி எழுதும் பதில் :

''பம்பாய் ஏ.பி. ஆதிநாராயணனுக்கு, ராஜாஜி ஆசீர்வாதம். ஹோட்டலில் செவ்வாயும் வெள்ளியும் அரிசிச் சாதம் இல்லை, கோதுமை ரொட்டியே என்று பயப்பட்டு எழுதியிருக்கிறீர். பயப்பட வேண்டாம். எடை பார்த்துக் குறித்துக் கொள்ளும். மூன்று மாதங்கள் கழித்துப் பார்த்தால் ஒன்றும் துயரப்பட இடம் இருக்காது. செவ்வாயும் வெள்ளியும் விரத நாட்களாகப் பாவித்துக் கொள்ளும். ரொட்டி பிடிக்கா விட்டால் கொஞ்சமாகச் சாப்பிட்டு வாரும். உடம்புக்கு ரொம்ப நல்லது. ரொட்டி பிடித்தால் மிக நல்லது; உடம்பு தேறும். நன்றாக வாயில் மென்று விழுங்கவும். அவ்வளவுதான். மெல்ல மெல்ல ருசி ஏறும். நான் சொல்லுவதை நம்புங்கள். கோபித்துக் கொள்ள வேண்டாம்.''

ராஜாஜியிடம் யார் கோபித்துக் கொள்ள முடியும்? பம்பாய்த் தமிழர்கள் மாத்திரம் என்ன, தமிழகத் தமிழர்கள்கூடக் கோதுமை ரொட்டியைச் சாப்பிடத் தொடங்கி விடுவார்கள்.

அருள் வாக்கு


நாம் மீண்டும் ஜன்மம் எடுக்கக் கூடாது; இந்த ஜன்மத்துடன் தீர்ந்து விட வேண்டும் என்றே நாமெல்லாருமே விரும்புகிறோம். மறு ஜன்மம் இல்லாமல் விடுதலை பெறுவதற்கு மார்க்கம் என்னவென்று எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றன. மீண்டும் பிறப்பு மீண்டும் மரணம் என்ற சுழலிலிருந்து எப்படித் தப்புவது என்பதை அவை போதிக்கின்றன. ஆயினும், மறு ஜன்மத்தை வரவேற்கும் சுலோகமும் ஒன்றிருக்கிறது. இது ஒன்றுக்கொன்று முரணாயிருப்பது போலத் தோன்றலாம். ஏனெனில் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் பரவாயில்லையென்று அந்த சுலோகம் கூறுவது போல் தோன்றுகிறது. ஆனால், அதில் மூன்று நிபந்தனைகள் காணப்படுகின்றன. "இனி நான் எடுக்கும் ஒவ்வொரு ஜன்மத்திலும் சரீர மீமாம்ஸமே என் வாழ்வின் அஸ்திவாரமாயிருக்குமானால், நான் துதிக்கும் கடவுள் பரமேச்வரனாகவே இருப்பாரென்றால், நான் தஞ்சம் புகும் குரு ஸ்ரீ சங்கராச்சாரியாராகவே இருப்பாரென்றால் நான் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் பரவாயில்லை. ஒவ்வொரு ஜன்மத்திலும் இந்த மூன்றும் எனக்கு அருளப்படட்டும்" என்பதே அந்த சுலோகத்தின் அர்த்தம். ஸ்ரீ ஆதிசங்கரரின் கோடிக்கணக்கான சிஷ்யர்களில் ஒருவர் இவ்வாறாகப் பிரார்த்திக்கிறார்.

ஸ்ரீ ஆதிசங்கரர் எழுதியுள்ள 'சிவானந்த லஹரி'யிலும் இதே மாதிரி ஒரு இடம் இருக்கிறது.

மனிதனாகவோ, தேவனாகவோ, பறவையாகவோ, மரத்துக்கு மரம் தாவும் குரங்காகவோ, கொசுவாகவோ, புழுவாகவோ, ஆகிய எந்தப் பிறவி எடுத்தாலும் சரி, ஸ்ரீ பரமேச்வரனின் பாத கமலங்களைத் துதிக்கும் பேரானந்தம் மட்டும் எனக்குக் கிடைக்குமென்றால், எந்த ஜன்மத்தையும் நான் வேண்டாமென்று சொல்லவில்லை. வெளியுடல் எப்படி இருந்தால் என்ன? உடல் அவலட்சணமாகவோ அருவருக்கத்தக்கதாகவோ இருந்தாலும் பரவாயில்லை. உள்ளம் சுத்தமாயிருக்க வேண்டும். ஒருவன் லட்சணமாயிருக்கலாம். ஆனால் உள்ளத்தில் பக்தியே இல்லாமல் இருந்தால் அது மனித சுபாவத்தை உயர்த்துவதற்குப் பதிலாகச் சிறுமைப்படுத்தி விடும். உலகத்தின் மாயைகளில் நாம் சிக்குண்டு, உள்ளம் இழுக்கடைந்து விடுமோவென்ற பயத்தினால் தான் நல்ல மனிதர்கள் மறு ஜன்மத்தைப் பற்றிப் பயப்படுகிறார்கள்.

கடவுள் கருணைக் கடல். நம்மெல்லோரிடமுமே அவர் அன்பு செலுத்துகிறார். அவரிடம் பக்தி செலுத்துவதே நம்முடைய விமோசனத்துக்கு மார்க்கமாகும். குரு நமக்குக் கடவுளைக் காட்டுகிறார். கடவுளைப் பற்றிப் பேசும் சாஸ்திரங்களை நமக்குப் போதிக்கிறார். உண்மையிலேயே நமக்கு நண்பராகவும் நல்வழி காட்டுபவராகவும் இருப்பவர் நமது குரு தான். முதலில் குறிப்பிட்ட சுலோகத்தில் எப்போதும் ஸ்ரீ சங்கராச்சாரியாரே தனது குருவாய் இருக்க வேண்டும் என்று சிஷ்யன் பிரார்த்திக்கிறான்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்.





இதுபேசும் மொழியா?

எல். கிருஷ்ணசாமி பாரதி

'அரசாட்சி மக்கள் பேசும் மொழியில் நடக்க வேண்டும்; இந்தியாவில் 42 சத விகிதத்தினர் ஹிந்தி பேசுகிறார்கள்; எனவே ஹிந்தியே இந்தியாவின் அரசுப் பொதுமொழியாக வேண்டும்.'

அண்மையில் சென்னையில் கூட இருக்கும் ஹிந்தி மாநாட்டுச் செயலாளர்களின் முன்னறிக்கையில் இவ்வாறு காணப்படுகிறது.

இவ்வாதத்துக்கு ராஜாஜி அவர்கள் ஆணித்தரமாகப் பன்முறையும் பதில் கொடுத்தாயிற்று. என்றாலும் விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளம் போல், மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்ளுகிறது! உரிய காலத்தில் அதை இறங்கச் செய்வோம்.

அவ்வாதத்திலுள்ள ஒன்றிரண்டு அம்சங்கள் மட்டும் குறிப்பிட விடை கொள்ளுவேன்: ராஜாஜி கூறியுள்ள மறுமொழி மீண்டும் கூறப் போவதில்லை.

இந்த 42 சத விகிதத்தினர் யாவரும் பேசும் மொழி, ஒரே ஹிந்தி தானா? அவற்றுள் பல் வேறு மாறுபாடுகள் உண்டல்லவா? அது போகட்டும். அவர்கள் பேசுகிற மொழியை 'ஹிந்தி என்று கூறுவது பொருந்துமா? ஹிந்துஸ்தானி என்று கூறுவதே அதிகப் பொருத்தமல்லவா? வட நாட்டில் மக்கள் பேசும் மொழி ஒரு கலப்பு மொழி. பெரும்பான்மையாகப் பாரசீகச் சொற்கள் கலந்துள்ளது உருது: வடமொழி கலந்துள்ளது ஹிந்தி: இந்த இரண்டையும் கலந்து பேசப் பெறுவது இந்துஸ்தானி. ஹிந்தி பண்டிதர் கையாளும் எழுத்தில் வடிக்கும் மொழி—இப்பொழுது வட நாட்டில் பொது மொழியாக உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்லி உருவாக்கி வருவது மக்கள் பேச்சு வழக்கில் இல்லாத, உருதுச் சொற்களை வேண்டும் என்றே நீக்கப்பட்ட வடசொற்கள் மயமான ஹிந்தியாகும். இந்த உண்மையை உணர்பவர்கள், இந்த 42 சதவிகித வாதம் சிறிதும் பொருத்தமற்றது என்பதைக் காண்பார்கள். "வடநாட்டு ஹிந்தி ஆதரவாளர்களே! நீங்கள் உருவாக்கும் ஹிந்தி அந்த 42 சதவிகிதத்தினரில் 1 சதவிகிதத்தினரால் கூடப் பேசப்படுவதுமில்லை; பத்தாயிரத்தில் ஒருவருக்குக் கூடப் புரியாதே!"

மக்கள் பேசாத, புரியாத மொழியில், ஹிந்தி உருவாக்கப்படுகின்றது என்பதை எப்படிச் சொல்லுகிறீர்கள் என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். நன்றாகக் கேளுங்கள். மறுமொழியும் தருகின்றேன். அதை நீங்கள் மட்டும் கோபதாபமின்றிச் செவி கொடுத்துச் சிந்தை சாய்த்துக் கேளுங்கள்! ஹிந்தி மொழியே பொது மொழியாக வேண்டும் என்று துள்ளிக் குதிக்கின்ற தமிழர்களே! நன்றாகப் படியுங்கள். வட மொழியில் வல்லுனர்களே! படியுங்கள்!

1. "பாரதத்தை ஒரு சம்பூரண சம்பன்ன பிரபுத்வ லோகதந்த்ராத்மக கணராஜ்யமாக அமைத்து அதன் நாகரிகதர்கள் அனைவர்க்கும், சமாஜிக, ஆர்த்திக நீதியை வழங்க...... அதிநியமம் செய்து கொள்ளுவோமாகவும்!"

ஏதாவது புரிந்ததா? மீண்டும் படித்துப் பாருங்கள்! புரிந்து விட்டதா? மக்களாட்சியில் மக்கள் மொழியில், சாதாரண மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இது எழுதப்பட்டது. படியாத சாதாரண தமிழ் மக்களுக்கும், இதைச் சொன்னால் உடனே புரிய வேண்டும் என்பதற்காகத் தொகுக்கப்பட்டது! என்ன ஐயா, இது தமிழா என்று கோபம் என்மேல் கொள்ள வேண்டாம்! தமிழ் எழுத்துக்கள்: அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்!! வடநாட்டு ஹிந்தி அன்பர்கள், ஹிந்தியைப் பொது மொழியாக்கும் நல்ல நோக்கத்தோடு இவ்வாறு செய்திருக்கிறார்கள். இது நம்முடைய அரசியல் சட்டத்தின் முதல் வாக்கியத்தின் ஒரு பகுதி; ஹிந்திச் சொற்களால் அமைக்கப்பட்டுள்ளது! தமிழர்களும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்.

"சம்பூரண சம்பன்ன பிரபுத்வலோகதந்த்ராத்மக கணராஜ்யம்" என்ற தடபுடலான சொற்றொடர், Sovereign democratic Republic என்ற ஆங்கிலச் சொற்றொடரின் ஹிந்தி மொழிபெயர்ப்பு. 'பூரண உரிமையுள்ள மக்கள் குடியரசு' என்று எளிய தமிழில், யாருக்கும் புரியும் வண்ணம் சொல்லி விடலாம்! ஆனால் அது ஹிந்திப் பொது மொழியாகாதே!

நாகரிகதர்கள்—குடிமக்கள். சமாஜிக—சமுதாய; ஆர்த்திக — பொருளாதார!

இன்னொரு உதாரணம்:—


"மதுரை நிர்வாசன க்ஷேத்திரத்தில் மே 10ம் நாள் நிர்வாசனம் நடைபெறும். மத்தாதாக்கள் வந்து சாலகா பண்ண வேண்டும்.

புரிகிறதா? ஆங்குள்ள சொற்களின் பொருளைக் குறிப்பிடுகிறேன்: நிர்வாசன க்ஷேத்திரம் என்றால் தேர்தல், மத்தாதாக்கள் —வாக்காளர்கள். சாலகா—வாக்களிப்பு!

"மதுரைத் தொகுதியில் 10ந் தேதி தேர்தல். வாக்காளர்கள் வாக்குக் கொடுக்க வேண்டும்" என்பதைப் பொது மொழியாம் ஹிந்தியில் எழுத்தில் இவ்வாறு அன்போடு புகன்றுள்ளார்கள்!!

'லோகதந்த்ராத்மக கணராஜ்யம்,' நிர்வாசனம், மத்தாதாக்கள் போன்ற சொற்கள் தமிழகத்தில் நிலைபெற இடமுண்டா? அவசியமா? முடியுமா? காரிய சாத்தியமா? நல்லதுதானா? ஒற்றுமை வளர்க்க முற்படும் கற்றறிந்தோர்களே! சிந்திக்கவேண்டுகிறேன்.

ஹிந்தி பொதுமொழி ஆக்கப்படுவதில் இத்தகைய தொல்லைகள் ஏற்படும். மலையாளம், ஆந்திரம், கன்னடம் போன்ற மாநிலங்களில் எப்படி இந்த லோக தந்த்ராத்மக கணராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ, நமக்குத் தெரியவில்லை.



சமீபத்தில் ராஜாஜி அவர்கள் தமது பேத்தியின் திருமணத்துக்காகத் திருப்பதிக்கு விஜயம் செய்திருந்தபோது, கோவிலுக்குச் சென்று திருப்பதி வேங்கடேசப் பெருமாளையும் தரிசித்து விட்டு வந்தார். தம் அருமை நண்பர் திரு நவரத்தின ராமராவுடன் தரிசனம் செய்து திரும்பும் ராஜாஜி அவர்களையும், கோவில் அதிகாரி ஸ்ரீ அண்ணாராவ் அவர்களையும் திருமலை கோவில் பேஷ்கார் ஸ்ரீ தேவராஜ் அவர்களையும் இந்தப் படத்தில் காணலாம்.

இச்சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்துகிறார்களா என்று கேட்கலாம். ஆம். அரசியல் சட்ட மொழிபெயர்ப்புக் குழுவினரான எனக்குத் தெரியும். இன்னொரு உறுப்பினரான பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குத் தெரியும். தில்லி மிகவும் வற்புறுத்தியது. ஆனால் அதை மொழிபெயர்ப்புக் குழுவினரான நாங்கள் முழுமூச்சோடு ஏற்பதற்கு மறுத்து, கூடிய அளவில் தமிழ்ச் சொற்களைக் கையாண்டோம்.

இப்பொழுது வானொலி, 'ஆகாஷ் வாணி' யாக மாறி விட்டது. காந்தி ஸ்மாரக் நிதி, கதர் வஸ்திராலயங்களில், சஞ்சாலக், விபாக், விவஸ்தாபக் போன்ற சொற்கள் வந்துள்ளன. இவையெல்லாம் எதற்காகவோ? தமிழ் மக்கள் புரிந்து கொள்ளுவதற்காகத்தானா?

தில்லிச் சட்ட மன்றங்கள் இரண்டும் இப்பொழுது 'லோக்சபா', 'ராஜ்ய சபா' என்று அழைக்கப்படுகின்றன. அரசியல் சட்டம் ஆங்கிலத்தில் உள்ளது: அச்சட்டத்தில் இவ்விரு மன்றங்களையும் "House of The People, Council of States" என்று குறிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது ஆங்கிலம் தான் மத்திய அரசின் ஆட்சி மொழி. எனவே, இவ்விரு சபைகளையும் ஆங்கிலத்தில் கூறும் போது அரசியல் சட்டத்தில் உள்ள சொற்களான, "House of The People, Council of States" என்று கூறவேண்டுமே ஒழிய அம்மன்றத் தலைவரோ, அரசாங்கமோ வேறு சொற்களால் குறிப்பிடுவது சட்ட விரோதமான செயலாகும். வேறு மொழிகளில் மொழி பெயர்க்கும்போது, ஏற்றவாறு மொழி பெயர்த்துக் கொள்ளலாம். அது வேறு விஷயம். ஆனால் ஆங்கிலத்தில் குறிப்பிடும் போது, அச்சொற்களாலேயே குறிக்கப்பட வேண்டும்; மேன்மை தங்கிய மக்கள் சபையின் தலைவரும் அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரே; அவருக்கும் தம் பிரியம் போல் சொற்களை மாற்ற உரிமை கிடையாது! அவசியம் என்று கருதினால் சட்டத்தைத் திருத்தலாம். இதை நான் கூறுவதற்குக் காரணம் உண்டு. வடநாட்டு மொழி வெறி, இப்படிப் பட்டப் பகலில் அரசியல் சட்டத்துக்குப் புறம்பான, எதிரான செயலைச் செய்யத் துணிவுற்றால், பின் எதுதான் செய்யாது என்பதைச் சுட்டிக் காட்டவே. அது மட்டுமல்ல! இத்தகைய சட்ட விரோதமான செயல்களை எடுத்துக் காட்ட, சட்டசபை உறுப்பினர்களுக்குத் துணிவுடைமை ஏற்படுவதில்லையே! கட்டுப்பாட்டில் அப்படிக் கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள் போலும்!


எனவே, ஹிந்தி பொது மொழிப் பிரசாரத்தில் '42 சதவிகித' வாதம் பொருளற்றது; பயன் அற்றது. உண்மையை மறைப்பது.

இப்பொழுது வடநாட்டில் உருவாக்கப்படுகிற ஹிந்தி மொழி, அந் நாட்டு மக்களுக்குமே புரியாத ஒரு பண்டித மொழி. அதைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமிழ் மொழியின் நல்ல வளர்ச்சிக்கும் நல்லதல்ல. எனவே ஹிந்தி மத்திய அரசின் அலுவல் மொழியாக, வேண்டாத விரும்பாத மாநிலங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதே வன்மையாக எதிர்க்கப்படுகிறது.

தமிழர்கள் ஹிந்தி மொழி பயின்று கொள்வதை நான் எதிர்க்கவில்லை. பயில்வது நல்லது என்றும் சொல்லுவேன். ஆனால் அதில் கட்டாயம் இருக்கக் கூடாது. திணிப்புக் கூடாது. பேசும் மொழியாக எல்லா மொழியினரும் எளிதே புரியும் வண்ணம் அமைந்த ஒரு மொழி உருவாக்கப்படலாம். 'லோகதந்த்ராத்மக கணராஜ்யங்கள்,' 'மந்தாதாக்கள்' வேண்டாம். இந்தி ஒரு 'Lingua franca' ஆகலாம். ஆனால் அரசு மொழியாக ஏற்க முடியாது.

'லிங்குவா பிராங்கா' (Lingua franca) என்றால், பல மொழியினர் பேசிக் கொள்ளும் ஒரு கலப்பு மொழி. லெவான்டில் (Levant) இத்தாலி, பிரஞ்சு, கிரேக்க, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளைக் கலந்து பேசப்பெறும் ஒரு மணிப்பிரவாள மொழிக்கு 'லிங்குவா பிராங்கா' என்று பெயர். அந்த அளவில் ஹிந்தி உருவாக்கப்பட்டால் நல்லதுதான்!





பல் முளைக்கும்போது
உண்டாகும்
உபாதைகள்
குடல்வலி
வாயு
வயிற்றுக்
கோளாறுகள்

அவனுக்கு

க்ரைமிக்ஸ்

க்ரைப் மிக்சர்
கொடுங்கள்

க்ரைமிக்ஸ் உங்கள்
குழந்தையின் குடல்வலி,
வாயு, இதர வயிற்றுக்
கோளாறுகள் முதலியவை
களுக்கு துரித நிவாரணம்
அளிக்கிறது. உங்கள்
குழந்தையை ஆரோக்கிய
மாகவும், புன்சிரிப்புடனும்
இருக்கச் செய்கிறது.
குழந்தைக்கு க்ரைமிக்ஸ்
கொடுங்கள்

க்ரைமிக்ஸ்
க்ரைப் மிக்சர்



உங்கள் குழந்தையை ஆரோக்கியமாக இருக்கச்செய்கிறது.

[மே 2வ விசாக் பண்டிகை. அன்புத் தெய்வமான புத்தர் பிரான் அவதரித்த திருநாள். இந்தப் புனித தினத்தை உலகெங்கிலும் உள்ள பௌத்தர்கள் பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகிறார்கள். இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் விசாக் தினம் சரித்திர ரீதியாகவும் விசேஷ முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.]

இலங்கையில் விசாக விழா

ரஜனி

பாரதத்தின் சரித்திரத்தில் இமயத்துக்கு உள்ள கௌரவமும் புனிதத்தன்மையும் வேறு எதற்குமில்லை. அகில உலகையும் தாங்கிக் கொண்டிருக்கும் மகாமேருவாகப் புராதன கவிவாணர்களும் காவிய இதிகாச கர்த்தாக்களும் இமயத்தைச் சிறப்பித்துக் கூறினர். அதன் பவித்திரமான தன்மையை வலியுறுத்த பார்வதிதேவியின் தந்தையாகவும் கைலயங்கிரியின் இருப்பிடமாகவும் இமயத்தை வர்ணித்தனர். பஞ்ச நதிகளின் உற்பத்தி ஸ்தானமாகிய இமயத்தின் சாரலில் தான் இதிகாசங்களும் ஜனித்தன. அவதார புருஷர்கள் தோன்றியதும் அவர்களது ஆச்சரியகரமான சாகஸச் செயல்கள் நிகழ்ந்ததும் அகில உலகிலும் அருள் ஒளிபரப்பிய மகான்கள் தோன்றியதும் இமயத்தின் நிழலில் தான். இவைகளை முன்னிட்டு, சரித்திர முற்காலத்திலிருந்து, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, சமய நூல்களிலும் தத்துவ ஞானிகளின் சிந்தனையிலும் மகாகவிகளின் கற்பனையிலும் இமயம் ஒரு அலாதியான முக்கியத்துவம் பெற்று விளங்குவதை நாம் காண்கிறோம். இன்றைக்குச் சரியாக 2581 ஆண்டுகளுக்கு முன்னால் அன்புத் தெய்வமான புத்தர்பிரான் அவதரித்ததும் இதே இமயத்தின் சாரலில்தான்.

இமயமலைப் பிரதேச சிற்றரசுகளில் ஒன்றான கபிலவஸ்துவில் குறுநில மன்னன் சுத்தோதனரின் அருமைப் புதல்வராக வைகாசி மாதப் பௌர்ணமியில் சித்தார்த்தர் என்ற புத்தர் அவதரித்தார். அவரது ஜயந்தியைச் சாதாரணமாக வைகாசி விசாகத்தில்தான் கொண்டாட வேண்டுமென்றாலும் சந்திர மாதக் கணக்கின்படி இவ்வருட விசாக் பண்டிகை சித்திரா பௌர்ணமியிலேயே அனுஷ்டிக்கப்படுகிறது. மே 2, 3-ம் தேதிகளில் உலகெங்கிலுமுள்ள பௌத்தர்கள் விசாக் திருவிழாவை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள்.


விசாக் பண்டிகை பௌத்தர்களுக்கு மும்முறை புனிதம் வாய்ந்தது. புத்தர் பிரான் பிறந்ததும் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் கயை க்ஷேத்திரத்தில் போதி விருக்ஷத்தின் நிழலில் கடுந்தவமிருந்து, ஞானோதயம் பெற்றுப் போதி சத்துவராகியதும், அதன் பிறகு தமது எண்பதாவது வயதில் நேப்பாளத்திலுள்ள குசி நகரில் பரிநிர்வாணமடைந்ததும் விசாக பௌர்ணமியில்தான். இவ்விதம் மும்முறை புனிதம் பெற்ற விசாக பௌர்ணமிக்கு இலங்கையில் சரித்திர ரீதியாக இன்னொரு விசேஷமும் உண்டு.

குசி நகருக்கு இறுதி யாத்திரை சென்று பூத உடலைத் திரஸ்கரிப்பதற்குத் தயாராக பிக்ஷு ஆனந்தர் விரித்த படுக்கையிலே படுத்த புத்தர் அதே நேரத்தில் இலங்கையில் ஒரு விசேஷம் நடப்பதைத் தமது ஞான திருஷ்டியினால் அறிந்தாராம். தேவர்களுக்கெல்லாம் தேவனான சக்கிரதேவனை மனத்தில் அவர் ஸ்மரிக்க அந்தப் பரம புருஷன் புத்தருக்குத் தரிசனம் அளித்தார்.

''சக்கிர தேவா! விஜயனும் அவனுடைய 700 சகாக்களும் இலங்கையில் போய் இறங்குகிறார்கள். அவர்களை ரட்சிப்பாயாக. இலங்கையில் அடுத்த 5000 ஆண்டுகள் வரையில் எனது சித்தாந்தம் சிறப்புடன் செழித்திருந்து அகிலத்துக்கெல்லாம் அருள் ஒளி பரப்பப் போகிறது. அந்த தர்மத்வீபத்தை ரக்ஷிப்பாயாக.'

இவ்வாறு புத்தர் பிரார்த்திக்கவே சக்கிர தேவன் விஜயனையும் இலங்கையையும் ரக்ஷிக்கும் பொறுப்பை உபலவன் (நீல நிறமுடையவன்) என்ற தேவனிடம் ஒப்படைத்ததாயும், அன்றுமுதல் இலங்கைத் தீவு உபலவன் பாதுகாப்பிலிருந்து வருவதாயும் ஐதீகம். சக்கிர தேவனை இந்திரனென்றும் சக்கிராயுத தாரியான ஸ்ரீமந் நாராயணனென்றும், நீல நிறமுடைய உபலவன் என்ற தேவனை நீலமேக சியாமள வர்ணனென்று வர்ணிக்கும் மகாவிஷ்ணுவென்றும் கருதுவர். இன்றைக்கும் இலங்கையிலுள்ள சகல பௌத்த ஆலயங்களிலும் விஷ்ணுவின் உருவச் சிலையிருந்து வருவதோடு அச்சிலையைப் பௌத்தர்கள் அசாதாரணமான பயபக்தியுடன் வழிபடுவது இதற்கு ஒன்று சான்று. ஆசார அனுஷ்டான





மின்றி விஷ்ணு சிலையிடம் நெருங்க எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. தென்னிலங்கையின் ஆகக்கோடியிலுள்ள தேவேந்திர முனை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் மகா விஷ்ணுவுக்குப் பிரத்தியேகமான ஒரு புராதன ஆலயமும் இருக்கிறது.

சிங்கள வம்சத்தின் ஆதிமுதல்வன் தான் விஜயன் என்பவன். சிங்கபுரத்தின் சித்திரசஷனை சிங்கபாகுவின் பிள்ளை இவன். விஜயனும் அவனுடைய 700 சகாக்களும் பாரதத்திலிருந்து தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு மரக்கலத்தில் ஏறி இலங்கைக்கு வந்தனர். அவர்களுடைய வழித்தோன்றல்களே இன்று சிங்களவர் எனப்படுவோர். அந்த விஜயன் இலங்கையில் அடியெடுத்து வைத்தது புத்தர் பிரான் பரிநிர்வாண மடைந்த விசாக பௌர்ணமியாதலால் வைகாசி விசாகம் மதரீதியாக மட்டுமின்றி, சரித்திரரீதியாகவும் இலங்கை பௌத்தர்களுக்கு விசேஷத் தினமாகக் கருதப்பட்டு வருகிறது.


கி. மு. ஆறும் நூற்றாண்டு இந்திய சரித்திரத்தைப் பற்றி ஆதாரபூர்வமான தஸ்தாவேஜுகள் இல்லையென்பது யாவரும் அறிந்த விஷயம். கி. மு. ஆறும் நூற்றாண்டில் பிம்பிஸாரனும் அவன் மகன் அஜாத சத்துருவும் அரசிருந்த காலம்தான் புத்தரும் மகாவீரரும் வாழ்ந்த காலம். அன்று ஆரிய வர்த்தத்தில் அரசிருந்தவர்களுக்கும் குடியிருந்த மக்களுக்கும் விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள தக்ஷிண பாரதத்தைப் பற்றி அதிகம் தெரியாது. புத்தர் தமது ஜீவிய காலத்தில் விந்தியமலைக்குத் தெற்கே வந்ததாக எவ்வித ஆதாரங்களும் இல்லை பாரதத்தை விட்டு அவர் வெளியே சென்றது கிடையாதென்பதை இலங்கை சரித்திர ஆராய்ச்சியாளர்கள் உள்படச் சரித்திர மேதைகள் அனைவருமே ஒருமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும் புத்தர் தமது வாழ்நாளில் மும்முறை இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதாக இந்நாட்டின் புராதன சமய நூல்களில் காணக்கிடைக்கிறது. முதன் முறையாக அவர் விஜயம் செய்தபொழுது ஸ்ரீ பாதமலையில் தமது அடிச்சுவட்டைப் பதிய வைத்துப் போனதாக ஐதீகம்.

புத்தர்பிரான் தமது ஜீவியகாலத்தில் மும்முறை இலங்கைக்கு விஜயம் செய்ததாகக் கூறும் பாளி வரலாற்று நூல்கள் முதல் விஜயத்தின் பொழுது சமணகூட பர்வதம் எனப்படும் ஸ்ரீபாதமலைக்கும் மஹியங்கனைக்கும் விஜயமளித்ததாகத் தெரிவிக்கின்றன. எனவே இலங்கை பௌத்தர்களுக்கு மிக மிகப் புனிதமானவை இவ்விரு ஸ்தலங்களுமே யாகும். புத்தரின் இரண்டாவது இலங்கை விஜயத்தைப்பற்றிய வரலாறு 2500 ஆண்டுகளுக்கு இங்கு தமிழர் ஆட்சியும் நாகரிக கலாசாரப் பண்பாடுகளும் எவ்வளவு உன்னதமான நிலைமையில் இருந்தன என்பதைக் காட்டுவதாயிருக்கின்றன. இரு நாகர் மன்னர்களுக்கிடையில் நவரத்தின சிம்மாசனம் ஒன்று சம்பந்தமாகக் கடும் போர் நிகழ்ந்திருந்ததாயும் அவர்களுக்கிடையில் சமாதானம் செய்து வைப்பதற்காகப் புத்தர்பிரான் இங்கு வந்ததாயும் கூறப்படுகிறது. நாகர்களைப் பாளி வரலாற்று நூலாசிரியர்கள் காட்டுமிராண்டி ஜனங்களாகவும் இராவணனின் சந்ததியார்களாகவும் வர்ணித்த பொழுதிலும் நவரத்தின சிம்மாசனத்திலிருந்து அரசாட்சி செய்தவர்களின் நாகரிகம் உச்ச நிலையில் இருந்தன.

நாகர் என்ற தமிழரின் ஆட்சி நாகத்வீபமென்ற வட இலங்கையில் மாத்திர மன்றி, தென்னிலங்கையிலும் வியாபித்திருந்ததை, புத்தர்ன் மூன்றாவது விஜயம் அறிவுறுத்திக் காட்டுகிறது. இன்று களனி என்று அழைக்கப்படும் கல்யாணி நகரம் புராதன இலங்கையில் நாகரிகத்துக்கு உறைவிடமாயிருந்தது. இதுவே இராவணனின் தலைநகரமாயிருந்ததென்றும் கூறுவர். புத்தர் காலத்தில் மாணிக்க ரட்சிதன் என்ற நாகர் மன்னன் இங்கு அரசோச்சி வந்தான். விபீஷணரின் நேரடிச் சந்ததியைச் சேர்ந்தவனென்று கருதப்படும் மாணிக்க ரட்சிதன் வேண்டுகோளுக்கிணங்க புத்தர் பிரான் மூன்றாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்து கல்யாணி நகரில் பல லட்சம் நாகர்களுக்கு உபதேசம் செய்ததாக ஐதீகம்.

சாம்ராட் அசோகன் காலத்திலேயே முதன் முதலாகப் பௌத்த சமயம் இலங்கையில் வேரூன்றிய தென்றாலும், வட பாரதத்தில் ஏற்பட்டு வந்த சமயப் புரட்சிக்கு இலங்கையிலும் எதிரொலிகள் கிளம்பின என்பதை அறிவுறுத்தும் இலட்சியமாகவே புத்தர் மும்முறை இங்கு விஜயம் செய்ததாகப் பாளி நூலாசிரியர்கள் எழுதி வைத்திருக்கலாம். இது எப்படியிருந்தாலும் பாரதத்தில் ஜனித்த பௌத்த தத்துவங்களைப் பல நூற்றாண்டுகளாக, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக ஈழத் திருநாடு போற்றிப் பாதுகாத்து வருவதை இன்று நாம் காண்கிறோம். பௌத்த தர்மத்தைப் பெயரளவில் மட்டுமின்றி அரசியல் சமூகம் பொது வாழ்விலும் சிங்களப் பெருமக்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் தர்மத்வீபம் என்று சரித்திரத்தில் இடம் பெற்ற இலங்கை உண்மையிலேயே தர்மத்வீபமாகவும் உலகுக்கு அருள் ஒளி காட்டும் என்பதில் சந்தேகமில்லை.



சிடுசிடுக்கும் சிறுவன்!

அவனைக் கோபிக்காதீர்கள் — உண வில் அவனுக்குப் போதுமான அளவு வைட்டமின்கள் கிடைக்கவில்லை போலும். எலும்புகளையும் அவயவங் களையும் வளரச்செய்ய அநேக குழந்தைகளுக்கு அதிகப்படி வைட்டமின்கள் தேவை.

பெரியவர்களுக்குக்கூட அதிகப்படி வைட்டமின்கள் தேவை. ஆகையால் உங்களுடைய குடும்பத்தாருக்கு மல்டிவைட் கொடுத்து, வைட்டமின் குறைவு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மல்டிவைட் பசியை உண்டாக்கி, பலமின்மையை ஒழித்து தொத்து வியாதியைத் தடுக்கும் சக்தியை வளர்க்கிறது.



உங்களுடைய டாக்டரைக் கேளுங்கள்!

மல்டிவைட் மாத்திரைகளைச் சாப் பிடுவதே ஒரு சுகம்! அவைகள் ருசிகரமான முறையில் சாக்லெட்— கோட் செய்யப்பட்டிருக்கின்றன.

30 மாத்திரைகளும் 60 மாத்திரை களும் கொண்ட பாட்டல்களில் எல்லா மருந்து வியாபாரி களிடமும் கிடைக்கும்.

ஞாபகமிருக்கட்டும் **மல்டிவைட்** உங்களை ஆரோக்கியமாக இருக்கும்படி செய்கிறது.

BDH

பிரிட்டிஷ் ட்ரக் ஹவுஸஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.

தபால் பெட்டி 1341, பம்பாய்-1



இது என்ன நீதி!

ஏப்ரல் 20ந் தேதி "கல்கி" இதழில் 'கைத்தறியும் கண் துடைப்பு உதவியும்' என்னும் தலையங்கத்தையும், 'பானை நிறையுமா?' என்னும் கார்ட்டூனையும் நான் கண்டதும் என் உள்ளம் குமுறி எழுந்தது. கால் வயிற்றுக் கஞ்சிக்குக் கதறி அழும் அந்த ஏழை நெசவாளியை இந்த 'மக்களை மக்களால் மக்களுக்காக ஆளப்படும் ஆட்சி' பழைய நிலையிலேயே தெருவிலே நின்று கண்ணீர் விடச் சொல்கிறது! இது என்ன நீதி?

காவனிபாளையம்
18–4–'58 கலை அன்பன்

குறை நீங்குமா?

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பென்ஷன் மாத்திரமன்றி, இன்ஷ்யூரன்ஸ், பிராவிடண்டு நிதி முதலிய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த நல்ல முறை அமுலுக்கு வருமுன் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டவர்களுக்கு இவ்வித வசதிகள் இருந்ததில்லை. அவர்கள் குறைந்த சம்பளத்திலிருந்தவர்கள்; பென்ஷனும் மிகக் குறைவு. அவர்களது தற்போதைய நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாக இருக்கிறது. பென்ஷனுடன் அவர்களுக்குத் தாராளமாகப் படி கொடுக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் மாதம் ஒன்றுக்கு ரூ. 6. பென்ஷனர்களுக்கு அதிகம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் உத்தியோகத்திலிருப்பவர்களுக்குக் கொடுப்பது போல் கிராக்கிப்படி ஒன்றும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. விலைவாசிகள் நான்கு அல்லது ஐந்து மடங்கு உயர்ந்துள்ள இக்காலத்தில் பழைய பென்ஷனர்கள் கஷ்டமில்லாமல் வாழ்க்கை நடத்துவது சாத்தியமா?

சென்னை-4
17–4–58 என். சுப்பிரமணிய சர்மா

கடன் உதவி!

அரசியலார் பரதவர்களின் பொது நன்மையைக் கருதிப் பெரும் நிதியை ஒதுக்கி, பரதவர் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம், அவர்களுக்கு நீண்டகாலக் கடனுதவி அளித்து வருவது பாராட்டத்தக்கதாகும். எனினும், அரசியலாரின் நல்ல எண்ணத்துக்கு மண்ணைத் தூவும் வண்ணம், பரவலாகக் கடற்கரையோரக் குப்பங்களை யொட்டிய கூட்டுறவு ஸ்தாபனங்களில் தனிப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் நீண்டகாலக் கடன் உதவிகள் உபயோககரமான அளவில் செயல்படவில்லை. பரதவர்களின் நன்மையையே முக்கிய நோக்கமாக அரசாங்கம் கொண்டால் அவர்களுக்கு அளிக்கப்படும் கடன் உதவிக்குப் பதில், அவர்களுக்கு வேண்டிய கட்டுமரங்கள், பாய் மரத்துணி, வலைக்குரிய நூல்கள் போன்ற மீன்பிடித் தொழிலுக்கு வேண்டிய உபயோகப் பொருள்களைக் கூட்டுறவு அடிப்படையில் வாங்கி உதவ முன் வருவதுதான் சாலச் சிறந்தது.

சென்னை-13
12–4–58 ம. செல்வராஜன்

வாழ முடியுமா?

விவசாயிகளுக்கு மாடு வாங்குவதற்காகச் சர்க்கார் பத்து வருஷக் கெடுவில் கடன் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி நானும் எனது தகப்பனாரும் 22–3–57ல் குளித்தலை 'ஸ்பெஷல் லோன்' தாசில்தார் அவர்களுக்கு மாடு வாங்குவதற்காக ரூபாய் இரண்டாயிரத்துக்கு மனு கொடுத்திருந்தோம். 1–6–57 வரையிலும் எவ்வித உத்தரவும் இல்லை. மறுபடியும் குளித்தலை தாசில்தாருக்கு எழுதினோம்! அதற்கும் பதில் இல்லை. மேற்படி விவரங்களைக் குறிப்பிட்டு 19–10–57ல் சென்னை முதன் மந்திரிக்கும் எழுதினோம். பலனில்லை. இந்தமாதிரி ஏழை விவசாயிகளுக்கு வருஷக் கணக்கில் கடன் தரத் தாமதம் செய்தால் அவன் எப்படி வாழ முடியும்?

வீரராக்கியம்
16–4–58 என். சந்தனம் பிள்ளை


விந்தையான வினாக்கள்

சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் கணக்குப் பரீட்சையில் சில விந்தையான வினாக்கள் கேட்கப்பட்டிருந்தன. அவ்வினாக்கள் மாணவர்களின் சிந்தையைக் குழப்பித் தேர்வைச் சரிவர எழுத இயலாமற் செய்து விட்டது. பெரும்பாலான மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இவ்வினாத் தாளால் பாதிக்கப்படும்.

1. "ஒரு லேவாதேவிக்காரன் ஒரு மாதத்துக்கு ஒரு தம்பிடிக்குத் தம்பிடி வட்டி வாங்கினால் ஆண்டொன்றுக்கு வட்டியின் சத விதம் என்ன?" இக் கேள்வி எவ்வளவு விந்தையானது? தம்பிடிக்குத் தம்பிடி வட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்கள் இன்னமும் நம் நாட்டில் வாழ்கிறார்களா? அது மாதத்துக்கு இந்த வட்டி என்றால் வருடத்துக்கு 1200 சதவீதமல்லவா வட்டி? இம்முறையில் வட்டிக்குக் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் எவ்வளவு பேர்கள் இந்நாட்டில் உள்ளனர்? அரசாங்கம் நடத்தும் தேர்வுத் தாளில் இவ்வினா அமையலாமா? இவ்வினாவால் மாணவனின் மனத்தைக் குழப்புவதன்றி வேறு பயன் என்ன? சிந்தித்தார்களா தேர்வாளர்கள்? இதுபோல் மற்றும் பல விந்தைக் கணக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக, இக்கணக்குத் தேர்வில் பல மாணவர்கள் சரியாக எழுதவில்லை. ஓராண்டு முழுவதும் கற்ற கல்வி ஒரு சில வினாக்களால் பாழாக்கப்பட்டு விட்டதே எனப் பல மாணவர்கள் திகைக்கிறார்கள். தேர்வாளர்கள்

மேஜை



இந்நிலையைச் சிந்தித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

வெற்றியூர்
12—4—'58

நடனம்

நாய்க்கடி மருந்து

கோடை காலமாகிய ஏப்ரல், மே மாதங்களில் வெய்யிலின் காரணமாகத் தெருக்களில் உலவும் நாய்களுக்குப் பைத்தியம் பிடித்து மனிதர்களையும், மிருகங்களையும் கடித்து விடுகின்றன. அதற்கு உடனே "ஆண்டிராபிட் ஸீரம்" என்ற ஊசி பதின்மூன்று போட்டுக் கொள்ளாவிடில் உயிர் துறக்க நேரிடும். இம் மருந்தின் ஊசியைச் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இலவசமாகப் போட்டுக் கொள்வதற்கு வாய்ப்பு இருந்தும், அவர்கள் அம்மருந்தைத் தருவிக்கச் சில சமயங்களில் ஒரு மாதம்கூட ஆகி விடுகிறது. நாய் கடித்தவுடன் குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்த ஊசியைப் போட்டுக் கொண்டால்தான் அதனால் பயன் உண்டு. ஆகவே சர்க்கார் மருந்து தேவைப்படும் ஆஸ்பத்திரிகளுக்குக் காலதாமதம் இல்லாமல் அனுப்பி உதவி புரிவார்களாக!

மாதிரிமங்கலம்
17—4—58

ஆர். முத்துகிருஷ்ணன்

சிறிய வியாபாரிகள் கஷ்டம்

சிறிய வியாபாரிகளில் பலர் அதிகமாகப் படித்தவர்கள் அல்ல. அவர்கள் தங்களை அறியாமலே செய்த சிறு பிழைகளைப் பிரமாதப்படுத்தி, உதவி விற்பனை வரி அதிகாரிகளில் சிலர் வியாபாரிகளை வற்புறுத்தியும், வரி கட்டத்தவறியவர்களைச் சொத்துகள் இருந்தால் ஜப்தி செய்தும், வரி கட்ட இயலாதவர்களைச் சிறையில் அடைக்கவும் நடவடிக்கை எடுக்கிறார்கள். எத்தனையோ நாணயமுள்ள வியாபாரிகள், தாங்கள் வரி கட்ட இயலாமல் சிறை சென்றிருக்கிறார்கள்.

இந்தக் கஷ்டங்களையெல்லாம் உணர்ந்து, டாக்டர் லோகநாதன் நல்லதொரு அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்தார். ஆனால், ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற மாதிரி, பத்தாயிரத்துக்குமேல் விற்பனை இருந்தால் வரி யுண்டு என்று இருந்ததை இப்போது ஐயாயிரத்துக்கே கொண்டு வந்து விட்டார்கள். இவ்விஷயமாக வரப்போகும் மசோதா, சிறிய வியாபாரிகளுக்கு மிகுந்த பாதகத்தை விளைவிக்கும். இவைகளை செலக்ட் கமிட்டி, தீவிரமாக ஆலோசனை செய்து, சிறிய வியாபாரிகளுக்கு நிவாரணம் அளிக்க முன்வரவேண்டும்.

திருப்பரங்குன்றம்
18—4—'58

டி. ராமசுப்பு

சங்கீத நிகழ்ச்சி!

சனிக்கிழமைதோறும் டில்லி ஆகாசவாணியிலிருந்து கேட்கப்படும் அகில பாரத சங்கீத நிகழ்ச்சியில் ஹிந்துஸ்தானிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சி ஆரம்பமான வருடம், மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு ஒரு தடவையாவது கர்நாடக சங்கீதக் கச்சேரி நடந்தது. கடந்த மூன்று மாதங்களாகப் பிரதி வாரமும் ஒரே நிகழ்ச்சியே நடைபெறுகிறது. தென்னாட்டிலிருந்து கலைஞர்களைத் தில்லிக்குத் தருவிக்க வேண்டாம் என்று இருக்கிறார்களா?

ஜபல்பூர்
20—4—58

ஆர். எஸ். மணி

குழந்தைகள் பலி!

சென்னையில், குறிப்பாக, திருவல்லிக்கேணியில் தெருவுக்கு ஒன்று அல்லது இரண்டு பால் டிப்போக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் மாலை பள்ளியிலிருந்து வீடு திரும்பும் குழந்தைகள், மாலை டிப்போக்களில் பாலைக் கறந்துவிட்டு எதிர்நோக்கிச் செல்லும் எருமைகளின் ஆர்ப்பாட்டங்களுக்கு இலக்காக வேண்டியிருக்கிறது. பதினைந்து வருடங்கள் புத்திரப்பேறில்லாமல் பத்ரிநாத்துக்குப்போய் வந்தும் பல அரிய தவங்கள் செய்தும் பெற்ற என் ஒரே மகன் பத்ரிநாராயணனும், என் வீட்டுக்கு இரு வீடுகள் தள்ளி ஒரு சகோதரியின் நான்கு வயதுப் பெண் மல்லிகாவும் எருமையினால் இறந்து விட்டார்கள்.

சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோரிக்ஷா, டாக்ஸியினால் உயிர்ச் சேதம் ஏற்பட்டால் மனிதனைக் கொண்டு போய்க் கைதிக் கூண்டில் நிறுத்தலாம். எருமையை எந்தக் கைதி கூண்டில் நிறுத்துவது? நிறுத்தினால் மாண்ட மதலைகள் மீண்டுவரப் போகிறார்களா? எனவே, திருவல்லிக்கேணி தெருக்களில் எருமை ஆர்ப்பாட்டங்களை அறவே நீக்கச் சென்னை நகர சபை முன்வர வேண்டும்.

திருவல்லிக்கேணி
5—4—58

கே. ராஜேஸ்வரி
எல். லலிதா

பஸ் வசதி வேண்டும்

ஓடைப்பட்டி கிராமம், மதுரை மாவட்டத்தில், சின்னமனூரிலிருந்து ஐந்து கல் தூரத்தில் இருக்கிறது. அந்த ஊருக்கு மாட்டு வண்டியில் செல்ல வேண்டும் அல்லது நடந்துதான் செல்ல வேண்டும். இதற்கிடையில் எங்கள் ஊருக்கும் சின்னமனூருக்கும் இடையே ஒரு சிறு காடு இருக்கிறது. அவ்விடத்தில் திருடர்கள் பயமோ அதிகம். சொற்பப் பணம் கொண்டு செல்வோர் கூட இரண்டு மூன்று துணை ஆட்களுடன் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்படிச் சென்றும் எத்தனையோ பேர் வழிப்பறிக்கு ஆளாகி அவஸ்தைப் பட்டிருக்கிறார்கள். இக் கஷ்டங்களை எத்தனையோ முறை மாவட்ட போர்டாருக்குத் தெரிவித்தும் கவனிப்பாரில்லை. இனியாவது எங்கள் ஊர் மீது அனுதாபம் காட்டி, பஸ் வசதி செய்வார்களா?

ஓடைப்பட்டி
10—4—58

குல காமராசன்



28

ஒழுக்கத்தினால் வரும் மேன்மையும் அதிகம். அதை இழந்தால் அதனால் வரும் பழியும் மிகப் பெரிது.

ஒழுக்கத்தின் எய்துவர்
   மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்
   பழி.

சொத்தைக் காப்பாற்றுவதில் நன்மை உண்டு. மகிழ்ச்சி உண்டு. இழந்து விட்டாலோ துயரம் அதை விட அதிகம். இருந்தபோது அடைந்த சுகத்தை விட இழந்ததினால் உண்டாகும் துக்கம் பெரிதாகும். அதுவே போல் ஒழுக்கமும். மேன்மை அடைவதிலும் அதைக் காப்பாற்றிக் கொள்ளுவதிலும் மனிதனுக்குள்ள இயற்கை ஆசை ஒரு புறமிருக்க, அதை விட ஒழுக்கம் தவறினால் உண்டாகும் பழியும் துயரமும் மிகப் பெரிது என்பதை உணர்ந்து அந்தப் பயத்தினால் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள் என்கிறார்.

• • •

பல கற்று என்ன பயன்? ஒழுக்கம் தவறி உலகம் பழிக்கும் காரியங்கள் செய்தாயானால் உன் படிப்பு ஒரு காசுக்கு உதவாது. கல்வி பெறாத பாமரனுக்குச் சமானமாவாய் என்று கல்வி கற்றவர்களுக்கு உறுத்தும்படி சொல்லுகிறார்.

உலகத்தோடு ஒட்ட
   ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா
   தார்.

ஒழுக்கமே பெருங் கல்வி. அதைக் கற்காமல் பிற கல்வி கற்று என்ன பயன்? அறிவு என்பது வேறு, கல்வி என்பது வேறு. கல்வி கற்றாலும் அறிவு இல்லையானால் ஒழுக்கத்தைக் கவனிக்க மாட்டாய் என்கிறார். அறிவு அடைந்தாயானால் ஒழுக்கத்தைக் கவனிப்பாய் என்கிறாய்.

ஒழுக்கத்துக்கு வேண்டியது அடக்கம். புலன்களை அடக்கி ஆளவேண்டும். அதுவே நடத்தையையும் ஆசாரத்தையும் நெறி தவறாமல் பாது காக்கும். நூல்களைப் படித்து அடையும் புலமையில் ஒரு பயனுமில்லை, உன் வாழ்க்கையில் ஒழுக்கம் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் இல்லையானால்.

• • •

சாஸ்திரம் ஓதியும் பெரியோர்கள் சொல்லும் உபதேசங்களைக் கேட்டும் அறிவு அடைந்த ஒருவன் ஏன் பாபங்கள் செய்கிறான்? பலாத்காரமாக இழுக்கப் பட்டுப் போவதுபோல் மனிதன் ஏன் பள்ளத்தில் வீழ்கிறான்?— என்று அருச்சுனன் கண்ணனைக் கேட்டான்.

"ரஜோ குணத்தினின்று தோன்றும் காமம், குரோதம் இவையே மனிதனைக் கெடுப்பது. அந்த ரஜோகுணமே மனிதனுக்குச் சத்துரு. அந்தச் சத்துருவுக்கு உன் புலன்களிலாவது மனத்திலாவது இடம் கொடுக்காதே. மனத்தை அடக்கி அந்தப் பகைவனை வெல்வாய்" என்றான் கண்ணன்.

இதையே வள்ளுவர் பிறன் இல் விழையாமை, பொறையுடைமை என்றும், லோபத்தால் உண்டாகும் குற்றங்களை அகற்ற அழுக்காறாமை, வெஃகாமை என்றும் நான்கு அதிகாரங்களில் உபதேசிக்கிறார்.

பிறனுக்கு உரிமைப்பட்ட பெண் ஒருத்தியை விழைதல் என்ன மடமை! அது தருமம் ஆகாது. விவேகமும் ஆகாது. வாழ்க்கைக்கு வேண்டிய சாதாரண அறிவு இருந்தாலும் போதும், பிறர் மனைவிகள்பால் மனத்தைச் செலுத்தாமல யோக்கியமாகவும் சுகமாகவும் வாழ்க்கை நடத்துவதற்கு. ஒழுக்கத்துக்கு மாறான இச்சைக்கு இடம் தருதல் பேதைமையாகும்.

பிறன்பொருளாள் பெட்(டு)ஒழுகும்
   பேதைமை ஞாலத்து
அறம் பொருள் கண்டார்கண்
   இல்.

பிறனுடைய பொருளானவளை அதாவது பிறனுடைய மனைவியை, பெட்டு— காதலித்து, அந்தக் காதலால் தூண்டப்பட்டுக் குற்றத்துக்கு ஆளாகுதல் பேதைமையல்லவா? உலகத்தில் அறத்தை ஆராய்ந்தவர்கள் இந்தப் பேதைமையில் சிக்கிக் கொள்ளவே மாட்டார்கள். 'அறம் பொருள் கண்டார்கண்' என்பதில் 'பொருள்' என்றால் உலக சுக வாழ்க்கைக்கு வேண்டிய விவேகம். அதை மட்டும் அடைந்தவர்கள் கூட இந்தக் குற்றத்தில் விழுந்து துயரப்பட மாட்டார்கள். இந்தக் குற்றத்தை விட்டுத் தூர நிற்பதற்கு வேதாந்த ஞானம் வேண்டியதில்லை. வாழ்க்கையில் சுகம் தேடும் விவேகம் மட்டும் இருந்தாலே போதும்.


'பிறன் பொருள்' ஆனவள் என்பது பிறன் காதலுக்கு உரிய பொருளானவள் என்று கொள்ள வேண்டும். மனைவியானவள் புருஷனுடைய அடிமை அல்லது சொத்து என்பதல்ல இதன் பொருள். காதலுக்கு உரிய பொருள் என்பதே கருத்து. விலைக்கு வாங்குவதும் விற்பதுமான பொருள் அல்ல; அன்புக்கு உரிய பொருள்.

ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் பல வித பாபங்கள் செய்கிறார்கள். இப்படி நெறி தவறிச் செய்பவர்கள் எல்லாரிலும் பிறன் மனைவியை விழைந்து அந்தக் குற்றத்தில் சிக்கி அலையும் மனிதன் பெரிய மடையன் என்கிறார் முனிவர்.

அறன்கடை நின்றாருள்
எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார்
இல்.

அறன் கடை நின்றாருள்—அறநெறி தவறியவர்களுள். பிறன் கடை நிற்பது—மற்றொருவனுடைய வீட்டுக்குள் நுழையப் பார்த்துக் காப்பது; அவன் மனைவியை விரும்பி அவளை அடைய வழி தேடுவது.

இத்தகைய ஆசையிலும் முயற்சியிலும் இன்பம் இல்லை. பயமும் பழியும் தண்டனையும் தான் விளைவு. ஆகையால் அது மடமையாகும். இந்தக் குற்றத்தினால் விளையும் அவமானம் பிற குற்றங்களில் அடைவதைக் காட்டிலும் அதிகமானது.



வஞ்சிக்கோட்டை வாலிபன்

மலை போல் மோதும் அலைகள், அலைகளை அலைக்கழிக்கும் புயல், புயலில் தத்தளிக்கும் மரக்கலம், மரக்கலத்தில் தவிக்கும் மனிதர்கள், அவர்களைக் கடைசி நிமிஷத்தில் காத்த தீரமிக்க வாலிபன் — அவன்தான் வஞ்சிக் கோட்டை வாலிபன்

புயலோடு போராடி, பாய் மரத்தில் ஏறிப் பாயைச் சாகஸத்துடன் வெட்டியெறிந்து வாலிபன் சுந்தரம் அமைதியை ஏற்படுத்தின பிறகுதான் நாமும் தியேட்டர் நாற்காலியில் அமைதியாக அமர்கிறோம்.

சுந்தரத்துக்குக் கப்பல் தலைவன் அளித்த ஏராளமான திரவியத்தைக் கொண்டு அவன் தன் தங்கை கௌரிக்கு ஆடையாபரணங்களைப் பூட்டி அவளை நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்க முயலும்போது வஞ்சிக் கோட்டைச் சேனாபதி கௌரியின் அழகில் மயங்கி அவளைத் தூக்கிச் சென்று கெடுக்க முயல்கிறான். அவள் உயிர் துறந்து கற்பைக் காத்துக் கொள்கிறாள். சுந்தரம் சேனாபதியைப் பழி வாங்கச் சபதம் பூண்டு சமயம் பார்த்து அரண்மனைக்குச் செல்கிறான். சேனாபதி தன் வீரர்களைக் கொண்டு அவனைக் கைது செய்து பைத்தியம் என்று ராஜ சபையில் குற்றம் சாட்டி ஆயுள் தண்டனை விதித்துத் தீவுச் சிறைக்கு அனுப்புகிறான்.

படம் ஜெமினியின் மகத்தான சித்திரம் என்பதை ஒவ்வொரு காட்சியும், காட்சி ஜோடனைகளும் ருசுப்பிக்கின்றன. அலை கடலில் காணப்படும் தீவுச் சிறைச்சாலை உண்மையிலேயே மெய் நடுங்க வைக்கிறது. சிறைச் சுவரைப் பெயர்த்துக் கொண்டு வரும்

காந்தன்

பெற்ற தாயின் பாசமும், அந்தப் பாசத்தை உணர்ந்த சிறிது நேரத்தில் அம்மாசற்ற மாதரசி உயிர் துறப்பதும், அன்னையை இழந்த மகனின் தாங்கொணாச் சோகமும் எப்படிப்பட்ட கல் மனத்தையும் கரையச் செய்யுங் காட்சியாகும்.

தீவுச் சிறைச் சாலையிலிருந்து தப்பிய வாலிபன் சுந்தரம் சமுத்திரத்தில் வெகுதூரம் நீந்திச் செல்லுகையில் ஒரு மரக்கலத்தைக் கண்ணுற்று, அபயக் குரல் கொடுத்து உதவி பெறுகிறான்

திரைக் கதையின் வேகத்தைத் துரிதப்படுத்துவதற்கு வாலிபனின் வாழ்வில் காதல் விரைவிலேயே ஆரம்பமாகி விடுகிறது. தீவு அரசன் மகள் மந்தாகினி அவன் வாழ்வில் குறுக்கிடுகிறாள்; வெருட்டுகிறாள்; சாகஸ நடனங்களுடன் காதலிக்கிறாள். வாலிபன் சலனம் இல்லாமல் இருக்கிறான்.

காதலிக்கும் பெண்ணொருத்தி தன் காதலில் தோல்வி யடைந்தால் ஒன்று உள்ளம் குமுறி எரிமலையாக மாறி விடுவாள். இன்றேல் ஒரேயடியாக நெகிழ்ந்து உருகிப் போவாள். காதலில் தோற்றவள் எரிமலையாகிக் காதலனுக்கு எதிராகக் கனலை உமிழ்வதை எத்தனையோ படங்களில் கண்டிருக்கிறோம். ஆனால் உள்ளம் நெகிழ்ந்து அவனுக்கு உதவும் அளவுக்கு வந்த பேதைப் பெண்ணைக் காண்பது அரிது.

இந்தக் கடினமான பாத்திரத்தை, மந்தாகினி பாகத்தை, தமிழ், ஹிந்தி இரண்டு திரைவானங்களிலும் சுடர்விடும் நட்சத்திரமான வைஜயந்திமாலா ஏற்று நடிக்கிறார்.

வைஜயந்திமாலா இப் படத்தில் நடிக்கிறார் என்று அறிந்ததும் அடுக்கடுக்கான நடன நிகழ்ச்சிகளும் துடுக்கும் மிடுக்கும் நிறைந்த சம்பாஷணைகளும், கண்ணையும் கருத்தையும் கவரும் ஆடை, அணிகலன்களும் வனப்பும் வசீகரமும் கொண்ட அவரது விதம் விதமான தோற்றங்களுமே என் நினைவில் எழுந்தன. ஆனால் வைஜயந்தி,

முதலில் வாலிபனை அதட்டுவதும் அடக்குவதுமாக இருந்தாலும் பிற்பகுதியில் உணர்ச்சி பொங்க நடித்துப் படம் பார்ப்பவர்களையெல்லாம் உருக்கி விடுகிறார்.

ஜெமினி கணேசனுக்கு ஏற்ற பாகம் வஞ்சிக்கோட்டை வாலிபன்.

தங்கையை இழந்து கதறியது, தாயைக் கண்டு மகிழ்வடைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவளை இழந்து அலறியது ஆகிய கட்டங்களில் நன்றாய் நடித்திருக்கிறார்; நகை வியாபாரியாக வந்து சேனாபதியை ஏமாற்றி, தந்தை சொக்கலிங்க நாவலரை விடுதலை செய்தபோது அவர் நடிப்பு பிரமாதம். கத்திச் சண்டைக்கும் இப்படத்தில் அவருக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

வஞ்சிக்கோட்டை சேனாபதியாக வரும் பி. எஸ். வீரப்பா அந்தப் பாகத்துக்குப் புதியவரல்ல. நன்றாய் நடிக்கக் கேட்பானேன்?

நாட்டு மக்களின் சுதந்திர ஆவலைத் தூண்டி விட நடத்தும் 'வீரத்தாய்' இசை நாடகம் நன்றாயிருக்கிறது. அந்த இசை நாடகத்தில் பங்கு கொள்ளும் பத்மினி சிறுவனுக்கு வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பும்போதும், வீர மகன் வீர சொர்க்கம் புகுந்த செய்தியைக் கேட்டபோதும் உணர்ச்சி பரவசத்துடன் நடித்திருக்கிறார்.

சொக்கலிங்க நாவலராக வரும் டி. கே. சண்முகம் திரைக்கதையின் முக்கியமான திருப்பங்களுக்குத் துணை புரிகிறார். மிகவும் இயல்பாக நடிக்கிறார். சேனாபதி, ஒற்றன் மூலம் அவர்கள் இருப்பிடத்தை அறிந்த செய்தி எட்டியதும் எல்லோரும் மாறுவேடத்தில் உலாவுகின்றனர். நாவலர் கண்ணிழந்த பிச்சைக்காரனாக உருமாறி அரசிளங்குமரனோடு தெருவில் போகிறார். அப்போது டி. கே. சண்முகத்தின் முக பாவங்களையும் நடிப்பையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். பார்வை இழந்ததுபோல் இருக்கும் அவரது கண்கள் அவ்வப்போது கூர்மையான பார்வையைப் பெற்றுப் பகைவர்களைக் கண்காணிக்கும்போது மிகவும் நன்றாயிருக்கிறது.

நாவலரின் மனைவியாக, வாலிபனின் தாயாக வரும் கண்ணாம்பாவும், வாலிபனின் தங்கை கௌரியாக வரும் விஜயகுமாரியும் சிறிது நேரமே படத்தில் வந்தாலும் அந்தக் கட்டங்கள் மிக மிக உருக்கமானவை.

திரு எஸ். எஸ். வாஸன் அவர்கள் தயாரித்துள்ள இந்த மகத்தான படத்தில் இரண்டு நட்சத்திர நடிகைகள் தோன்றுகின்றனர் — பத்மினி, வைஜயந்திமாலா. படம் பார்ப்பவர்கள் திணறிப் போகும்படியான ஒரு நடனப் போட்டி, நட்சத்திர நடனப் போட்டி நடைபெறுகிறது. நடன மேடையின் அலங்கார ஆடம்பரங்கள் பிரமாதம். இரு நட்சத்திரங்களின் அபிநய லாவகங்களை நேரில் பார்த்து மகிழுவதுதான் சிறந்தது.


அரசிளங்குமரியாக நடிக்கும் பத்மினிக்கு அந்தப் பாகம் புதிதல்ல; புதுப் புனலைப் போல் துள்ளிக் குதித்து, புத்தம் புது மலர் போன்ற முக மலர்ச்சியினால் எல்லோருடைய அகங்களையும் கவர்ந்து விடுகிறார்.


படத்தின் சோகத்துக்கு உறுதுணையாக மூன்று மரணங்கள் நேர்கின்றன. ஒன்று, வாலிபனின் தங்கை கௌரியின் தற்கொலை; இரண்டு, வாலிபனின் தாயார் சிறைச்சாலையில் அடைந்த மரணம்: மூன்று, சேனாபதியின் கத்திக்கு மந்தாகினி இரையானது. இந்த மரணங்களினால் ஏற்பட்ட மகத்தான துயரத்தைச் சரிக்கட்ட, தங்கவேலுவின் ஹாஸ்யங்கள் உதவி புரிகின்றன. அவற்றுள் அவரது காவடி நடனம் அமர்க்களப்படுகிறது.

திரைக்கதையின் திருப்பங்களுக்கு ஆரம்பம் முதல் உறுதுணையாயிருக்கும் ஒரு முக்கியமான பாத்திரம் அரண்மனைச் சேவகன் முருகன். எந்தப் பாத்திரத்தையும் தம் சொந்தப் பாத்திரமாக்கிக் கொண்டு மிக அற்புதமாக நடிக்கும் ஆற்றல் வாய்ந்த எஸ். வி. சுப்பையா அந்தப் பாத்திரத்தை ஏற்று அருமையாக நடிக்கிறார்.

வசனமும், பாடல்களும் கொத்தமங்கலம் சுப்பு அமைத்திருக்கிறார். கதை, ஜெமினி கதை இலாகாவின் தயாரிப்பு.




ப்ளிட்
'குழந்தைகாள், இந்த அடையாளம்
அபாயத்தைக் குறிக்கிறது என்பதை
ஞாபகத்தில் வையுங்கள்!'
FLIT
KILLS
ப்ளிட்
... ஸ்டான்வாக்
கம்பெனியால் வழங்கப்படுகிறது
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி


பாவை விளக்கு
இரக்கமற்ற இரவுகள்
மூன்றும் பாகம்
அகிலன்

முன்கதைச் சுருக்கம்

தணிகாசலம் புதுமை இலக்கியங்களில் பற்றுதல் கொண்ட மாணவன். தனது காலஞ்சென்ற தந்தையின் நண்பர் சுப்பையாவின் வீட்டில் தங்கி, கண்ணபுரம் கல்லூரியில் பி. ஏ. முதல் வகுப்பு படித்து வருகிறான். சுப்பையாவின் விதவைத் தங்கை தேவகி அவனைத் தனிமையில் அணுகித் தன்னை மணம் செய்து கொள்ளும்படி கேட்கிறாள். தணிகாசலம் சில காரணங்களைக் கூறி அவளை மறுத்து விடுகிறான். ஆனாலும், தேவகிக்கு அவனிடம் அன்பு சிறிதும் குறையவில்லை. அவள் மிகுந்த பாசத்துடனேயே அவனிடம் பழகி வருகிறாள்.

தணிகாசலத்தின் படிப்பு பாதியில் தடைப்படுகிறது. பொன் வயலில் வசிக்கும் தன் தாயாரையும் தங்கையையும் காப்பாற்ற விரும்பி அவன் பொன்வயலூருக்கு வருகிறான். அவன் குடும்பம் பொன்வயலில் வறுமையில் வாடுகிறது. அவன் மாமா பெண் கௌரியும் அங்கு வளருகிறாள். அவள் அவனுக்கு முறைப் பெண்.



வேலை தேடித் தன் சித்தப்பா விடம் புதுப்பட்டிக்கு வருகிறான் தணிகாசலம். அங்கே, கண்டிராக்டர் கண்ணுச்சாமியிடம் கணக்கு வேலை கிடைக்கிறது. சித்தப்பாவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசிக்கும் செங்கமலம் என்ற பேரழகியிடம் மனத்தைப் பறி கொடுக்கிறான். செங்கமலம் கோயிலுக்கு அடிமைப்பட்ட நாட்டியக் கணிகையின் மகள். அவர்களுடைய காதல் கிராமத்தின் நல்ல சூழ்நிலையில் குளத்தங்கரையில் வளருகிறது.

திடீரென்று ஒருநாள் செங்கமலத்தின் தாய் தன் பெண்ணை அழைத்துக் கொண்டு ஊரை விட்டே கிளம்புகிறாள்; செங்கமலமும் அவனிடம் சொல்லிக் கொண்டு போகவில்லை.

தன்னைச் செங்கமலம் ஏமாற்றி விட்டதாக நினைத்து ஆத்திரப்படுகிறான் தணிகாசலம். அந்த ஆத்திரம் ஒரு சிறுகதையாக உருவாகிறது. நடந்ததைக் கதையாக்கி 'மலர்க் கொத்து' பத்திரிகைக்கு அனுப்புகிறான்.

இடையில் கண்ணபுரம் சமஸ்தானத்தில் அவனுக்குக் குமாஸ்தா வேலை கிடைக்கிறது. அங்கே தனக்கு லஞ்சம் கொடுக்க வந்த மனிதனைப் பற்றி மேலதிகாரி நாகநாதனிடம் புகார் செய்கிறான். நாகநாதன் லஞ்சம் கொடுக்க வந்த மனிதனிடம் குழைந்து பேசிவிட்டு, தணிகாசலத்தின் மீது சீறி விழுகிறார். அன்றிலிருந்து அவனிடம் கடுமையாக நடந்து கொள்ளுகிறார். இந்த நிகழ்ச்சியைப் பின்னணியாக வைத்துக் கொண்டு அடுத்த கதையை எழுதிவிடுகிறான் தணிகாசலம்.

அவனுடைய முதல் கதை இந்தச் சமயத்தில் வெளிவருகிறது. அதைப் படித்துப் பார்த்த செங்கமலம் அவனுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதுகிறாள். தான் அவனை ஏமாற்றவில்லை என்றும், தன் தாயாரின் வற்புறுத்தலால் வேறொரு இளம் மிராசுதாரின் தாலி கட்டிக் கொள்ளாத மனைவியாக வாழ்வதாகவும், தன்னை மறந்து விடும்படியும் அதில் குறிப்பிடுகிறாள். முதல் கதை, வெளிவந்த உற்சாகத்தில் செங்கமலத்தை மன்னித்து விடுகிறான் தணிகாசலம்.

பொன்வயலில் அவனுக்காக வளர்ந்துவரும் முறைப்பெண் கௌரியை வேறொரு பணக்கார இடத்தில் கேட்கிறார்கள். மாமா வீட்டாரும் கொடுத்துவிட நினைக்கிறார்கள். இந்த நிலையில் தாயார் - பாட்டி இவர்களின் வற்புறுத்தலுக்காகவும், கௌரி தன்னிடம் கொண்டுள்ள அன்புக்காகவும் அவளை மணந்து கொள்ளச் சம்மதிக்கிறான்.

கல்யாணம் முடிந்து தனியாகக் கண்ணபுரத்துக்கு வந்த தணிகாசலம் தன் ஆபீசுக்குத் திரும்பவும் வேலை பார்க்கப் போகிறான். அங்கே அவனுக்கு வேலை இல்லை!

தணிகாசலத்தின் மனம் வெளி உலக நிகழ்ச்சிகளைக் கண்டு வேதனைப் படுகிறது.

நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியில் மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு சிறைக்குப் போகும் நெருக்கடிக்கு வருகிறான். அந்த நெருக்கடியிலிருந்து அவனைக் காப்பாற்றிப் பொன் வயலுக்குப் புது மனைவியிடம் அனுப்பி வைக்கிறாள் தேவகி. அங்கே சில நாட்கள் இன்பமாய்க் கௌரியுடன் வாழ்கிறான்.

தேவகியின் உதவியால் அவனுக்குக் குற்றாலத்தில் பள்ளி ஆசிரியர் வேலை கிடைக்கிறது. பள்ளியை வைத்து நடத்தும் பெரியவர் மாணிக்கவாசகம், தேவகிக்கு மாமா. தணிகாசலம் தனியாக அங்கு வந்து வேலையை ஒப்புக் கொள்ளுகிறான். அங்கே சென்னையிலிருந்து வந்திருந்த பேராசிரியர் சந்திரசேகரவிடமும், அவருடைய பெண் உமாவிடமும் அவனுக்குப் பழக்கம் ஏற்படுகிறது. உமா ஒரு கதைப் பைத்தியம்; உல்லாச மனம் கொண்டவள்; தாயில்லாப் பெண்.

கௌரியையும் தாயாரையும் அழைத்துக் கொண்டு வந்து குற்றாலத்தில் குடும்பம் நடத்துகிறான் தணிகாசலம். கௌரியின் அன்பும் குற்றாலத்துச் சூழ்நிலையும் அவன் கற்பனைக்குத் தூண்டுகோலாகின்றன. கௌரியும் தணிகாசலமும் எதிர்பாராத வகையில் குற்றாலத்தில் செங்கமலத்தையும் அவள் கணவனையும் சந்திக்கிறார்கள்.

செங்கமலம் தனக்கு அவன் எழுதிய கடிதத்தைப் பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறுகிறாள். அதைக் கிழித்தெறியச் சொல்கிறான். அவள் கேட்கவில்லை. செங்கமலம் தன் கணவனுடன் ஊருக்குத் திரும்புகிறாள்.

அடுத்த சாரல் காலத்தில் உமா! தன் தந்தையுடன் குற்றாலத்துக்கு வருகிறாள். தணிகாசலத்தின் குடும்பத்தாரோடு அவள் மனம் ஒன்றிப் பழகுகிறாள்.

ஒரு நாள் 'மலர்க்கொத்து' பத்திரிகாசிரியர் கந்தசாமி குற்றாலத்துக்கு வருகிறார். தணிகாசலத்தின் இலக்கிய உணர்வைத் தூண்டிவிட்டுச் செல்லுகிறார்.

அந்த லட்சியத்துக்கு மேலும் மேலும் தூபம் போடுகிறாள் உமா. தணிகாசலம் குற்றால வாழ்க்கையில் சலிப்புக் கொண்டு, சென்னை நகரைப் பார்க்க விரும்புகிறான்.

தணிகாசலத்தின் புது வாழ்வு சென்னையில் தொடங்குகிறது. பசுபதி என்ற சந்தர்ப்பவாதியின் பத்திரிகையில் வேலைக்கு வந்து சேருகிறான். சென்னையில் உமாவிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. உமா இப்போது பெண்கள் கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றுகிறாள். தன் வீட்டு மாடியைத் தணிகாசலத்துக்கு ஒழித்துக் கொடுத்து, அதில் அவனைக் குடும்பத்துடன் குடியிருக்கச் சொல்கிறாள்.

பசுபதி தம்முடைய பத்திரிகையையும் தணிகாசலத்தையும் கைவிட்டு விட்டு, செங்கமலத்தின் கணவர் குமாரசாமியின் பணத்தைக் கொண்டு, திரை உலகத்துக்குச் செல்கிறார். வேலையற்ற தணிகாசலம் வீட்டில் இருந்து கொண்டு கதைகள் எழுதுகிறான். உமா அவன் எழுதும் வேலைகளில் உதவி செய்கிறாள். தணிகாசலத்தின் குடும்பம் முழுவதுமே உமாவிடம் பேரன்பு செலுத்துகிறது.

பசுபதி எழுதிய குமாரசாமியின் முதல் திரைப்படம் வெளி வருகிறது. படம் பார்க்கச் சென்ற தணிகாசலம் கொட்டகையில் செங்கமலத்தையும் குமாரசாமியையும் பார்த்து விடுகிறான். செங்கமலத்தின் கையில் இப்போது ஒரு பையன் இருக்கிறான்.

மறுநாள் கடற்கரையில் செங்கமலத்தையும் அவள் மகனையும் பார்க்கிறான் தணிகாசலம். பையனைத் தூக்கிக் கொஞ்சுகிறான். வேலை இல்லாமல் அவன் கஷ்டப்படுவதைக் கேட்டுச் செங்கமலம் வருந்துகிறாள். பேசிப் பிரிந்து விடுகிறார்கள் இருவரும்.

இவர்களுடைய சந்திப்பை உமா எதிர்பாராத நிலையில் கண்டுவிடுகிறாள். இருவரிடமும் அவளுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

கௌரி ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாகிறாள். தேவகியும் மற்றவர்களும் சென்னைக்கு வருகிறார்கள். தேவகியுடன் தணிகாசலம் அவள் கிராமத்துக்குச் சென்று, அங்கு நிலவிய நிலத் தகராறைத் தீர்த்து விட்டு வருகிறான்.

கிராமத்திலிருந்து திரும்பிய தணிகாசலத்தை, செங்கமலத்தின் கணவர் குமாரசாமி தம் 'ஸ்டுடியோ'வுக்கு அழைத்து, ஒரு திரைக் கதை எழுதச் சொல்கிறார். பசுபதி அப்போது ஊரில் இல்லை. தணிகாசலம் பல மாதங்கள் உழைத்து ஒரு கதையை உருவாக்குகிறான். அவன் உழைப்பு வீணாகிறது; அவன் ஏமாற்றப் படுகிறான்.

திரை உலக ஏமாற்றமும், செங்கமலத்தின் காதலில் பெற்ற ஏமாற்றமும் அவனை ஒன்று கூடி அலைக்கழிக்கின்றன.

உமாவின் அத்தை மகள் ருக்மிணியைப் பெண் பார்க்க வந்த ரவி என்ற சப்கலெக்டர் ருக்மிணியை வெறுத்து உமாவை விரும்புகிறான். இதனால் அத்தை சௌந்தரத்தம்மாள் தன் மகளுக்கு வந்த மாப்பிள்ளையை உமா மயக்கி விட்டதாக அவள் மீது வெறுப்புக் கொள்ளுகிறாள்.



ஆனால் உமா ரவியை மணக்க மறுத்து விடுகிறாள். ரவிக்காகப் பரிந்து பேசும் தணிகாசலத்தின் மீது அவள் எரிந்து விழுகிறாள்.

எழுத்தைக் கொண்டு பிழைக்க முடியுமா? தணிகாசலம் இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் தொழிலாளியாக வேலைக்குப் போகிறான். கற்பனை மனம் படைத்தவனுக்குத் தொழிற்சாலை அலுவல்களையும், எழுத்தையும் ஒன்றாய்க் கவனிக்க முடியவில்லை. ஓய்வு நேரமெல்லாம் உமா அவனுடன் இருந்து உழைக்கிறாள்.

நின்றுபோன ருக்மிணியின் கல்யாணப் பேச்சு மறுபடியும் வேறொரு மாப்பிள்ளைக்குத் தொடங்குகிறது. உமா அருகில் இருப்பதை விரும்பாத சௌந்தரத்தம்மாள் அவளைத் தூற்றுகிறாள். உமா மனம் வெம்பித் தில்லிக்குத் தன் தந்தை சந்திரசேகரனிடம் செல்லுகிறாள்.—அங்கே அவர் சந்திரலேகா என்ற பஞ்சாபிப் பெண்ணை மறுதாரமாக மணந்து கொண்டு வாழ்கிறார்!


தந்தையும் மகளும் தணிகாசலத்தைத் தில்லிக்கு வரச் சொல்லி எழுதுகிறார்கள். தணிகாசலம் அவர்களுடன் தில்லி, ஆக்ரா முதலிய நகரங்களைச் சுற்றிப் பார்க்கிறான். ஆக்ராவில் தாஜ்மஹாலின் முகப்பிலுள்ள இடது புறத்துக் கோபுரத்தின் உச்சியில் உமா மயங்கி விழுகிறாள். தணிகாசலம் அவள் நிலையைக் கண்டு பதறிப்போய் உதவுகிறான்.—தாஜ்மஹாலின் முதற்காட்சியில் அவன் கண்களுக்கு ஏதோ ஒரு தோற்றம் தெரிகிறது.

காதலின் தூய சக்திக்கும், கடமையின் புனிதக் கட்டுப்பாட்டுக்கும் இடையில் அகப்பட்டு உமாவும் தணிகாசலமும் தத்தளிக்கிறார்கள்.

தில்லியிலிருந்து அவர்கள் திரும்புகிறார்கள். ருக்மிணிக்குக் கல்யாணம் நடக்கிறது. உமா - தணிகாசலம் இருவரைப் பற்றியும் சௌந்தரத்தம்மாள் தூற்றுகிறாள்.

கௌரிக்கு இரண்டாவதாகப் பெண் குழந்தை பிறக்கிறது. அவளுடைய வளர்ப்புத் தாயாக உமா விளங்குகிறாள்.

சௌந்தரத்தம்மாளுக்குப் பொறாமை ஏற்படுகிறது. இதற்குச் சண்பகம் என்ற மற்றொரு பெண்ணும் தூபம் போடுகிறாள். இருவரும் சேர்ந்து கொண்டு, தணிகாசலத்தின் குடும்பத்தை உமா கெடுப்பதாகவும், அவள் கௌரிக்குத் துரோகம் செய்வதாகவும் பழி சுமத்துகிறார்கள். இதைக் கேள்வியுற்ற தணி



உமா



செங்கமலம்



குமாரசாமி



மாணிக்கவாசகம்

காசலம் வேறு வீட்டுக்கு மாற்றிக் கொள்ள விரும்புகிறான். உமா கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து கன்னி வாழ்க்கை வாழப் போவதாய்ச் சொல்கிறாள்.

உமாவின் உள்ளம் தணிகாசலத்துக்குத் தெரியாமலில்லை. தன்னை மறந்து விட்டுப் பிறகு மதம் மாறச் சொல்கிறான். எப்படி முடியும் அவனால்? "என்னைக் காதலிக்கிறாயா?" என்று அவளைக் கேட்கிறான். அவளும் அதையே அவனிடம் திரும்பிக் கேட்கிறாள். இனித் தன்னைப் பார்க்க வேண்டாமென்று அவளைப் பிடித்து வெளியில் தள்ளுகிறான். கௌரி இதைப் பார்த்து விடுகிறாள்.

இந்த அதிர்ச்சி தாங்காமல் உமாவுக்கு ஜுரம் வந்து விடுகிறது. தணிகாசலம் தன் செய்கைக்காக வருந்தி, அவளைக் கண்டு தேற்றுகிறான். 'தன்னை மணக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தக் கூடாது' என்று உமா சத்தியவாக்கு பெறுகிறாள்.

சௌந்தரத்தம்மாளின் முன்னேற்பாட்டின்படி உமாவின் தந்தை தில்லியிலிருந்து வந்து அவனிடம் வேண்டுகிறார். ரவியை உமா மணப்பதற்கு அவனை அவளிடம் யோசனை சொல்லச் சொல்லுகிறார். உமாவிடம் சத்தியம் செய்து கொடுத்த தணிகாசலம் அந்த வேண்டுகோளை மறுக்கிறான். தம்முடைய பெண்ணைக் கெடுத்த அயோக்கியன் என்று அவனைத் திட்டுகிறார். மறுநாளே வீடு மாற்றிக் கொள்ளுகிறான் தணிகாசலம்.

பிரிவு! எல்லோரையும் வாட்டுகிறது. குழந்தை கல்யாணி உமாவை நினைத்துத் தினந்தோறும் ஏங்குகிறாள். குழந்தையை உத்தேசித்துத் தணிகாசலத்தின் வீட்டார் உமாவை ஒருமுறை கல்லூரியில் சென்று சந்திக்கிறார்கள். உமாவுக்காக எல்லோருமே ஒருநாள் மாமல்லபுரத்துக்குப் போய் வருகிறார்கள். கல்யாணிக்கு இந்தச் சந்திப்புக்களால் உமாவின் நினைவு அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை. ஒரு நாள் குழந்தை உமாவைத் தேடிக் கொண்டு மாடிப் படிகளில் இறங்கிச் செல்ல முயற்சி செய்கிறாள். படிகள் தடுக்கித் தரையில் குற்றுயிராய் உருண்டு விழுகிறாள்.

அப்போது, "அக்கா எங்கே?" என்ற கேள்வியை அவள் மறக்கவில்லை. கௌரியே ஓடிப்போய் உமாவை அழைத்து வருகிறாள். உமாவின் மடியில் குழந்தை உயிர் விட்டுக் கொண்டே, உமாவுக்கு 'டூ' விடுகிறாள்!

இனி உமா என்ன செய்யப் போகிறாள்?

முதல் அத்தியாயம்

உமாவின் பயங்கரச் சிரிப்பு!

தணிகாசலம் தன் குடும்பத்தாருடன் குற்றாலத்துக்கு வந்திருந்தான். முதலில் குற்றாலத்தை விட்டுச் சென்னைக்குச் சென்ற இந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள் அந்தக் கிராமம் எவ்வளவோ மாறிப் போயிருந்தது. புத்தம் புதிய ஓட்டல்கள் கடைகள், வீடுகள் தோன்றி அதன் அமைப்பிலேயே ஒரு புதுமை தெரிந்தது. இந்த ஆண்டின் சாரல் காலம் இன்னும் சரியாய்த் தொடங்கவில்லை.

மாணிக்கவாசகம் எழுதிய உருக்கமான கடிதத்தைக் கண்டபிறகுதான் அவர்கள் குற்றாலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். தம்முடைய தள்ளாத வயதைக் குறிப்பிட்டு அவர் அவனை அங்கு வரவழைத்திருந்தார். "உன் குழந்தையின் பிரிவுக்குப் பிறகு நீ இங்கே வந்திருந்தால் உனக்கு ஆறுதலாக இருக்கும். பிரயாணத்துக்கு என் உடல்நிலை இடங்

கொடுக்கவில்லை. இல்லா விட்டால் நேரில் வந்து உங்களை அழைத்துக் கொண்டு வருவேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

தென்காசி ரயிலடியில் மாணிக்கவாசகமும் தணிகாசலமும் ஒருவரை யொருவர் அன்பின் மேலீட்டால் கட்டிக் கொண்டு கண்ணீர் உதிர்த்தனர். அவருடைய தள்ளாமை அவனைச் சுட்டது; அவனுடைய குழந்தையின் துயரம் அவரைத் தாக்கியது. ''இந்த உலகத்தில் நீ தாங்கிக் கொள்ள வேண்டிய அநுபவங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன; கவலைப்படாதே'' என்று அவனைத் தேற்றினார் மாணிக்கவாசகம்.


தணிகாசலம் பைத்தியக்காரனைப் போல் உரு மாறிப் போயிருந்தான். துன்பமும், துயரமும் அவன் கண்களின் ஆழத்தில் தேங்கிக் கிடந்தன. கல்யாணி அம்மாள் தன் மகனின் மாற்றத்தை அவரிடம் சொல்லிக் கொண்டு வந்தாள். ''குழந்தையைப் பறி கொடுத்தது கூட இப்போது எங்களுக்கு அவ்வளவு கவலையில்லை. தணிகாசலத்தின் போக்குத்தான் பயமாக இருக்கிறது. வேளா வேளைக்குச் சாப்பாடு இல்லை; யாரிடமும் பேசுவதில்லை; ஒரு நாளாவது படுக்கையில் படுத்து நல்ல தூக்கம் தூங்குவது கிடையாது. இந்த இருபது நாட்களாய்ப் பைத்தியம் பிடித்தவன் போல் நடந்து கொள்ளுகிறான்.''

''கற்பனை செய்யும் மனம் மிகவும் பொல்லாத மனம்; சிறு துன்பம் வந்தால் கூட அதை மலையாக நினைத்துக் கொண்டு அவதிப்படச் சொல்லும்'' என்றார் மாணிக்கவாசகம். ''எழுத்தாளர்கள் எதையும் பூதக் கண்ணாடி போட்டுக் கொண்டுதான் பார்ப்பார்கள்.''

வீட்டுக்குப் போன பிறகு அவர் மனைவியின் மடியில் சௌரி 'பொத்'தென்று விழுந்தாள். அந்தக் கிழவியின் அரவணைப்பு அவளுக்கு மிகவும் இதமாக இருந்தது. ''என்னைவிட அவர்தாம் மிகவும் கஷ்டப்படுகிறார்'' என்று அவளும் தன் அருமைக் கணவனின் நிலையை எடுத்துக் கூறினாள்.

அவர்கள் பேச்சிலும் உண்மை நிறைந்திருந்தது. சம்பவம் நடந்த மறுநாள் தொடங்கித் தணிகாசலம் முற்றிலும் மாறிப் போய்விட்டான். தொழிற்சாலையில் அவனது கவனக் குறைவால் பல சிறு தவறுகள் நடந்தன. இயந்திர உருளைகளில் ஒரு சமயம் தன் கையைக் கொடுக்கப் பார்த்தான். நெருப்பு உலையருகில் ஒரு நாள் அலட்சியமாக நடந்தான். உடன் இருந்தவர்களின் கேள்விகளுக்கு அவனால் சரியாய்ப் பதிலளிக்கமுடியவில்லை. தொழிலாளர்கள் அவனுடைய குழப்பத்தைப் புரிந்து கொண்டு அதிபரிடம் கூறினார்கள். இயந்திரங்களுடன் பழக வேண்டிய பாதுகாப்பு உணர்ச்சி அவனிடம் இல்லையென்று சொன்னார்கள்.

''ஒரு மாதமோ, இரண்டு மாதமோ ஓய்வு எடுத்துக்கொண்டு நீங்கள் மெதுவாய்த் திரும்பி வாருங்கள்'' என்று அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தார் அதிபர். இரண்டு மாதச் சம்பளத்தை வீட்டில் கொடுத்து வரச் செய்தார். அவனுடைய அருமையைத் தெரிந்து கொண்ட மனிதர் அவர்.



இரண்டு வாரங்களுக்கு மேல் குற்றாலத்தில் கழிந்தன. இடையில் இரண்டே நாட்கள் தேவகியும் கண்ணபுரத்திலிருந்து வந்துசென்றாள். சுப்பையாவின் பையனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். வீட்டை அப்படியே போட்டு விட்டு வந்ததால் உடனே திரும்ப வேண்டியதாயிற்று. தினந்தோறும் மாணிக்கவாசகம் அவனுக்குத் திருக்குறளையும் திருவாசகத்தையும் படித்து விளக்கி வந்தார். குற்றாலத்துக் குளிர் அருவியும் ஓரளவுக்கு அவனிடம் அமைதி ஏற்படுத்தப் பார்த்தது. ஆனால் மனத்தின் ஆழம் இன்னும் உறுதியான தெளிவு பெறவில்லை.

சென்னைக்குத் திரும்புவதற்கு முதல் நாள் மாலை அவனும் கௌரியும் பையனுடன் வெளியில் உலவி வரச் சென்றார்கள். வழக்கமாகப் போய் உட்காரும் அந்தக் கருங்கல் பாறை அவர்களைத் தன்னிடம் வரவேற்றது. "பல வருஷங்களுக்கு முன்னால், முதல் முறை குற்றாலத்துக்கு வந்தபோது இங்குதான் உட்கார்ந்தேன்" என்று கூறி உட்கார்ந்தான் தணிகாசலம். பாறைக்கு எதிரில் உமாவின் குறும்புத்தனத்துக்கு இலக்கான அந்தப் பழைய மரம் நின்று கொண்டிருந்தது. இதன் கிளைகளில் தாவி ஏறித்தான் அவள் குரங்கின் கோபத்துக்கு இலக்கானாள்.

சிறுவன் பரமசிவம் புல்வெளியில் விளையாடினான். கௌரியின் நினைவு எங்கோ அலைந்து திரிந்தது.

"இப்போது கல்யாணியும் உயிரோடிருந்து, உமாவும் இங்கே வந்திருந்தால் உங்கள் முகம் இப்படியா இருக்கும்?" என்று கேட்டாள் கௌரி. "கொட்டும் அருவியைக் கண்டால் குழந்தை கை கொட்டிக் கூத்தாட மாட்டாளா?"

"துன்பம் வந்தால் தனியாக வராதாம்; துணை தேடிக் கொண்டுதான் வருமாம்" என்று வறட்டுச் சிரிப்பு சிரித்தான் தணிகாசலம். "குழந்தை செத்துப் போய்ப் பறி போனாள்; உமா உயிரோடு பறி போனாள் — இல்லையா கௌரி?" என்றான் தணிகாசலம்.

"இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு உங்களை வாட்டி எடுக்கிறார்கள்" என்றாள் கௌரி. அவனுடைய கரங்களைப் பற்றிக் கொண்டு, "எனக்கு மாத்திரம் துன்பமில்லையா?" என்று கேட்டாள். "என்னைத் தேற்ற வேண்டிய நீங்களே இப்படிக் கலங்கினால் நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? பத்து நாட்களாவது உமாவை அவர்கள் நம் வீட்டில் விட்டுப் போயிருந்திருக்கலாம். அவள் பக்கத்தில் இருந்தால் நமக்கு இந்தச் சுமை எவ்வளவோ குறைந்திருக்கும். அவர்களுக்கும் தெரியவில்லை. உங்களுக்கும் பொறுமையில்லை."

"அதை ஏன் இப்போ கிளறுகிறாய்?"

"குழந்தையிடம் உங்கள் பாசத்தை வளர்த்தவள் அவள்; உங்களைக் குழந்தையிடம் கொஞ்சச் சொல்லி வேடிக்கை பார்த்தவள் அவள்; அவளால்தான் குழந்தை உங்களிடம் ஒட்டிக் கொண்டு திரிந்தாள். அப்பேர்ப்பட்டவள் இந்த வேளையில் நம்மோடு இல்லாமல் போய் விட்டாளே! நாலு நாட்களாவது அவள் நம்மோடு தங்கியிருக்க வேண்டும். அருமை தெரியாத மனிதர்கள்."

அந்த அருமை தெரியாத மனிதர்கள் அன்றைக்கு நடந்து கொண்ட முறை இப்போது அவனுக்கு நினைவில் வந்தது:

கல்யாணியை வாரிப் போட்டு விட்டு வந்தவுடன் கௌரியையும் உமாவையும் தேற்றிக் கொண்டிருந்தான் தணிகாசலம். ஈரத் தலை காயாத நிலையில் இரண்டு பேரும் வெறும் தரையில் விழுந்து கிடந்தார்கள். பொழுது விடிந்ததிலிருந்து அவர்கள் பச்சைத் தண்ணீரைப் பல்லில் ஊற்றவில்லை. வெளித் தாழ்வாரத்தில் பாட்டியும் பேரனுமாகக் குழந்தையின் புகைப் படத்தோடு பேசிக் கொண்டிருந்தார்கள். புகைப்படம் என்ன பதில் பேசுமா? சிரிக்குமா? விளையாடுமா? அல்லது 'டூ' தான் விடுமா?

துக்கம் விசாரிக்க வந்த கூட்டம் முன்பே கரைந்து விட்டது. பேராசிரியரும் சௌந்தரத்தம்மாளும்கூடக் கூட்டத்துடன் கூட்டமாக வந்து விட்டுத் திரும்பினார்கள். அவர்களுடன் உமா வீட்டுக்குப் போகவில்லை. அதனால் அவளை அழைத்துக் கொண்டு போவதற்காகத் திரும்பவும் வந்தார்கள் அவர்கள். சௌந்தரத்தம்மாள் நயமாகச் சொல்லிப் பார்த்து, அவளை வீடு திரும்பும்படி கெஞ்சிப் பார்த்தாள். உமா கேட்கவில்லை.

"ஒரு வாரம் இங்கே இருந்து விட்டு வரட்டும்" என்றாள் கௌரி.

"ஆமாம்; அடுத்த வாரம் வருகிறேன்" என்றாள் உமா.

"ஒரு நிமிஷங்கூட நீ இங்கே இருக்கக் கூடாது!" என்று உமாவைப் பிடித்து முரட்டுத்தனமாக இழுத்தாள் சௌந்தரத்தம்மாள். தணிகாசலத்துக்கு இந்தக் காட்சி அருவருப்பைத் தந்தது.

நைந்துபோய்ச் சலிப்படைந்த சொற்களால், "நீ போய்விட்டு வா, உமா! இந்த நேரத்தில் எனக்கு எதையுமே தாங்க முடியாது" என்று கூறினான்.

"இந்த நிலையில் எப்படி நான் உங்களையும் கௌரியையும் விட்டு விட்டுப் போவேன்? எனக்கு அந்த வீட்டுக்குப் போனால் அழுவதற்குக் கூடச் சுதந்திரமில்லை, மாமா! கல்யாணி என் அருமைக் குழந்தை! என் குழந்தை அவள்!"

சௌந்தரத்தம்மாள் உமாவைக் கட்டாயமாய்த் தூக்கி நிறுத்தினாள். பேராசிரியர் வேடிக்கை பார்த்தார். உமாவால் இதற்கு மேல் தாழ்ந்து போக முடியவில்லை, தான் என்ன பேசுகிறோம், எந்தச் சூழ்நிலையில் பேசுகிறோம் என்பதை மறந்து தன் அத்தைமீது சொற்களை வீசினாள்.

"இதெல்லாம் உங்களால் வந்தவினை! நீங்கள் இவர்களை வீட்டை விட்டுத் துரத்தியிருக்கா விட்டால் இன்று என் செல்வம் என்னை விட்டுப் போயிருப்பாளா? கொலைகாரப் பாவிகள்! எதற்காக என்னைத் தேடிக் கொண்டு வந்தீர்கள்? இனிமேல் இது தான் என்னுடைய வீடு; என்னை இன்றோடு மறந்து விடுங்கள்."

பிடாரித் தெய்வத்தின் ஆவேசம் சௌந்தரத்தம்மாளிடம் குடி கொள்ளப் பார்த்தது. ஆனால் தணிகாசலம் அந்தச் சமயத்தில் மின்னலைப்போல் குறுக்கிட்டு உமாவை அதட்டினான்.

"உமா! ரகளை செய்வதற்கு இது நேரமுமில்லை; இடமுமில்லை. என் எதிரி





லேயே பெரியவர்களை இப்படி அவமரியாதை செய்யவேண்டாம். உன்னுடைய துன்பம் எனக்குத் தெரியும். இதற்காக மற்றவர்களைப் புண்படுத்தலாமென்று நினைத்துக் கொள்ளாதே! எங்கள் துன்பம் எங்களோடு நிற்கட்டும். நீ உன் வீட்டுக்குப் போய் விடு. இது எங்கள் வீடு!''

உதடுகள் துடித்தன. கேவிக் கேவி அழுதாள் உமா. கௌரியின் கால்களைப் பற்றிக் கொண்டு, ''கௌரி! நீயாவது இவர்களுக்குச் சொல்லி; அனுப்பக் கூடாதா?'' என்று மன்றாடினாள். ஒரு முறை சொல்லித் தன்வாயிழந்த கௌரி மறுமுறை தன் வாயைத் திறக்க வில்லை. ''நீ சொல்! நீ சொல்! நீ சொல்!'' என்று தன் நெற்றியைப் போட்டு உடைத்துக் கொண்டு கட்டாந்தரையைச் சிவப்பாக்கினாள் உமா. அவள் நெற்றியெங்கும் உதய வானத்தின் சிவப்பு கசியத் தொடங்கியது.

தணிகாசலம் அவள் திமிறியதையும் பொருட்படுத்தாமல், அவளை இழுத்து அவள் தந்தையின் கையில் ஒப்படைத்தான். தந்தையின் அன்புக் கரம் பட்டதாலோ, அல்லது தணிகாசலம் அவளை அவரிடம் இழுத்து விட்டதாலோ, உமாவின் சப்தநாடிகளும் திடீரென்று அவளுக்கு ஒடுங்கி விட்டன. நடுங்கும் கரங்களால் பேராசிரியரைக் கும்பிட்டான் தணிகாசலம். ''நடந்ததை யெல்லாம் மறந்து விட்டு, இவளைப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேருங்கள்'' என்று சொன்னான்.

உதிரம் கொப்பளிக்கும் பயங்கரச் சிரிப்பு, சிரித்தாள் உமா. பைத்தியக்காரி போல் மனங்கொண்ட மட்டும் சிரித்தாள். ''போய் வருகிறேன், மாமா! இனிமேலாவது உங்களுக்கு நிம்மதியாகத் தூக்கம் வருமல்லவா?'' என்று கேட்டாள்.

அவர்கள் எப்படி அவளைத் தங்கள் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்களோ, தணிகாசலத்துக்குத் தெரியாது. அவள் கேட்ட அந்தக் கேள்வியால் அன்றிலிருந்து தணிகாசலத்தின் நிம்மதியான இரவு நேரத் தூக்கத்தையும் அவள் தன்னுடன் பறித்துக் கொண்டு போய் விட்டாள்.

குற்றாலத்துக்கு வருவதற்கு முன்னால் பதினைந்து நாட்கள், வந்தபிறகு பதினைந்து நாட்கள் ஆக இந்த ஒரு மாதமும் அவனிடம் நல்ல தூக்கமில்லை. கௌரி பையன் பரமசிவத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, தணிகாசலத்தை அழைத்துக் கொண்டு மலையடிவாரத்திலிருந்து மாணிக்கவாசகத்தின் வீட்டுக்குத் திரும்பினாள்.

அத்தியாயம் 2

காணக்கூடாத கனவுகள்!

குற்றாலத்துக்குப் புறப்படுவதற்கு முன்னால் தணிகாசலம் உமாவைச் சந்தித்து அவளிடம் சொல்லி விட்டுப் புறப்பட விரும்பினான். கல்லூரிக்குச் சென்றபோது, ''அவள் அங்கு இல்லை. பத்து நாட்களாகவே வரவில்லை'' என்று அவளுடைய சிநேகிதிகள் கூறினார்கள். அவர்களில் ஒருத்திக்குத் தணிகாசலத்தை நன்கு தெரியும். அவனைத் தனியாக அழைத்து, ''இனிமேல் வேலைக்கு வரமாட்டாள் போல் தெரிகிறது. அவளுடைய அப்பாவே நேரில் வந்து உமாவின் ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனார். உடல் நலம் சரியில்லை என்று கடிதத்தில் காரணம் காட்டியிருக்கிறார்கள்'' என்றாள். ஏதாவது செய்திருந்தால் தானே நேரில் போய் அவளிடம் கூறுவதாகவும் தெரிவித்தாள். தணிகாசலம் அவளிடம் விவரத்தைக் கூறி விட்டு வந்தான். நேரில் பார்க்க முடிந்திருந்தால் ஒரு வகையில் அவனுக்கு அமைதி கிடைத்திருக்கும்.

குற்றாலத்தில், மாணிக்கவாசகத்துக்குச் சென்னையில் நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை. உமாவுக்கும் தணிகாசலத்தின் வீட்டாருக்கும் உள்ள உறவு அவர் அறியாத ஒன்று. பேராசிரியர் கடிதங்கள் எழுதி வந்தாராம். ஆனால் நடப்புக்கள் எதையும் குறிப்பிடவில்லை போலும். தமக்கும் சந்திரலேகாவுக்கும் நடந்த திருமணத்தையே மறைத்து வைத்திருந்தவர் இதைத்தானா வெளியிடப் போகிறார்?


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்

"ஏன் இன்னும் அந்தப் பெண்ணுக்குக் கல்யாணமாகவில்லை? நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைக்கவில்லையா? அல்லது பணம் செலவாகி விடுமே என்று அவர் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறாரா?" என்று மட்டும் தணிகாசலத்திடம் கேட்டார்.

"அவனுக்குக் கல்யாணம் செய்து கொள்வதில் விருப்பமில்லை. பேராசிரியரிடம் பணத்துக்கு என்ன குறைவு?"

"விளையாட்டாய்ப் பேசுகிறான் என்று நினைத்தேன். அதுவே வினையாகப் போய் விட்டது! நல்ல பெண்கள் இந்தக் காலத்துப் பெண்கள்!" என்று சிரித்தார் பெரியவர். அத்துடன் அந்தப் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

உலவி விட்டுத் திரும்பி வந்த கௌரி மறுநாள் சென்னைக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்தான்.

சாப்பாட்டுக்குப் பிறகு சற்று நேரம் பெரியவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படுக்கைக்குச் சென்றான் தணிகாசலம். வீட்டின் முகப்பிலிருந்த பெரிய கூடத்தை அவர் தணிகாசலத்துக்கு ஒழித்துக் கொடுத்திருந்தார். வழக்கம் போல் தூங்க முடியாமல் தணிகாசலம் படுக்கையில் விழித்துக் கொண்டு கிடந்தான்.

பகற்பொழுதுகள் எப்படியோ கழிந்து விட்டன. இரவு வேளைகள் கொடுத்த கொடுமையைத்தான் தணிகாசலத்தால் தாங்க முடியவில்லை. நினைவுகள், நினைவுகள், நினைவுகள், பொறுக்க முடியாத நினைவுகள்! கனவுகள், கனவுகள், கனவுகள், காணக் கூடாத கனவுகள்!

கடலில் துள்ளித் திரியும் மீன்களின் கூட்டம் போல் அவன் நெஞ்சக் கடலில் நினைவுகள் வட்டமிட்டன. அந்த மீன்களின் கூட்டம் ஆயிரக்கணக்கான முட்டைகளிட்டுக் குஞ்சுகள் பொரிப்பது போல், நினைவுக் கூட்டமும் பன்மடங்கு அவனுள்ளே பெருகிப் பெருகி வளர்ந்து கொண்டிருந்தது. அமைதி என்பது அலைகடலுக்கு ஏது?

முன்பொரு காலத்தில் மாமல்லபுரத்தில் சிற்பங்கள் செதுக்கிய அத்தனை சிற்பிகளும் இப்போது தங்கள் சிற்றுளிகளைத் தூக்கிக் கொண்டு தணிகாசலத்திடம் வந்து சேர்ந்தார்கள். அருகில் உள்ள குற்றாலக் குன்றுகளுக்குப் போயிருக்கலாம். அப்பாலுள்ள மேற்கு மலைத் தொடர்களுக்கு அவர்கள் படையெடுத்திருக்கலாம். அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டார்கள். தணிகாசலத்தின் தலையைத் தங்கள் கைவண்ணத்துக்கேற்ற பாறையாக நினைத்துக் கொண்டு அதன் ஒவ்வொரு மயிர்க்காலையும் தங்கள் சிற்றுளி கொண்டு செதுக்கத் தொடங்கி விட்டார்கள். அவனுக்குத் தூக்கம் வருமா, என்ன?

எத்தனையோ பயங்கரக் கனவுகளுக்கு மத்தியில் ஒரே ஒரு கனவு மாத்திரம் திரும்பத் திரும்ப வந்தது. ஒவ்வொரு நாளும் அது அவனுக்குத் தொல்லை கொடுத்தது. கனவு என்று அதைச் சொல்வதைவிட, ஏற்கனவே நடந்த பழைய நிகழ்ச்சியின்படப்பிடிப்பு என்றுதான் சொல்ல வேண்டும். வீடு மாற்றிக் கொண்ட அன்றைக்கு உமாவின் பிடியிலிருந்து குழந்தை கல்யாணியை வெடுக்கென்று பிடுங்கினானல்லவா? வீடு போகும் வரையிலும், வீட்டுக்குப்போன



பிறகும் உமாவுக்காகக் குழந்தை கதறிக் கதறி அழுதாள் அல்லவா, அந்தக் காட்சிதான் அது!

"கல்யாணி! அழாதே! உமா அக்காள் வருவாள்; அழாதே, கல்யாணி! கல்யாணி! உமா!"

அன்றைக்கு நடுச் சாமத்திலும் அதே கனவு திரும்ப வந்தது. உளறி அடித்துக் கொண்டு எழுந்த தணிகாசலம் அருகில் கௌரி அமர்ந்து நித்திரை போவதைக் கண்டான். மெல்லக் கூஜாவிலிருந்து தண்ணீர் ஊற்றிக் குடித்து விட்டு அறையை விட்டு வெளியே வந்தான். வானத்தை அண்ணாந்து பார்த்தபோது அங்கே நட்சத்திரங்கள் பளிச்சென்று சிரித்துக் கொண்டிருந்தன. நூறு அடி தூரத்தில் நின்று கொண்டிருந்த சண்பக மரத்தின் அடியில் போய் உட்கார்ந்

தான். கிளைகளிலிருந்து மலர்களின் வாசனைத் துளிகள் அவன் மீது வழிந்து விழத் தொடங்கின. மனங்கொண்ட மட்டும் அந்தக் காற்றை உள்ளுக்கு இழுத்தான். அருவியின் ஓசை அருகில் ஒலிப்பது போல் காதுகளில் பாய்ந்தது.

வீட்டிலிருந்து வெளியில் வரும் கௌரியின் நிழல் உருவத்தைக் கண்டவுடன், 'ஏது என் தனிமையைக் கெடுத்துவிடுவாள் போலிருக்கிறதே' என்று நினைத்தான் தணிகாசலம். "இது என்ன வேலை?" என்று அதட்டிக் கொண்டே அவன் அருகில் வந்தாள் கௌரி. "இனிமேல் அறையை நன்றாகப் பூட்டி விட்டுப் படுத்தால்தான் நல்லது."

"என்னை என்ன 'செய்யச் சொல்லுகிறாய்?" என்றான் தணிகாசலம்.



கீழே உட்கார்ந்து அவன் கரங்களைப் பற்றி, "வாருங்கள், வீட்டுக்கு" என்று அழைத்தாள் கௌரி.

"இங்கேயே இருக்கலாம்" என்று கெஞ்சினான் தணிகாசலம். "இதோ, பார்! நீயும் வந்து என் மடியில் படுத்துக்கொள். நல்ல காற்று, நல்ல இருட்டு. நம்மைச் சுற்றி இருளின் திரை நன்றாக மறைத்துக் கொண்டிருக்கிறது. வெட்கப்படாமல் நீ என் மடியில் படுத்துத் தூங்கு. விடிவெள்ளி முளைத்தவுடன் உன்னை நான் எழுப்பி விடுகிறேன்."

"அத்தான்!"

"ஆமாம், கௌரி! இந்த உலகத்தில் இந்த நேரத்தில் நிம்மதியாகத் தூங்குகிற எல்லோரையும் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது. நீ நன்றாகத் தூங்கினால் அது நான் தூங்குவதைப்போல்தான்! இங்கே, வா!"

கணவனின் மடியில் கௌரி தஞ்சம் புகுந்தாள். வெகு நேரம் அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவனுடைய கண்களோ வானத்தை நோக்கி வெறித்துப் பார்த்தன.

"இன்னும் இரண்டே நாட்கள் பொறுத்துக் கொண்டிருங்கள். பட்டணத்துக்குப் போனவுடன் உமா நம் வீட்டுக்கே வந்து விடுவாள்."

"என்ன கௌரி?"

"சொன்னால் கோபித்துக் கொள்வீர்கள். அத்தையும் நானும் கூடிப் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறோம். போனவுடன் எங்களுக்கு அதுதான் வேலை" என்றாள் கௌரி.

அவன் குனிந்து அவள் முகத்தை வியப்புடன் பார்த்தான்.

கௌரி எதையோ சொல்ல வாயெடுத்தாள்; பிறகு தயங்கினாள்; பிறகு மெதுவாக அவன் பரந்த மார்பில் சாய்ந்து கொண்டு, அவன் முகவாயை அன்புடன் பற்றினாள். கண்கள் மின்னலைப் போல் பளிச்சிட்டன.

"பிறக்கும்போதே உங்களிடம் சாகசமும் பிறந்து விடுகிறது."

"விஷயத்தைச் சொல்லேன்!"

"நீங்கள்தானே என் தெய்வம்?" என்று கேட்டாள் கௌரி.

"மண்ணாங்கட்டி!" என்றான் அவன்.

கௌரியின் குரல் கமுகமுத்தது. "நீங்கள் நன்றாக இருந்தால்தானே நானும் நன்றாக இருப்பேன்?"

"எனக்கு என்ன குறைச்சல் இப்போது?" என்றான் தணிகாசலம்.

"நீங்களும் எனக்குத் தாலி கட்டிய நாளாய் ஒரு குறையும் வைக்கவில்லை. இனியும் என்றைக்கும் நீங்கள் என்னை நன்றாக வைத்துக் கொள்வீர்கள். சாகும்வரையும் எனக்குக் குறையே இருக்காது."

"நினைப்பதைச் சொல், கௌரி!"

"உங்கள் மனம் எனக்குத் தெரியும்: அது பத்தரை மாற்றுத் தங்கம். உங்களால் யாருக்குமே துரோகம் செய்ய முடியாது. என் தாலி செய்த பாக்கியத்தை நான் எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறேன்."

தன் கழுத்தில் தொங்கிய தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் கௌரி. பிறகு தன்னுடைய உதடுகளிலும் ஒற்றிக் கொண்டாள். அந்தச் செயலைக் கண்ட தணிகாசலத்துக்கு ஒரு கணம் உடம்பு புல்லரித்தது.

கௌரியே மீண்டும் பேசினாள். "குழந்தை போனதற்காக நான் கவலைப் படவில்லை. அவளே திரும்பவும் வந்து நமக்குப் பிறக்கப் போகிறாள்.— ஆனால்

நீங்கள் இப்படி மனத்தைச் சிதற விட்டுக் கொண்டிருந்தால் நான் எப்படிச் சுகமாக வாழ முடியும்?''

தணிகாசலம் பதில் சொல்லவில்லை.

''உங்களை நான் தப்பாக நினைக்க மாட்டேன். உமாவிடம் உங்களைப் போல் வேறு யாருமே இவ்வளவு உயர்ந்த தன்மையோடு பழகியிருக்க முடியாது. — கட்டிய பெண்டாட்டியை நீங்கள் கைவிடுவீர்கள் என்று நான் கனவிலும் நினைத்ததில்லையே!''

தணிகாசலம் அவள் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டான். ''உன்னைப் போல் வேறு எவளாவது அவனுக்கு இத்தனை உரிமை கொடுத்திருப்பார்களா?''

அதை அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''உங்களுக்கு அடிக்கடி மூக்கின் மேல் முன்கோபம் வருகிறதே. அதற்கு நான் காரணம் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

''என்னவாம்?''

''உங்களால் என்னையும் வெறுக்க முடியவில்லை; அவளையும் வெறுக்க முடியவில்லை. அதனால்தான் எடுத்ததற்கெல்லாம் இரண்டு பேர்கள் மேலும் எரிந்து விழுகிறீர்கள். என்னைவிட நீங்கள் அவளைத்தான் கொடுமைப் படுத்துகிறீர்கள். கொடுமைப்படுத்தினாலாவது உங்களை அவள் மறந்து விடுவாளா என்று பார்க்கிறீர்கள். — எனக்காகத்தானே அவள் உங்களிடம் சிரமப்படுகிறாள்?''

தணிகாசலத்துக்குக் கௌரி இப்படிப் பேசுகிறாளா, அல்லது ஏதாவது மோகினித் தெய்வந்தான் அவள் உருவத்தில் வந்து தன்னிடம் பேசுகிறதா என்ற சந்தேகம் வந்து விட்டது. நேரமும், காலமும், சுற்றுப்புறமும், சூழ்நிலையும் அவன் சந்தேகத்தை வளர்த்தன. ''நீ கௌரிதானே?'' என்று மிகுந்த வியப்புடன் கேட்டான்.

''கௌரியேதான்!'' என்று சிரித்தாள் அவள். ''நானும் அத்தையும் உங்களுக்கு உமாவைக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறோம். நான் போய்க் கேட்கும்போது, அந்த வீட்டில் யாராவது, வாய்திறந்து, 'முடியாதெ'ன்று சொல்லட்டும்பார்க்கிறேன்! அவளுக்குத் தன்னைப்பற்றி முடிவு செய்யும் வயது வந்து விட்டது. இனித் தடுப்பதுயார்?''

''என்ன!'' தணிகாசலம் இதைக் கேட்டு அயர்ந்தே போனான். பெற்ற குழந்தையைப் பறி கொடுத்த பெண் ஒருத்தி பேசுகிற பேச்சா இது? இந்தத் தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் இத்தகைய உத்தமி பிறந்திருப்பாளா?

''விளையாட்டுப் பேச்செல்லாம் வேண்டாம்; முடியவே முடியாது; அவளும் இதற்குச் சம்மதிக்கவே மாட்டாள்'' என்றான் தணிகாசலம்.

''முடியாதென்று நீங்கள் சொல்வது கிடக்கட்டும். அவள் ஏன் சம்மதிக்க மாட்டாள்? நீங்கள் இரண்டு பேருமே அதனால் நான் கஷ்டப்படுவேனோ என்று தான் பயப்படுகிறீர்கள். எனக்கே இல்லாத பயம் உங்களுக்கு எதற்கு?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை; அவள் மூளையில் கொஞ்சம் கோளாறு இருக்கிறது. அவள் தன்னை ஆண்டாளாகவும் என்னைக் கண்ணனாகவும் நினைத்துக் கொண்டு அவஸ்தைப்படுகிறாள். மனத்



திலே என்னை வைத்துப் பூசை செய்யும் படி நான் ஒன்றும் பெரிய மகானல்ல. அந்த முட்டாளுக்கு என்ன சொன்னாலும் இதெல்லாம் விளங்கவில்லை.''

''எல்லாம் கழுத்தில் ஒரு தாலி ஏறினால் அவள் வழிக்கு வந்து விடுவாள்'' என்றாள் கௌரி.

''ஏ, முட்டாள்! நீ சற்று நேரம் சும்மாயிருக்க மாட்டாயா?'' என்று பலமாகக் கத்தினான் தணிகாசலம்.

''பெண்களைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அவர்கள் இதயத்தில் வளர்ந்து வரும் ஆசைகளைப் பற்றி உங்களால் புரிந்து கொள்ள முடியுமா? 'கடல் ஆழத்தைக் கூடப் பார்த்து விடலாம். இந்தப் பெண்களின் மன ஆழத்தைப் பார்க்க முடியாது' என்று வழங்கும் பழமொழியை நீங்கள் கேட்டதில்லை? பெண்களின் இதயம் எவ்வளவு ஆழமானதோ, உறுதியானதோ, அதே

போல் மிகவும் மென்மையானது. அந்த இதயங்களின் துடிப்பை நிறுத்திவிடாதீர்கள். அதை வாட விட்டுவிடாதீர்கள். இதையெல்லாம் நீங்கள் எங்கே உணரப் போகிறீர்கள்? உங்களுக்கு வெறும் பொய்க் கதைதான் எழுதத் தெரியும்! இல்லாததும் பொல்லாததுமாய் எழுதிப் படிக்கிறவர்களை யெல்லாம் ஏமாற்றுகிறீர்கள். உமாவும் என்னைப் போல் பெண்பிள்ளைதானே! பருவம் நிறைந்த மங்கைதானே! அவளுக்கும் என்னைப் போல் ஆசைகள் இல்லாமல் இருக்குமா? ஏதோ என்னுடைய தங்கை யென்று நினைத்துச் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, உங்கள் முரட்டுத்தனத்துக்கும் முன்கோபத்துக்கும் பயந்து கொண்டு, தன் ஆசைகளை அழித்துக் கொண்டு வாழ்கிறாள். அவளைத் தவிர, என்னைத் தவிர, வேறு எவனாவது உங்களோடு ஒருநாள் கூடக் காலங் கழிப்பதற்கு முடியுமா?''



''மண்டுவாக இருந்த உன்னையும் உமா கெடுத்து விட்டாளே! இவ்வளவு தூரம் பேசுவதற்கு நீ எங்கே கற்றுக் கொண்டாய் கௌரி?''

''இதெல்லாம் கிடக்கட்டும். பட்டணத்துக்குப் போனவுடன் நானே உங்கள் கையில் தாலியைக் கொடுத்து அவள் கழுத்தில் கட்டச் சொல்லப் போகிறேன். சம்மதந்தானே?''

பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தான் தணிகாசலம். இரவு வேளைகளில் கணவனும் மனைவியும் தனியாகப் பேசுகிற பேச்சு பகல் வேளைகளில் மறந்து போகக் கூடிய பேச்சு என்பது அவன் எண்ணம். ஒரு மனைவியோ கணவனோ காணக்கூடாத கனவு இது! பேசக் கூடாத பேச்சு இது! ஆனால் இது வெறும் பேச்சாகவும் தோன்றவில்லை. தன் தாயார், தன்னுடைய மன நிலையைப் பார்த்து விட்டு இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று நினைத்தான். உமாவே இதற்குச் சம்மதிக்க மாட்டாள். பினாட்டோ என்ற மேல் நாட்டு அறிஞர் ஒருவர் எழுதிய எழுத்துக்களை நம்பி மன வாழ்வு வாழ விரும்பும் விசித்திரப் பிறவி அவள். அவளுடைய காதல் விநோதமானதொரு திரிசங்கு சொர்க்கக் காதல்!

வெள்ளி முளைத்தவுடன் அவர்கள் தங்கள் அறைக்கு வந்தார்கள். தணிகாசலத்திடம் கௌரியின் பேச்சு அற்புதமானதொரு மாயக் குளிகையாக வேலை செய்தது. அடித்துப் போட்ட மாதிரி, இத்தனை நாள் உறங்காத உறக்கமெல்லாம் ஒன்று சேர்த்து உறங்கினான். கண் விழிக்கும்போது பகல் பத்து மணி.

மத்தியானம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அவர்கள் தென்காசி ரயிலடிக்குப் புறப்பட்டார்கள். புறப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் தணிகாசலத்துக்கு ஒரு கடிதம் வந்தது. கையெழுத்தையும் முத்திரையையும் பார்த்தான். சென்னையிலிருந்து உமா எழுதியிருந்தாள். அருகில் பெரியவர் மாணிக்கவாசகம் வந்து கொண்டிருந்ததால், தன் பரபரப்பை அடக்கிக் கொண்டு, சட்டைப் பைக்குள் கடிதத்தை மடித்து வைத்தான். கடிதத்தைப் பிரித்துப் படிப்பதற்காகவே ரயில் சீக்கிரம் கிளம்ப வேண்டுமென அவன் வேண்டிக் கொண்டான்.

ரயில் நகர்ந்தது. கரிப்புகை கண்களில் மோதியதைச் சட்டை செய்யாமல் உறையைக் கிழித்தான். படித்தான். கடிதத்தின் வரிகள் அவன் அடிவயிற்றை முறுக்கிப் பிழிந்தன. பேசாமல் கல்யாணி அம்மாளிடம் அதைக் கொடுத்து விட்டு நீண்டு கிடந்த பெஞ்சியில் தொப்பென்று சோர்ந்து விழுந்தான். குப்புறப் படுத்துக் கொண்டான்.

கல்யாணி அம்மாளும் கௌரியும் கடிதத்தை ஒன்றாகப் படித்தார்கள். பையன் பரமசிவமும் அதைப் பற்றித் தன்னிடம் இழுத்தான். ''பொறுமை யில்லையே, உமா!'' என்று கத்தினாள் கௌரி. ''இன்னும் ஒரு நாள் பொறுக்கக் கூடாதா? அடி, பாவி!'' என்று அலறினாள் கல்யாணி அம்மாள்.

பொறுமையற்ற மனிதர்களைச் சுமந்து கொண்டு, பொறுமையற்ற மனிதர்களைச் சந்திப்பதற்காக, பொறுமையற்ற வேகத்தில் ரயில் சென்னையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. பொறுமையின் திரு உருவமான கௌரி என்ற பெண் தெய்வத்துக்குக்கூட அந்தக் கடிதத்தைக் கண்டபிறகு மனத்தில் சிறிதும் பொறுமை யில்லை.

(தொடரும்)


ராம்தீர்த் யோகாஸ்ரமத்தின் சில செயல்கள்
At the time of lecture :
டைரக்டர் : ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி
ராம்தீர்த் பிராமி ஆயில் – ஸ்பெஷல் செ. 1
கூந்தல் தைலம், மூளைக்கு ஔஷதம், கண்களுக்கும் ஞாபகசக்திக்கும், ஆழ்ந்த நித்திரைக்கும், உடல் வலியைப் போக்குவதிலும், ராம்தீர்த் பிராமி ஆயில் யாவருக்கும், எக்காலத்தும் உகந்தது. கிடைத்தற்கரிய பலவித மூலிகைகளினால் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட ராம்தீர்த் பிராமி ஆயில் இப்பொழுது எல்லா இடங்களிலும் புதிய பாட்டிலில் கிடைக்கிறது.
பெரிய பாட்டில் விலை ரூ. 4/-; சிறியது ரூ. 2/-
எங்கும் கிடைக்கும்
SHRI RAMTIRTH YOGASHRAM, DADAR, BOMBAY – 14.



காரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை!
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

செல்வமும் சுதந்திரமும்

கு. சந்தானம்

4. இயந்திர சகாப்தத்தின் செல்வ உற்பத்தி

விவசாய சகாப்தத்தில் நிலமே செல்வத்தின் முக்கிய சொரூபம். அவ்வாறே இயந்திர சகாப்தத்தில் இயந்திரமே அதன் பிரதான சொரூபமாகின்றது. ஆதலால் அதன் முதல் செல்வப் பிரச்னை, இந்த இயந்திரங்கள் யாருக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்பதே. இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்குச் சொந்தமாவதே நியாயமென்று நினைக்கலாம். ஆனால் இயற்கைச் சக்தியால் வேலை செய்யும் இயந்திரங்கள் ராட்டை போல் ஒருவர் இருவரால் செய்யக்கூடியதல்ல. பலர், பல காலம் மிருந்த பொருள் செலவழித்து அனேக பரீட்சைகள் செய்து தயாராக வேண்டும். முதலாளியும் விஞ்ஞானியும், தொழிலாளியும் மாதக் கணக்காகவும், வருஷக் கணக்காகவும் முயற்சி செய்ய வேண்டும். அச்சமயத்தில் அவர்களுடைய குடும்பங்கள் சம்ரட்சிக்கப்பட வேண்டும். முயற்சிகள் பலிக்காவிட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்தைத் தாங்க வேண்டும். ஆதலால் இயந்திரம் தனி முதலாளிக்கோ, முதலாளி ஸ்தாபனத்துக்கோ, சமூகத்திற்கோ சொந்தமாவதைத் தவிர வேறு வழியில்லை. இயந்திர சகாப்தத்தின் ஆரம்பத்தில் பல தனி முதலாளிகள் இயந்திரங்களின் சொந்தக்காரர்களானார்கள். இயந்திரங்களின் சூட்சமங்களும் விலைகளும் அதிகரித்து, இக்காலத்தில் பெரிய இயந்திரங்களெல்லாம் முதலாளி ஸ்தாபனங்களிடமே இருந்து வருகின்றன. இதற்குப் பொதுவாகக் கம்பெனி என்று கூறுவார்கள். ஒவ்வோர் கம்பெனியும் ஒன்றிரண்டு மனிதரின் ஆதிக்கத்தில் இருக்கும். தங்களைச் சேர்ந்தவரின் பலத்தாலோ, பங்குதாரர்களின் நம்பிக்கையாலோ அவர்கள் தங்கள் இஷ்டப்படி இயந்திரசாலையை நடத்த அதிகாரம் பெற்று வருகின்றனர். இவ்வித கம்பெனிகள் பல ரகங்களாக இருந்தபோதிலும், பெரிய கம்பெனிகள் சிறிய கம்பெனிகளைப் படிப்படியாக விழுங்கி வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இயந்திரசாலைகளின் பெரும்பான்மை 500 கம்பெனிகளின் சொந்தமாக இருக்கிறதென்று கணக்கிட்டிருக்கின்றனர். பிரிட்டன் முதலிய தேசங்களிலும் இதே முறையில் செல்வம் உற்பத்தியாகி வருகிறது.

இயந்திர சகாப்தத்தில், பெரும்பாலான மக்கள் நகரங்களில் வாழ்ந்து இயந்திர சாலைகளில் தொழில் புரிவதைவிட வேறு வழியில்லை. ஆதியில் இவர்களை வேலையில் அமர்த்துவதும், கூலிகளையும் சம்பளங்களையும் நிர்ணயிப்பதும், வேலையை விட்டு நீக்குவதும் முதலாளியின் ஏதேச்சாதிகாரத்திலேயே இருந்தன; ஆனால் மெதுவாகத் தொழிலாளர்கள் ஒன்று கூடிச் சங்கம் வைத்து, வாதாடி, வேலைநிறுத்தம்செய்து, சட்டத்தின் மூலமாகவும், ஒப்பந்த வாயிலாகவும் பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருக்கின்றனர். இக்காலத்தில் தொழிற்சாலையில் எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும், எந்தக் குறைந்த கூலி கொடுக்கவேண்டும், எவ்வளவு விடுமுறை நாட்கள், தொழிற்சாலையில் அபாயத்துக்குள்ளானவர்களுக்கு என்ன உதவி கொடுக்க வேண்டும், சுகாதாரத்துக்கு எவ்வித வசதிகள் தேவை, நோய்வாய்ப்பட்ட பொழுதும், மாதர்களின் கர்ப்ப காலங்களிலும் முதலாளியின் கடமை என்ன என்கிற விஷயங்களெல்லாம் சட்டபூர்வமாக நிர்ணயம் செய்யப்படுகின்றன.

* * *

இயந்திர சகாப்தத்தில் முதலாளிகளும் தொழிலாளிகளும் தனி வகுப்புகளாகப் பிரிந்து விடுவார்கள், முதலாளிகளின் செல்வம் ஓயாமல் வளர்ந்து வரும், தொழிலாளிகள் என்றும் அடிமையாக இருப்பார்கள், முடிவில் தமது இன்னல்களைப் பொறுக்கமாட்டாமல் தொழிலாளிகள் புரட்சி செய்து தொழிற்சாலைகளைப் பொதுச் சொத்தாக்கிப் பொதுஉடைமை சமூகத்தை நிலைநிறுத்துவார்கள் என்று மார்க்ஸ் போதித்தார். அவரது போதனைகளை அடிப்படையாகக் கொண்ட சோவியத் ருஷ்யா, போலந்து, செக்கோஸ்லோவிகியா முதலிய ஐரோப்பிய நாடுகளிலும், சைனாவிலும் எல்லாத் தொழிற்சாலைகளும் சர்க்கார் சொத்தாக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரண்டுக்கும் நடுவில் லண்டன், பிரிட்டன் முதலிய நாடுகளில் பொதுநலக் கட்சிகள் தோன்றி (சோஷலிஸ்டு கட்சிகள்) ஜனநாயக முறையில் மெதுவாகச் சட்டம் செய்து தொழிற்சாலைகளைப் பொதுச் சொத்தாக்க வேண்டுமென்று திட்டம் போட்டு ஓரளவு அப்படியே செய்திருக்கின்றன.

இயந்திர சகாப்தத்தில் செல்வ உற்பத்தி இம்மூன்று முறைகளில் ஒன்றில்தான் இருக்கும். இயந்திரசாலைகளில் வேலை செய்யும் தொழிலாளியைப் பொறுத்த வரையில் அதிக வித்தியாசமில்லை. அமெரிக்கா போன்ற சுத்த முதலாளி சமுதாயத்தில் தொழிலாளிக்கு அதிகக் கூலியும் சலுகையும் கிடைக்கக்கூடும். இதன் காரணமாகவே, அமெரிக்கத் தொழிலாளர் பொதுஉடைமையை வெறுக்கின்றனர். பொது உடைமை நிலவியுள்ள சமுதாயங்களில் தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமையில்லை, தொழில் சங்கங்கள் அநேகமாகச் சர்க்கார் ஸ்தாபனங்களாக இருந்து தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தி அவர்களிடமிருந்து மிதமிஞ்சிய வேலை வாங்குவதற்கே உபயோகப்படுகின்றன.

இயந்திரத்தைக் கொண்டு வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் தன் ஊதியத்தைக் காட்டிலும் பன்மடங்கு செல்வ உற்பத்தி செய்கிறான். இதில் ஒரு பாகம் இயந்திரத்தைப் பராமரிப்பதற்கும், அதன் காலமான பிறகு புது இயந்திரம் மாற்றுவதற்கும் உபயோகப்படுகின்றது. மீதியைப் பொது நலத்துக்கும், முதலாளியின் சுகத்துக்கும் உபயோகிக்கலாம். முதலாளித்துவ நாடுகளில் முதலாளிகளின் லாபத்தில் பெரும் பாகம் வரியாக வசூலிக்கப்பட்டுச் சமூக நலத்துக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. முதலாளி ஸ்தாபனங்களின் பங்குதாரர்களுக்கு மீதி லாபமே கிடைக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கும் பங்கு சிறிதாக இருந்தாலும், (100க்கு 10 லிருந்து 20 வரையிலென்று கணக்கிடப்படுகிறது) தொகை பெரிதாகிச் சில முதலாளிகள் கோடீசுவரர்களாகி விடுகின்றனர். அவர்கள் தேவையில்லை. தொழிற்சாலைகளைப் பொதுச் சொத்தாக்கி விட்டால் இந்தப் பாகமும் பொதுநலத்துக்குப் பயன்படும் என்று முதலாளித்துவத்தின் எதிரிகள் வாதாடி வருகின்றனர்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மூலம் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை திறமையாக நடக்காது, அதில் லாபம் வராது, சமூகத்துக்கு முதலாளிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் வரியில் ஒரு பாகம்கூடக் கிடைக்காது என்று முதலாளித்துவ வாதிகள் கூறுகின்றனர்.

முதலாளிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர் இருவர்களையும் விலக்கி ஏன் தொழிலாளிகளே தொழிற்சாலைகளை நடத்தலாகாது என்ற பிரச்னையைப் பற்றியும் கடுமையாக வாதிக்கப்படுகிறது. ருஷ்யப் புரட்சியின் ஆரம்பத்தில் இம்முறை கையாளப்பட்டு, தொழிற்சாலைகளில் குழப்பமேற்பட்டு அதைக் கைவிட வேண்டியதாயிற்று. ஒரு பெரிய இயந்திரசாலையை நடத்துவது மிகவும் சிக்கலான காரியம். அதற்குப் புத்தியும் சாமர்த்தியமும் அனுபவமும் வேண்டும். அதன் நிர்வாகிகளுக்குப் பொறுப்பும், அதிகாரமும் அவசியமாகும். இவற்றைப் போதிய அளவில் கொடுக்கக் கூடியமுறை முதலாளித்துவமா, பொது உடைமையா, அல்லது இரண்டும் கலந்த பொதுநல முறையா என்பதை இப்பொழுது முடிவாகக் கூற முடியாது.

முதலாளித்துவத்துக்கும், பொது உடைமைக்கும் மற்றுமோர் பெரிய வித்தியாசம் இருக்கிறது. முதலாளித்துவத்தில் ஒரு சாமானின் உபயோகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் அதனால் கிடைக்கக்கூடிய லாபத்தைக் கவனித்தே தொழிற்சாலைகள் பெருகுகின்றன. அதனால் சமூகத்துக்கு அவசியமில்லாதனவும், தீங்கு செய்யக் கூடிய உணவுகளையும், பானங்களையும், மருந்துகளையும், அலங்காரப் பொருள்களையும் மிதமிஞ்சிய அளவில் உற்பத்தி செய்து, அவற்றின் குணங்களை மிகைப்படுத்தும் விளம்பரங்கள் மூலம் வியாபாரம் செய்கின்றனர். 'தங்களுக்கு என்ன வேண்டும் என்று மக்களுக்குத் தீர்மானம் செய்ய உரிமையுண்டு, அவர்களை நாம் பலவந்தப்படுத்தவில்லை, ஜனங்களின் இஷ்டங்களைப் பூர்த்தி செய்வதே சுதந்திர சமூகத்தின் அறிகுறி அல்லவா?' என்று முதலாளித்துவவாதிகள் வாதாடுகின்றனர்.

மக்களில் பெரும்பாலோர் குழந்தைகள் போன்றவர்கள், அவர்களிடமுள்ள நற்குணங்களைப் பெருக்கி, அவர்களைத் தீமைகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் பாதுகாத்து அவர்களின் சுக வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்வது சமுதாயத் தலைவர்களின் இன்றியமையாத கடமையென்று பொதுஉடைமைவாதிகள் பதிலளிக்கின்றனர்.

எந்தச் சமூகத்திலும் ஒரு சமயத்தில் அதன் முதல் தொகை வரம்புக்குட்பட்டிருக்குமாதலால், அம்முதலை உபயோகிப்பதில் சமூக நலத்தையே நாடுவது தற்காலத்துக்கு மட்டுமல்ல, வருங்காலத்துக்கு அவசியமென்றும் கூறுகின்றனர்.

இவ்விரண்டு வாதங்களுக்கும் நடுவில் நிற்போர், ஜனங்களின் இஷ்டங்களை முற்றிலும் புறக்கணிக்கலாகாது. சமூகத்தின் அவசியத்துக்கு ஏற்பாடு செய்து, தீமையென்று நிச்சயமாகத் தெரிந்த பொருள்களைத் தடுத்து, ஓரளவு மக்கள் மனப்படி பொருளாதாரம் வளரவிடப்பட வேண்டும் என்று கருதுகின்றனர்.

எதிரொலி !




நீடித்த
மணத்திற்கு
ரெமி
ஸ்னோ
&
பவுடர்
Remy
C.S.சரோஜா
AVRA-472

ராமகிருஷ்ண குடில்



பகீரதன்

"தம்பி! உன்பெயர் என்ன?"

"சௌண்டப்பன்."

"உன் தந்தையின் பெயர்?"

"ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்."

"என்ன பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரையா தந்தை என்று சொல்லுகிறாய்?" என்று மிகுந்த வியப்போடு கேட்டேன்.

"ஆமாம்!" என்று நிதானமாகத் தலையை ஆட்டினான் சிறுவன்.

"உன் தாயார் யார்?"

"சாரதாமணி அம்மையார்!"

இந்தப் பதிலைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. 'என்ன அதிசயமான பிள்ளை இது' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டே அருகில் இருந்த வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்றேன். அந்தக் கடையிலிருந்து ஒரு வாழைப்பழத்தை வாங்கி அந்தச் சிறுவனிடம் கொடுத்தேன்.

"எனக்கு வேண்டாம்!" என்று பலமாகத் தலையை ஆட்டினான்.

"சும்மா, சாப்பிடு" என்றேன்.

"வேண்டவே, வேண்டாம்!" என்று பிடிவாதம் பிடித்தான்.

"இந்தப் பழத்தைச் சாப்பிட்டேத்தான் ஆக வேண்டும்" என்று அவனை வற்புறுத்தினேன்.

"அப்படியானால் நூற்று ஏழு வாழைப் பழங்கள் வாங்க வேண்டும்" என்று சிரிக்காமல் சொன்னான் அந்தச் சிறுவன்.

"நூற்றுஏழு பழங்களா? அவ்வளவையும் நீ சாப்பிட்டு விடுவாயா?" என்று கேட்டேன்.

"எனக்கு ஒன்றுதான். மற்றப் பழங்கள் எல்லாம் என் சகோதரர்களுக்கு" என்றான்.

"என்னப்பா எல்லாம் ஒரே புதிராயிருக்கிறது. உனக்கு நூற்றுஆறு சகோதரர்கள் இருக்கிறார்களா? அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்?" என்றேன்.

"இதோ அருகில் இருக்கும் ராமகிருஷ்ண குடிலில்தான்" என்றான் சிறுவன்.

அந்தச் சிறுவனின் முகத்தைப் பார்த்தேன். அடாடா! அது எத்தகைய முகம்! ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் வளர்ந்து வரும் உயர்ந்த பண்புகள் எல்லாம் அந்த முகத்தில் பிரதிபலித்தன. என் மனக்கண் முன்னால் பிரஹலாதனும், துருவனும் தோன்றினார்கள். ஆமாம்; அந்தப் பாலகனுடைய பால் வடியும் முக காந்தி அப்படியெல்லாம் என்னை மயக்கி விட்டது.

இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் சாரதாமணி அம்மையும் தான் தன் பெற்றோர்கள் என்று சொல்லிக் கொள்கிறான் அல்லவா அந்தச் சிறுவன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அப்படிச் சொல்லிக் கொள்ள அவனுக்குப் பெற்றோர்கள் கிடையாது. சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கும்போதே அவனைப் பெற்றெடுத்தவர்கள் மறைந்து விட்டார்கள், அவன் அநாதையாகிவிட்டான். எத்தனையோ அநாதைகளைப் போலவே அவனும் வீதியில் அலைந்து திரிந்து கொண்டிருந்திருக்கிறான். தேம்பித் தேம்பி, விம்மி விம்மி, கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்திருக்கிறான்.

இதயமுள்ள மனிதர் ஒருவர் அவனைப் பார்த்திருக்கிறார். அவர் என்ன கேட்டாலும் அழுதுகொண்டே இருந்திருக்கிறான். "உன் அப்பா யார்? அம்மா யார்?" என்று கேட்டபோதும் மனம் குமுறும் அழுகைதான் அவனிடமிருந்து பதிலாக வந்ததாம்.

ஐயோ! அந்தச் சின்னஞ்சிறு குழந்தை இரக்கமற்ற மனிதர்கள் மத்தியில் என்னென்ன கொடுமைகளையெல்லாம் அனுபவித்ததோ! என்னென்ன துன்பங்களை அனுபவித்ததோ! யாருக்குத் தெரியும்?

கடையில் அந்த உத்தம மனிதர் குழந்தையைத் தம்முடன் அழைத்து வந்து திக்கற்ற குழந்தைகளுக்காக நடத்திவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் சேர்த்து விட்டார்.

இந்த அநாதைப் பிள்ளையைத்தான் திருச்சிக்கு அருகில் உள்ள திருப்பராய்த்துறை 'ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்' என்னும் ஸ்தாபனத்தில் பார்த்தேன். அவனுக்கு இப்பொழுது ஒன்பது வயது இருக்கும். இப்பொழுது அவன் அழுதுகொண்டிருக்கவில்லை. தான் அனுபவித்த கஷ்டம் ஒன்றும் அவனுக்கு நினைவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலுக்கு வந்து சேர்ந்ததைக்



விநோபா அவர்கள் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் ஒரு நாள் தங்கினார். அப்போது குருகுல மாணவர்களின் வ்யவசாயப் பகுதியில் மாஞ்செடி ஒன்றை நட்டுக் குடிலுக்குத் தம்முடைய வாழ்த்தையும் அளித்தார்.

கூட அவன் மறந்துபோய் ஸ்ரீராமகிருஷ்ண குடிலுடனே ஒன்றிப் போய் விட்டான்.

இவனைப் போன்ற இன்னும் நூற்றுஆறு பேர்கள் திருப்பராய்த்துறை 'ஸ்ரீ ராம கிருஷ்ண குடி'லில் வளர்க்கப்படுகிறார்கள். இந்த நூற்றுஏழு பிள்ளைகளைப் பார்த்தால் அவர்கள் முகங்களும் கண்களும் எத்தனை எத்தனையோ சோகக் கதைகளைச் சொல்லு கின்றன. சொல்ல முடியாத, விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்த அனுபவம் அந்தப் பால்வடியும் பாலகர்களுடைய முகங்களிலும் கண்களிலும் காணப்படுகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் இந்த அநாதைப் பிள்ளைகள் அன்னமிட்டு வளர்க்கப்படுகிறார்கள்; கல்வி கற்பிக்கப்படுகிறார்கள்; தமிழ் நாட்டின் மிக உயர்ந்த பண்பாடுகளையெல்லாம் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். வாழ்க்கைக்கு உதவாத வெறும் ஏட்டுச்சுரைக்காய்க் கல்வி அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. காந்தி மகான் காட்டிய ஆதாரக்கல்வி அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீராம கிருஷ்ண தேவர் காட்டிய உயர்ந்த ஆன்மிகக் கல்வி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்த நவீன விஞ்ஞான காலத்துக்கு வேண்டிய தொழிற் கல்வியும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த நாட்டின் எதிர் காலத்தை மாற்றி யமைக்கும் நம்பிக்கையுள்ள திட இதயத்தை அவர்கள் பெறும் படியான ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் அவர்கள் பயின்று வருகிறார்கள்.

*** *** ***

திருச்சி நகரம் அரசியலில் மட்டும் பெயர் போனதல்ல. மலைக்கோட்டைக்கும் பெயர் போனது. மிகச் சிறந்த தேச ஊழியர்களைப் பெற்றெடுத்ததனாலும் திருச்சி பிரசித்தி அடைந்திருக்கிறது. திருச்சிக்கு அருகில், திருச்சி ஈரோடு சாலையில் புசம் வாய்ந்த திருப்பராய்த் துறை என்றும் புண்ணிய ஸ்தலம் இருக்கிறது. அப்பரும் சம்பந்தரும் மாணிக்கவாசகரும் அருணகிரி நாதரும் பாடிப் பரவியஸ்தலம். பராய் வனத்தைத் திருத்திக்கோயிலெழுப்பிய ஸ்தலம். துலா மாதத்திலே பராய்த் துறைநாதரைவணங்கி காவேரி ஆற்றில் மூழ்கி அல்லலைப் போக்கி ஆண்டவனின் அருளைப் பெற்று மக்கள் ஆனந்த மடைகின்றனர் என்பதைச் சரித்திரத்தில் சுவையுள்ளவர்கள் அறிந்திருக்கலாம். அப்பேர்ப்பட்ட திருப் பராய்த்துறையில் பகவான் ராமகிருஷ்ணரின் புனிதமான திரு நாமத்துடன் விளங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் சென்ற ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. சென்னை ராஜ்ய கவர்னர், பாரதத்தின் ராணுவ தளபதிகள், மந்திரிமார்கள், நீதிபதிகள், காங்கிரஸ் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், நிர்மாணத் தொண்டர்கள் பலர் இந்த அருமையான ஸ்தாபனத்துக்குச் சென்று பார்வையிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

''சங்கரருடைய அத்வைதக் கருத்து, மத்வர், இராமாநுஜருடைய பக்திக் கருத்து, இவேகநாதருடைய சேவைக் கருத்து, இம் மூன்றையும் ஒருங்கே திரட்டி அமைந்தது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சித்தாந்தம். ஆனால் இந்த ஸ்தாபனத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் சாந்நித்யத்துடன் மகாத்மாகாந்தியினுடைய கருமயோக சக்தியும் ஒருங்கே குடிகொண்டு உறைவதைக் காண்கிறேன். மிகமிக மகிழ்ச்சி. ஆகையால் பொறுப்புகள் அதிகம். இதிலிருந்து ஏராளமான தொண்டர்கள் நாட்டுக்குச் சேவை செய்ய வெளியேறப்போகிறார்கள். அதனுடைய ஜோதி குறைந்தது ஐம்பது மைல் சுற்றளவில் உள்ள இடங்களுக்குப் பரவியாகவேண்டும்'' என்று ராமகிருஷ்ண குடிலைப் பார்த்துவிட்டு ஸ்ரீ விநோபா பாவே அவர்கள் போற்றிப் பாராட்டியிருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்குள் பிரவேசிக்கும் போதே ஒரு உன்னத லட்சியங்கள் நிறைந்த புனிதமான உலகத்துக்குள் பிரவேசிக்கிறோம் என்ற உணர்ச்சிதான் உண்டாகிறது. குடிலின் பிரதான வாசலை அடைவதற்குள் இரண்டு வாய்க்கால்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. ராம வாய்த்தலை வாய்க்கால்களைத் தாண்டியதும் பசுங்கொடிகளும், செடிகளும் படர்ந்த இயற்கைச் சுவர்களுக்கு மத்தியில் குறுகிய பாதை செல்கிறது. அங்கே ஆறு வயது முதல் பதினைந்து வயதுவரையுள்ள பாலகர்கள் ஒரே விதமான உடை அணிந்து வரிசையாக நின்று வரவேற்பு அளிக்கின்றனர். அவர்கள் அணிந்

துள்ள நீலநிறக் கால்சட்டையும், வெள்ளைநிற மேல் சட்டையும், நெற்றியில் பளீரென்று துலங்கும் விபூதியும் சந்தனப் பொட்டும், நம்மைக் கவர்கின்றன.


உள்ளே சென்றால் சுமார் பத்து ஏக்கர் நிலத்தில் இனிய இயற்கைக் காட்சிகளிடையே அமைந்திருக்கும் பல்வேறு ராமகிருஷ்ணக் குடில் கட்டடங்கள், பழைய பாரத நாட்டில் வாழ்ந்த மகரிஷிகளின் ஆசிரமங்களைக் குறித்து இதிகாசங்களில் படித்திருக்கிறோமே, அவற்றை நினைவூட்டி நம்மை மகிழ்விக்கின்றன.

இந்த ஸ்தாபனத்துக்கு ஸ்ரீராமகிருஷ்ணகுடில் என்று பெயர் வைப்பதற்குக் காரணமாக அமைந்த ராமகிருஷ்ண குடில் கட்டடம் முகப்பிலேயே இருக்கிறது. இந்தக் கட்டடத்துக்குள் ஐந்தாண்டுகள் அமர்ந்து கடும் தவம்செய்து ஆண்டவன் அருள்பெற்று ஆரம்பிக்கப்பட்டதுதான் ராமகிருஷ்ண குடில். அதைப் பார்த்தால் கல்லும் சுண்ணாம்பும் கொண்டு கட்டிய சாதாரணக் கட்டடம் போலவே தெரியவில்லை. அதன் கலை அழகும் தூய்மையும் நம்மை எங்கோ கொண்டு சென்று விடுகின்றன. மனத்துக்குள் இனம் தெரியாத ஒரு இன்பமும் சாந்தமும் ஏற்பட்டு விடுகின்றன.


அந்தக் குடிலின் ஒரு புறத்தில் அமைந்திருக்கும் புனிதமான, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆலயமும், ஆங்காங்கு சுவரில்மாட்டியிருக்கும் படங்களும் அழகுக்கு அழகு செய்வதாய் அமைந்திருக்கின்றன.


காவேரிக் கரையின் இயற்கை வளத்தைப் பற்றி அதிகமாக எடுத்துக் கூற வேண்டியதில்லை. தென்னை வாழை, பலா, மா, மலர் குலுங்கும் மரங்கள், காய் கறிகள் முதலியவைகள் பரவலாகக் காணப்படுகின்றன. குடிலுக்குப் பின்னால் அகண்ட காவேரி ஆனந்தமாக ஓடுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலை அமைந்திருக்கும் இடத்துக்கு அருகில் தான் காவேரி ஆறு முதன் முதலில் பிரிய ஆரம்பிக்கிறது. ஸ்ரீ ரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும்











1. ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயமும், குருகுல மாணவர் விடுதியும். 2. ராமகிருஷ்ண குடில் மாணவர்கள் ஆதாரப் பயிற்சி முறையில் விவசாயப் பகுதியில் பலவிதமான விவசாய வேலைகளைச் செய்து வருகிறார்கள். 3. மாணவர்கள் வரிசை வரிசையாக அமர்ந்து ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்கின்றனர். 4. ஆதாரப் பள்ளி முறையில் மாதம் ஒருமுறை நடைபெறும் பாலர் சட்டசபை கூடுகிறது. சபாநாயகர் பேசிக்கொண்டிருக்கிறார். 5. மாணவர்களே பரிமாற மாணவர்கள் சாப்பிடுகின்றனர்.

ஸ்ரீரங்கத் தீவும் இங்குதான் ஆரம்பமாகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலுக்கு முன்னால் ராம வாய்த்தலை என்று இரண்டு வாய்க்கால்கள் ஓடுகின்றன. அதன் கரைகளில் மலர் குலுங்கும் மரங்களும் கொடிகளும் வேறு இருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலுக்கு, சின்னஞ் சிறு பிள்ளைகள் இருந்து கல்வி பயிலும் குருகுலத்துக்குத் தகுந்த சூழ்நிலை இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்க முடியும்?

தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்த நூற்று ஏழு உண்மையான அநாதைக் குழந்தைகள் இந்த ராமகிருஷ்ண குடிலில் ஆதாரக் கல்வியைப் பயின்று வருகிறார்கள். எல்லாக் குழந்தைகளும் குடிலிலே உணவும், உடையும் பெற்று அங்கேயே வசித்து வருகிறார்கள். ஆண்டு முழுவதும் எங்கும் போகாமல் அங்கேயே தங்கிக் கல்வி பயின்று வருகிறார்கள். குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்வதற்கு வேண்டிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் ராமகிருஷ்ண குடிலிலேயே இருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் குழந்தைகளுக்கு அளிக்கும் கல்வி வெறும் ஆடம்பரக் கல்வி அல்ல, ஏட்டுச் சுரைக்காய் அல்ல என்பதை அங்கு நேரிலேயே கண்டேன். குடிலில் இருக்கும் நூற்று ஏழு பேர்களுக்கு வேண்டிய கறிகாய்கள் எல்லாம் அங்கேயே பயிராகின்றன. குழந்தைகளின் பிஞ்சுக் கைகளே பயிர்களுக்குத் தண்ணீர்விடுகின்றன. குடிலுக்குச் சொந்தமான ஏழு ஏக்கர் நன்செய் நிலங்களும் மாணவர்களாலேயே உழுது பயிரிடப்படுகின்றன. மாட்டுப் பண்ணையிலுள்ள மாடுகளையெல்லாம் அவர்களே பேணிப் பாதுகாக்கிறார்கள். மரச் சக்கியின் மூலம் நெல்லை உடைத்து அரிசி எடுக்கிறார்கள். சமையல் செய்கிறார்கள், பரிமாறுகிறார்கள். மற்றும் நூற்றல், நெசவு, தையல் முதலிய தொழில்களும் செய்கிறார்கள். இந்தத் தொழில்களையெல்லாம் அவரவர்கள் வயதுக்குத் தக்கபடி பயில்கிறார்கள். தொழில்களின் மூலமாகவே உயர்ந்த கல்வி அறிவையும் பெறுகிறார்கள்.

பாரத நாட்டின் முன்னேற்றத்துக்காக, இந்திய மக்களின் உயர்வுக்காக காந்தி மகான் வகுத்த திட்டங்களில் ஒன்று ஆதாரக் கல்வி. உயிரையும் உள்ளத்தையும் அறிவையும் ஆன்மாவையும் சிறைப்படுத்தியிருக்கும் மெக்காலே கல்வித் திட்டத்தில் ஊறி வளர்ந்தவர்கள் காந்தி மகானின் கல்வித் திட்டத்தை அறிந்துகொள்வது அவ்வளவு எளிதன்று. அப்படி அறிந்து கொண்டாலும் அதைக் காரியத்தில் நடத்திவைத்தல் அவர்களுக்கு மிகவும் கடினமான காரியம்.

காந்தி மகானிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டு, அவர் பணித்த தொண்டுகளுக்கே உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்தவர்களால்தான் காந்தி மகான் வகுத்த கல்வித் திட்டத்தை அறிந்து நடத்தி வைக்க முடியும்.

அத்தகைய மகாத்மாவின் அத்தியந்த சீடர்களில் ஒருவர் ஸ்ரீ பிரமச்சாரி ராமசாமி அவர்கள். ''பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற இப் பிறவியிலேயே கடவுளை அறிய வேண்டும்'' என்னும் பகவான் ராமகிருஷ்ணரின் கொள்கையை நன்கு உணர்ந்தவர். ''ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுள். இவர்களுக்கு, கல்வி வசதி இல்லை; கஞ்சி இல்லை; கந்தையில்லை. முன்னேற்றம் அடைவது எப்படி என்பதே அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களை யார் செய்துகொடுப்பார்கள்? யாரொருவர் இந்தமாதிரி ஏழை மக்களின் பொருட்டு நெஞ்சு புண்ணாக வருந்துகிறாரோ அவர்தான் மகாத்மா'' என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கை வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர்.

இந்த மகான்களின் நல்லுபதேசங்களில் யாருக்கு என்ன சந்தேகம் தோன்றினாலும் ஸ்ரீ பிரமச்சாரி ராமசாமி அவர்களுக்குச் சந்தேகமே கிடையாது. இத்தகைய அருமைத் தொண்டர் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலை நடத்தி வருகிறார். இவருக்கு திரு என். ஏ. ரங்கநாத ஐயர் அவர்களும், திரு வை. நடேச பண்டாரம் அவர்களும் தோன்றாத் துணையாகவும் தோன்றும் துணையாகவும் இருந்து எல்லாவிதமான உதவிகளும் அளித்து வருகிறார்கள்.

திக்கற்ற அநாதைக் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது ஸ்ரீ ராமகிருஷ்ணகுடில். ஒரு அநாதைச் சிறுவனை எடுத்துக்கொண்டால் அவனுக்கு அன்னம் அளித்து, ஆடை கொடுத்து, கல்விப் பயிற்சி அளித்து, கைத்தொழில் கற்றுக்கொடுத்து, பண்புடையமென் மகனாக்கி, ஒரு உத்தியோகத்திலோ, தொழில் துறையிலோ அமர்த்தி, அவன் ஆயுள் முழுவதும் அவன் நல்வாழ்க்கைக்கு வழிசெய்து கொடுக்கும் உயர்ந்த திட்டத்தின் அடிப்படையில் ஸ்தாபனம் பணிசெய்து வருகிறது. இது போன்ற உயர்ந்த இலட்சியத்துடன் நல்ல முறையில் செயல்படும் ஸ்தாபனம் தமிழ்நாட்டுக்குள், ஏன்? பாரதநாட்டிலேயே வேறு எங்கும் இல்லை என்று துணிந்து கூறலாம்.


*** *** ***

அன்றொரு நாள் புதுக்கோட்டை சப் ஜட்ஜ் திரு எஸ். மகராஜ பிள்ளையவர்களுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலைப் பார்க்கப்போயிருந்தேன். ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலைச் சேர்ந்த ராமகிருஷ்ண குருகுலத்துப் பிள்ளைகளைப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது. பார்க்க வந்த எங்களைப் பிள்ளைகள் வரவேற்ற முறை மிக்க மகிழ்ச்சி தந்தது. பிள்ளைகள் காவேரியில் குளிக்கும் காட்சி, கண்ணும் கருத்துமாக அவர்கள் கடமை உணர்ச்சியுடன் தங்கள் தங்கள் வேலைகளில் ஒன்றியிருந்த காட்சி, வரிசை வரிசையாக அமர்ந்து நூல் நூற்ற காட்சி, பிரார்த்தனை செய்த காட்சி, சாப்பிட்ட காட்சி எல்லாமே ஆனந்தமாயிருந்தன. நாங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பிள்ளைகள் சுடச் சுட அளித்த பதில்கள் திருப்தியை அளித்தன. அவர்கள் தோட்டமெங்கும் ஓடியாடி விளையாடியது களிப்பை அளித்தது. பள்ளி ஆசிரியர்களைப் பார்க்கப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது. பலன் கருதாமல் தொண்டாற்றிவரும் ஸ்ரீராமகிருஷ்ண குடில் தலைவர் ஸ்ரீ பிரம்மச்சாரி ராமசாமி அவர்களைப் பார்த்துக் கை யெடுத்துக் கும்பிடத் தோன்றியது. மாலை நேரத்தில் மாமரங்கள் சூழ்ந்த திறந்தவெளி அரங்கில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துப் பிள்ளை

கள் பிரார்த்தனை செய்து கொடி வணக்கம் செய்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. மனத்துக்குத் தெம்பையும் நம்பிக்கையும் அளித்தது. இந்த மாணவர்களால் தமிழ் நாடு என், பாரதநாடே உயரத்தான் போகிறது என்றுஎண்ணத்தோன்றியது.

ஆனால் ராமகிருஷ்ண குருகுலம் முதலில் 1954-ம் ஆண்டு ஐந்து மாணவர்களைக் கொண்டு ஆரம்பமாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலத்தில் இன்று நூற்று ஏழு மாணவர்கள் இருக்கிறார்கள். வருஷா வருஷம் மாணவர்களின் தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இப்படியே அந்த ஸ்தாபனம் பெருகிக் கொண்டே போனால் அதைப் போற்றிக் காப்பாற்றுவதற்கு வேண்டிய வருவாய் அதற்கு வேண்டாமா?

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் நடைபெறுவதற்கு உதவி செய்து வரும் அனேகரைப் பற்றி ஸ்ரீ பிரமச்சாரி ராமசாமி அவர்கள் பாரபட்சமின்றிப் பாராட்டிப் பேசினார். அவர் குறிப்பிட்ட பிரமுகர்களின் பெயர்களைக் கேள்விப்பட்டபோது எனக்கு ஒரு ஆறுதல் உண்டாயிற்று. இந்த நாட்டிலுள்ள எந்த மனிதரிடமும் இரக்கமுள்ள இதயம் இருக்கத்தான் செய்கிறது என்பதை வெளிப்படையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.



கால்நடைச் செல்வத்தின் வளர்ச்சியே நாட்டின் சுபிட்சத்தை வளர்க்கும் நல்ல சாதனமாகும். சென்னையில் நடைபெற்ற இரண்டாவது கால்நடைக் கண்காட்சியில் இந்தப் பசு அதிகப் பால் கறக்கும் போட்டியில் பரிசு பெற்றது. இந்தப் பசுவைப் பேணி வளர்த்த ஸ்ரீமதி சிவகாமி குப்புசாமி அவர்களுக்குப் பரிசு கிடைத்தது. ஸ்ரீமதி சிவகாமிக்காக அவரது புதல்வி குமாரி சுதந்திரா சென்னை கவர்னரின் மனைவியார் திருமதி விஷ்ணுராம் மேதி அவர்களிடம் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

*** *** ***

ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலை விட்டுத் திரும்பிய போது இந்த மகத்தான ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தி வரும் ஸ்ரீ பிரமச்சாரி ராமசாமி அவர்களின் மகிமையை எண்ணி வியந்தேன்; எனினும் இப்பேர்ப்பட்ட ஸ்தாபனத்தின் பொறுப்பை ஒரு தனி மனிதரின் தலையிலேயே சுமத்திவிட்டு மற்றவர்கள் எல்லாரும் அவரவர்கள் காரியத்தை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா என்று எண்ணிப் பார்த்தேன். ஸ்ரீராமகிருஷ்ண குடில் நல்ல முறையில் நடைபெறுவதற்குத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும்.

தமிழ்நாட்டின் புகழ் பெற்ற அகண்ட காவிரிக் கரையில் தமிழகத்தின் சிறப்புக்கே உகந்த முறையில் அருமையான ஸ்தாபனமாக இந்த ராமகிருஷ்ண குடிலை நடத்தி வருகிறார்கள். இந்த உயர்ந்த ஸ்தாபனம் ஒவ்வொரு ஆண்டும் பணத் தட்டுப்பாட்டிலேயே நடைபெற்று வருகிறது என்பதைக் கேள்விப்பட்டபோது மனதுக்கு நிம்மதி ஏற்படவில்லை.

இந்த உத்தம ஸ்தாபனத்துக்குத் தாராளமாகப் பொருள் உதவி செய்யக் கூடிய புண்ணியவான்கள், செல்வந்தர்கள் தமிழ் நாட்டில் இல்லாமலா போனார்கள்?

கல்விக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கும் நமது சர்க்கார் இந்த ஸ்தாபனத்துக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான உதவிகளைச் செய்யக் கூடாதா? இந்த ஸ்தாபனத்துக்குப் பண உதவி செய்ய விரும்பும் பஞ்சாயத்துக்களுக்கும் நகரசபைகளுக்கும், தேவஸ்தானங்களுக்கும் அவை விரும்பும் அளவுக்கு வேண்டிய நிதி உதவி கொடுக்கும்படியான வழிவகைகளையாவது சர்க்கார் செய்து தரக்கூடாதா? 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார்' என்பது போல மேற்படி ஸ்தாபனங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலுக்குத் தாராளமாகத் தருமம் செய்ய முன்வந்தாலும் அதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று கொடுப்பதைத் தடுத்து நிறுத்தி விடுகிறார்களாம்! அந்தச் சட்டத்தையாவது சர்க்கார் கொஞ்சம் தளர்த்தி விடக் கூடாதா?

சர்க்கார் ஒருபுறம் கிடக்கட்டும்! மக்கள் மனம் வைத்தால் ஆகாத காரியம் உண்டா?


நிலம் படைத்தவர்கள் நிலமாகவும், பணம் படைத்தவர்கள் பணமாகவும் இன்னும் தங்கள் தங்களிடம் என்னென்ன இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் அள்ளிக் கொடுத்து ஸ்ரீராமகிருஷ்ண குடிலைக் காப்பாற்றுவதற்கு ஒவ்வொருவரும் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த ஸ்தாபனத்துக்கு உதவி செய்வதன் மூலம் மாபெரும் காரியத்தைச் சாதித்த மகிழ்ச்சியை அடையலாம். திக்கற்ற நூற்று ஏழு குழந்தைகளைக் காப்பாற்றிய பங்கில் கலந்து கொண்ட திருப்தியைப் பெறலாம். தமிழ் நாட்டின் உயர்ந்த நாகரிகத்தைப் போற்றிக் காப்பாற்றும் பணியில் கலந்து கொண்ட நல்ல பெயரும் கிடைக்கும்.

தமிழ் நாட்டில் இனி அவல நிலையில் திரியும் அனாதைக் குழந்தைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியே ஆகவே வேண்டும். அதற்காகவாவது திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு உதவி புரியுங்கள்.

ஏட்டுப் படிப்பை மட்டும் கற்றோமே! ஏழைக்கு இரங்கும் அன்பைப் பெற்றோமா?





1. ராமகிருஷ்ண குடிலுக்குச் சொந்தமான ஏழு ஏக்கர் நன்செய் நிலத்தையும் மாணவர்களே உழுது பயிரிட்டு விவசாயக் கலையைப் பயில்கின்றனர்.

2. மாட்டுப்பண்ணை சம்பந்தமான எல்லா வேலைகளிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

3. ஆதாரப் பள்ளியில் நடைபெறும் நூற்புப் பகுதியில் மாணவர்கள்.


4. தையல், தறி நெசவுத் தொழில்களில் மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

5. சமையல் கலையிலும் மாணவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. சமையல் பாத்திரங்களை மாணவர்கள் தேய்த்துச் சுத்தம் செய்கின்றனர்.

6. கறிகாய்கள் நறுக்குவதிலும், சாதம் சமைப்பதிலும் இதர சமையல் வேலைகளிலும் மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

7. சின்னஞ்சிறு குழந்தைகள் மூன்று சக்கர சைக்கிள் வண்டிகளை விட்டு மிகுந்த குதூகலத்துடன் விளையாடுகின்றனர்.

8. ராமகிருஷ்ண குடிலுக்குப் பின்னால் ஓடும் அகண்ட காவேரியில் மாணவர்கள் குதித்து, நீந்தி, விளையாடி நீராடுகிறார்கள்.






9. மாலை வேலைகளில் மாணவர்கள் பலவித விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

10. பகவான் ராமகிருஷ்ணர் சந்நிதியில் மாணவர்கள் காலையிலும் மாலையிலும் வரிசை வரிசையாக நின்று வழிபடும் காட்சி.

11. தாங்கள் தங்கி இருக்கும் விடுதியையும், அதன் சுற்றுப்புறங்களையும் மாணவர்களே கூட்டிப் பெருக்கித் துப்புரவு செய்து கொள்கிறார்கள்.

12. தங்கள் உணவு விடுதிக்குத் தேவையான அரிசியைக் கைத்திரிகையின் மூலம் அதாவது மரச் சக்கியினால் ஒவ்வொரு நாளும் தயார் செய்கின்றனர்.

13. ராமகிருஷ்ண குடில் மாணவர்களுக்குத் தெரியாத தொழிலே இடையாது. எல்லாத் தொழில்களிலும் அவர்களுக்கு நேர்முகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்கள் தச்சுத் தொழிலைப் பயில்கின்றனர்.





சுதந்திர மலாயாவிலே....

ஜி. மனுவேல்

மலாயா, வளமான வாழ்க்கைக்கும், விரிவான வர்த்தகத்துக்கும் கேந்திர நாடு. தொழில் துறைகளின் அபிவிருத்திக்கும் தொழிலாளர்களின் நல் வாழ்வுக்கும் உகந்த நாடு. அதனால்தான் உலக நாடுகள் அனைத்தும் மலாயா மீது கண்ணோட்ட மிடுகின்றன. மலாயா சுதந்திர வைபவத்துக்குப் பல நாடுகளும் அந்நாடு அனுப்பிய அழைப்பைப் பெருமையாய் ஏற்று, தத்தம் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. நல் வாழ்த்துக்களைச் சுமந்து வந்த அத்தனை பேரும் மலாயர்களின் வரவேற்பு, உபசரிப்பு ஆகியவற்றால் திக்குமுக்காடித் திரும்பினார்கள்.

அவற்றில் ஜப்பானும் ஒன்று. மலாயா சுதந்திரத் திருநாளுக்கு ஜப்பான் அதன் பிரதிநிதிகளை அனுப்பி வைத்ததோடு திருப்தி அடையவில்லை. மீண்டும் தனது பிரதம மந்திரியையே அனுப்பி, மலாய் நாட்டுடன் நல்லெண்ணத்தை வளர்க்க முற்பட்டது. ஜப்பான் சார்பில் ஜப்பானியப் பிரதமர் திரு நோபுஷிக்கி கிஷி அவர்களே நேரில் வந்தார்.

ஜப்பான் 1942ல் மலாயா மீது அடாப்பிடியாகப் போர் தொடுத்து, வெள்ளைக்காரரைத் துரத்தியதோடு நில்லாமல், மலாய் வாழ் மக்களுக்குப் பற்பல இன்னல்கள் இழைத்த நாடு.

ஜப்பான் சார்பில் சென்ற மாதம் மலாய் நாட்டுக்கு வந்த ஜப்பானியப் பிரதமர் திரு நோபுஷிக்கி கிஷி அவர்களை, கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் போய் வரவேற்றார் மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான். விமானத்தை விட்டிறங்கியதும் துங்கு அவரை அன்புடன் அணைத்து அளவளாவினார். பிறகு, பெடரேஷன் பட்டாளத்தினர் ஜப்பான் பிரதமருக்கு மரியாதை செய்தனர். அதன்பிறகு அங்கு வந்திருந்த ஜப்பானியத் தூதராலய அதிகாரிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், மலாயா மந்திரிகள் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார். "இஸ்தானா நெகாரா" என்ற ராஜ மாளிகையில் ஜப்பானியப் பிரதமரும் மலாயாப் பிரதமரும் சம்பாஷணை நடத்தினர்.



மலாயா பிரதமர் திரு. கிஷிக்கு மலாயாக் கத்தி ஒன்றைப் பரிசளிக்கிறார்.

கடைசியாக, ஜப்பானியப் பிரதமருக்கு, மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தமது நட்பின் அடையாளமாக கிரிஸ் கத்தி ஒன்று பரிசளித்தார்.

அன்றிரவு ஜப்பானியப் பிரதமர் குழுவினருக்கு, துங்கு சர்க்காரின் சார்பில் பிரமாதமான ராஜாங்க விருந்து நடைபெற்றது. பிரதமர் துங்கு தமது வரவேற்புரையில்



மலர் மாலைகளுடன் ஜப்பான்—மலாயா பிரதமர்கள்.

ஜப்பான் மனமுவந்து வழங்க முன் வந்திருக்கும் உதவிகளை வரவேற்றுப் பேச, மலாய் தொழில்-பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்தி குன்றியிருப்பினும், வாழ்க்கைத் தரத்தில் ஆசியாவில் உள்ள எந்த நாட்டோடும் சம நிலையில் இருப்பது கண்டு தாம் பெருமை அடைவதாகக் குறிப்பிட்டார். துங்கு சர்க்கார் தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி கூறிய திரு கிஷி, மலாயாவின் பொருளாதார கலாசாரத் துறைகளில் அதிக அக்கறை காட்டுவதே ஜப்பானிய சர்க்காரின் பிரதான நோக்கம் என்பதை வெளியிட்டார்.


மறு நாள், ஜப்பானியப் பிரதமர் பெடரேஷன் தலைநகர் கோலாலம்பூரிலுள்ள மரித்த யுத்த வீரர்களின் ஞாபகச் சின்னத்துக்குப் பூவளையம் வைத்து மரியாதை செய்த பின்னர், நகரின் அருகிலுள்ள ஒரு ரப்பர்த் தோட்டத்துக்குச் சென்று, ரப்பர் பால் வெட்டுவது, உறையூற்றி சீட்டுகள் தயாரிப்பது, புகைக் கூண்டில் பதனிடுவது ஆகியவற்றை வெகு நுட்பமாகப் பார்த்தார். இப்படிப்பட்ட அரும் புதையல் தரும் ரப்பர் மரங்களைத் தம் இனத்தவர் யுத்தகாலத்தில் வெட்டி வெட்டிச் சாய்த்ததற்காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.


சுதந்திர மலாயாவுக்கு ஜப்பானியப் பிரதம மந்திரியின் விஜயம் காரணமாக, யுத்த கால மனக் கசப்புகள் எல்லாம் மறைந்து, இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய நட்பும் நல்லெண்ணமும் வர்த்தகத் தொடர்பும் ஏற்படுவதற்கு வழி பிறந்திருக்கிறது.

நீங்கள் செய்யும் தொழில் என்ன?

வியாபாரம் . . . தச்சுவேலை . . . எலக்டிரிஷியன் . .
மெகானிக் . . . இஷ்டமான பொழுது போக்குத்தொழில்?

எதுவானாலும், இதுவரை விற்பனை செய்யப்படாததும், ஒவ்வொருவராலும் வாங்கக்கூடிய விலையில், கச்சிதமான, சக்திநிறைந்த 'உல்ப் கப்' ¼" எலக்டிரிக் டிரில், உங்களுக்கு மிகவும் அத்தியாவசியம்.
முதன் முதலில் 'உல்ப் கப் டிரிலுடன்' தொடங்கி, உங்கள் தொழிற்சாலை முழுவதும், மின்சார சக்தியால் செலுத்தப்படும் ஆயுதங்களால் பூர்த்திப்பு செய்யுங்கள்.
இதுவரை கை ஆயுதங்களால் செய்யப்பட்டுவரும், துவாரமிடுதல், பாலிஷ் செய்தல், ரம்ப அறுப்புபோன்ற ஜோலிகளிலுள்ள பிரயாசம், தாமதம். இவைகளை 'உல்ப் கப்' ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு சௌகரியத்தை அளிக்கும். இலகுவாய் திருப்பக்கூடியதுமட்டுமின்றி எடையில் இலேசானதும் கூட. மிகவும் சுலபமாக வேலை செய்யலாம்.
சிரமமின்றி உங்களால் அதிகப்படியான வேலைகள் செய்யமுடியும்.





Wolf Cub

ராலிஸ் இன்டியா லிமிடெட்,

320, லிங்கச்செட்டித் தெரு, மதராஸ். பம்பாய் • கல்கத்தா • டெல்லி



சேத்தூர் கூத்தன்

4. மர்மக் கிழவன்

இடையில் இருந்த வாளைச் சட்டென்று உருவிக் கையில் பிடித்துக் கொண்டான் வீராங்கன். அவன் பார்வை காலடி கேட்ட திசையில் உன்னிப்பாக விழுந்தது. ஆனால் அவன் கண்களுக்கு எந்த உருவமும் தென்படவில்லை.

திடீரென்று, 'சரக் சரக்' கென்ற காலடி ஓசை நின்றது. வீராங்கனின் இதயமும் நின்று விடும் போல் இருந்தது. மங்கிய வெளிச்சமும் மறைந்து நல்ல இருள் படர்ந்து விட்டது. வீராங்கன் பிரமை பிடித்தவன் போல் நின்ற இடத்திலேயே நின்றிருந்தான். அப்போது—

இரும்பையொத்த இரண்டு முரட்டுக் கரங்கள் அவன் உடலைப் பின்புறமிருந்து பலமாகப் பிடித்தன. அந்த முரட்டுப் பிடியை வீராங்கனின் பிஞ்சு உடலால் தாங்க முடியவில்லை. அவன் மூச்சு திணறியது. அவன் கையிலிருந்த கத்தி தானாகவே நெகிழ்ந்து கீழே விழுந்தது. இருந்தாலும் அவன் தைரியத்தைக் கைவிடவில்லை.

தன்னைப் பிடித்திருப்பது மனிதனா? அல்லது மிருகமா என்பதை அறிய வீராங்கன் முயற்சி செய்தான். ஆனால் அவனுக்கு அத்தனை சிரமம் அளிக்க விரும்பாதது போல் அவனைப் பிடித்திருந்த உருவம் பேச ஆரம்பித்தது. அந்தப் பிடியும் மெதுவாகத் தளர்ந்தது.

"நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?"

அப்பா! அந்தக் குரலில் தான் எத்தனை கடுமை! வீராங்கன் அதைக் கேட்டு நடுநடுங்கிப் போனான். இருந்தாலும் அது மனிதனுடைய குரல் தான் என்று நிச்சயித்த பொழுது அவனுக்குச் சிறிது தைரியம் ஏற்பட்டது. உடனே அந்தக் குரலின் கேள்விக்குப் பதில் சொன்னான்.

"நான் பாடபுரத்திலிருந்து வருகிறேன். என் பெயர் வீராங்கன்."

இதைக் கேட்டவுடன் குரலுக்குரிய உருவம் அவன் எதிரே வந்து நின்றது. அப்பொழுதுதான் உதயமாகிக் கொண்டிருந்த வெண்ணிலவின் மங்கிய ஒளியில் அந்த உருவத்தைக் கூர்ந்து கவனித்தான் வீராங்கன்.

என்ன பயங்கரம்! ஒடுக்கு விழுந்த கன்னங்களும் குழி விழுந்த கண்களும் நீண்ட சப்பையான மூக்கும் பரட்டைத் தலையும் கொண்ட ஒரு வயோதிகன் அவன். அவனைப் பார்க்கும்பொழுதே குலை நடுக்கம் உண்டாயிற்று. வீராங்கனின் உடல் முழுவதும் சிலிர்த்தது.

தன்னைப் பார்த்துப் பயந்து நிற்கும் வீராங்கனை நோக்கி, "பயப்படாதே! நானும் மனிதன் தான்......அது சரி! நீ எதற்காக இங்கு வந்தாய் என்பதை மறைக்காமல் என்னிடம் சொல்லி விடு" என்றான் அந்தப் பயங்கரக் கிழவன்.

"நான் இந்தத் தீவுக்காக வரவில்லை. என் வழி தவறி விட்டது. நான் போக வேண்டிய இடமே வேறு. சொன்னால் நீங்கள் பரிகாசம் கூடச் செய்வீர்கள்"— வீராங்கன் அச்சத்தைப் போக்கிக் 'கணீர்' என்று பதில் சொன்னான்.

அதைக் கேட்ட கிழவன் கடகடவென்று சிரித்து விட்டு, "நான் என்ன சின்னப் பிள்ளையா, உன்னைப் பரிகாசம் செய்ய? பரவாயில்லை......சொல்லு" என்றான்.

"நான் புகழ் பெற்ற குமரி முத்தை எடுப்பதற்காகப் புறப்பட்டவன்" என்றான் வீராங்கன்.

இதைக் கேட்ட கிழவனின் முகத்தில் 'பளிச்' சென்று ஒரு பிரகாசம் தோன்றி மறைந்தது.

"அப்படியா? உன் துணிவை மெச்சுகிறேன். ஆனால் அதில் இருக்கும் அபாயங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. நானும் உன்னைப் போல் குமரி முத்தை எடுத்து வருவது என்ற தீர்மானத்தோடு புறப்பட்டவன் தான். அதனால்தான் இந்த கதியை அடைந்தேன்."

கிழவனின் குரலில் சிறிது சோகம் கலந்திருந்தது. வீராங்கன் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டான்! அந்த மர்மக் கிழவனின் முழுக் கதையையும் அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் ஏற்பட்டது.

உடனே, "தாத்தா! உங்கள் கதையைக் கேட்க எனக்கு ஆவலாக இருக்கிறது. நீங்கள் யார்? எப்படி இந்த கதியை

அடைந்தீர்கள்? இந்த மாளிகை யாருடையது? இந்தத் தீவில் நீங்கள் மட்டும் தான் வசிக்கிறீர்களா?'' என்று சரமாரியாகக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுத் திணற அடித்தான்.

வீராங்கன் தாத்தா என்று அழைத்ததும் கிழவனின் முகத்தில் புன்னகை தோன்றியது. தன்னை அவ்வாறு அழைத்ததை அவன் விரும்பியதாகவும் தெரிந்தது. வீராங்கனின் நெஞ்சுறுதியையும் புத்திக் கூர்மையையும் கண்டு அவன் சிறிது ஆச்சரியப்பட்டான்.

பிறகு, ''என் முழுக் கதையையும் உன்னிடம் விவரமாகக் கூறுகிறேன். மேற்கொண்டு நீ பிரயாணம் செய்வதற்கு வேண்டிய வசதிகளும் செய்து தருகிறேன். குமரி முத்தைப் பற்றிய சில ரகசியத் தகவல்களையும் சொல்கிறேன். முதலில் இந்த மாளிகைக்குள் சென்று அமருவோம், வா'' என்று கூறி வீராங்கனின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் சென்றான்.

மாளிகைக்குள் சென்றவுடன் அங்கே இருந்த கட்டைகளை ஒன்றோடொன்று இழைத்து நெருப்பை உண்டாக்கினான் கிழவன். அந்த நெருப்பைக் கொண்டு ஒரு வகை பச்சிலைச் சாறு நிரம்பிய மண் விளக்கைப் பொருத்தினான். பின்பு மாளிகையின் பின்புறம் சென்று அங்கே இருந்த மரத்திலிருந்து காயும் கனியுமாக ஒரு மடி அளவு பறித்து வந்து வீராங்கனின் முன்னால் கொட்டினான்.

கிழவன் சாப்பிடச் சொல்வதற்கு முன்பே வீராங்கன் அவற்றை எடுத்து உண்ணத் துவங்கினான். அவை ஒரு புதுச் சுவையோடு இருந்தாலும் அதைஅவன் பொருட்படுத்தவில்லை. கிழவனும் அவனோடு சேர்ந்து சாப்பிட்டான். சாப்பிட்டு முடிந்த பின்பு கிழவன் கூறத் துவங்கினான்:

''நானும் கபாடபுரத்தைச் சேர்ந்தவன்தான். நான் உன்னைப் போல் இருக்கும்பொழுது என் பாட்டன் ஒரு நாள் குமரி முத்தைப் பற்றிக் கதையாகச் சொன்னார். அன்றையிலிருந்து எப்படியாவது அந்த முத்தை அடைந்து விட வேண்டும் என்கிற ஆசை இரவு பகலாக என்னை வதைக்க ஆரம்பித்தது.

''ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் கடற்கரையில் கிடந்த ஒரு படகை எடுத்துக் கொண்டு குமரிக்கடலை நோக்கிப் புறப்பட்டேன். ஆனால் என் எண்ணம் நிறைவேறவே இல்லை. குமரிக்கடலை நெருங்கிய உடன் பலமான புயல் வீசியது. கடல் முழுவதும் கொந்தளித்தது. என் படகு நிலை குலைந்து கவிழ்ந்தது. நானும் சுழலில் அகப்பட்டேன். உப்பு நீரில் வசிக்கும் நச்சுப் பூச்சிகள் என் உடலை அரிக்க ஆரம்பித்தன. ஒரு வகை எரிப்பூச்சி என் உடலில் ஒட்டிக் கொண்டு தீயைப் போல் எரித்தது.

''என்னால் அந்தக் கடற் விலங்குகளோடு போராட முடியவில்லை. என் நினைவை அடியோடு இழந்தேன். பல நாட்களுக்குப் பிறகு தான் எனக்கு நினைவு வந்திருக்க வேண்டும். கண் விழித்துப் பார்த்தேன். இந்தத் தீவின் கரையிலே கிடப்பதை உணர்ந்தேன்.

கிழவன் சிறிது நேரம் மௌனமாய் இருந்து விட்டுப் பிறகு மீண்டும் தன் கதையைத் தொடர்ந்தான். (தொடரும்)





மே 9உ முதல்
சென்னை மற்றும் தென்னாடெங்கும்
அருணா பிலிம்ஸ்
பொம்மை கல்யாணம்
தயாரிப்பாளர்கள்
M.ராதாகிருஷ்ணன்
R.M.கிருஷ்ணஸ்வாமி
டைரக்ஷன்:
R.M.கிருஷ்ணஸ்வாமி



பொங்கிவரும் பெருநிலவு



அத்தியாயம் 7

அழகுத் தெய்வம்

அன்புள்ள அத்தானுக்கு,

நீங்கள் லண்டனுக்குப் போனதிலிருந்து' சதா உங்களுடைய நினைவாகவே இருக்கிறது. அன்றுதான் நீங்கள் எவ்வளவு பெரிய அபாயத்திலிருந்து தப்பினீர்கள்? எல்லாம் நான் செய்த பாக்கியம். நீங்கள் படித்துப் பட்டம் பெற்றுச் சௌக்கியமாகத் திரும்ப வேண்டும் என்று உச்சிப் பிள்ளையாரைத் தினந்தோறும் வேண்டிக் கொள்கிறேன்.

நீங்கள் புறப்பட்டுச் சென்ற மறுநாளே அப்பா எங்களையும் அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வந்து விட்டார். இங்கு அவருக்கு ஏதோ அவசர ஜோலி இருந்ததாம். ஆனால் இங்கு வந்ததிலிருந்து அவருக்கு உடம்பே சரியில்லை. படுத்துக் கொண்டுதான் இருக்கிறார். டாக்டர் வந்து பார்த்து விட்டு மருந்து கொடுத்திருக்கிறார். 'ராமலிங்க மாமாவுக்கு எழுதலாமா?' என் கேட்டேன். 'இப்போது வேண டாம். இன்னும் இரண்டு நா கள் கழித்து வேண்டுமானு பார்த்துக் கொள்ளலாம் அவர்கள் என்னமோ ஏதே என்று பயந்து போவார்கள் என்று அப்பா சொல்லி வி டார். நானும் சரி என்றேன் மற்றப்படி விசேஷ மில்லை உடம்பை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளுங்கள்....

இந்த இடத்தில் விமல எழுதுவதை நிறுத்தினாள் தான் எழுதியதை ஒருமுறை படித்துப் பார்த்தாள். சிறி நேரம்யோசித்துவிட்டுமறுப யும் எழுதத் தொடங்கினாள்

எனக்குப் பிரமாதமாகக் கடிதமெ லாம் எழுதத் தெரியாது. நா எழுதியதை மறுபடியும் படித்து பார்த்தபோது எனக்கே வெட்கமா இருந்தது. "நீங்கள் அன்று விமான தில் பறந்து சென்றபோது என் உள்ள தையும் உங்களுடனேயே எடுத்து சென்றீர்கள்" என்று எழுத ஆரம்பி திருந்தால் ஒரு வேளை இந்தக் கடித நன்றாக அமைந்திருக்குமோ என்னவோ எப்படியிருந்தாலும் என்னை மன்னித் விட்டு, தங்களுக்கு இஷ்டமான மாதி கற்பனை செய்து படித்து விடுங்கள்.

தயவு செய்து பதில் போடுங்கள்.

இப்படிக்குத் தங்கள் அடியாள்

விமலா

பி. கு: இந்தக் கடிதத்துடன் ரகசி மாக ஒரு விஷயம் வைத்து அனுப் யிருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்.

விமலா கடிதத்தை மடித்தாள். பின்னர் நாலாபுறமும் ஒரு கள்ளப் பார்வை செலுத்தி விட்டு அந்தக் கடிதத்தைச் சட்டென்று தன் அதரங்களில் வைத்து எடுத்தாள். உறையில் போட்டு ஒட்டினாள். விலாசம் எழுதினாள். கடிதத்தை மார்போடு அணைத்துக் கொண்டு தெருக்கோடியில் இருந்த தபாலாபீசுக்கு வேகமாக ஓடினாள். விமானத் தபாலில் ஜாக்கிரதையாகக் கடிதத்தைச் சேர்த்துவிட்ட பிறகுதான் அவளுக்கு நிம்மதி பிறந்தது.

விமலா எழுதிய அந்தக் கடிதத்தோடு நாமும் லண்டன்மா நகருக்குச் செல்வோம். உலகத்திலேயே மிகப் பெரிய நகரமாகவும், அதிக ஜனத்தொகை உள்ள நகரமாகவும் விளங்கும் லண்டன் நகரைப் பார்த்தவுடனேயே நமக்குப் பிரமிப்பு ஏற்படுகிறது. பல்லாண்டுகளாக இருந்து வரும் வழக்கத்துக்குக் கட்டுப்பட்டு, பெயரளவுக்கு அரசனாகவோ அரசியாகவோ இருந்து நாட்டை ஆளும் அரச பரம்பரை சகல வசதிகளுடன் வாழும் மாபெரும் பக்ஹிங்காம் அரண்மனை கம்பீரமாக நிற்கிறது. முன் காலத்தில், அரசர்கள் தங்களுக்கு வேண்டாதவர்களைக் கைதியாக்கி அடைத்துவைத்தும், கொடுமைப்படுத்தியும் கொன்று புதைத்தும் வந்த லண்டன் டவரைக் காண்கிறோம். இப்போது அது கொடுங்கோலின் சின்னமாகவும், அரச பரம்பரையின் பகட்டையும் படாடோபத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டும் பொருட்காட்சி சாலையாகவும் விளங்குகிறது. ஆம்! இங்குதான் இங்கிலாந்தை ஆண்டு வந்த அரசர்களின் மணிகளும் ஆபரணங்களும் வைத்துப் பாதுகாக்கப் படுகின்றன. அதற்கு அருகாமையிலேயே தேம்ஸ் நதி தீரத்தையும் அதில் செல்லும் பெரிய பெரிய கப்பல்களையும் காண்கிறோம். அதன்மீது உலகப் பிரசித்தி பெற்ற 'லண்டன் பாலம்' நிற்



கி. ராஜேந்திரன்

கிறது. உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாதபடி விநோதமான ஒரு அரசாட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஆங்கிலேயர்களை எண்ணிப் பார்க்கும்போது வியப்பு ஏற்படுகிறது. ஒரு பக்கம் அரசனும் அரசியும் மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவர்களாக இருந்து வர, மற்றொரு புறத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமர்ந்து ஆட்சி நடத்தும் பாராளு மன்றம் ஜனநாயகத்தின் வெற்றிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஏராளமான கார்களும், பஸ்களும், பாதசாரிகளும் சேர்ந்து ஒரே நெருக்கமாக டிரபால்கர் சதுக்கம் தோற்றமளிக்கிறது. இப்பால் உலகில் உள்ள சகலவிதமான இன்பங்களையும் ஒருங்கே அனுபவித்து மகிழக் கூடிய அல்லது சீரழியக்கூடிய ஸோஹோ சதுக்கம் நம் கவனத்தைக் கவர்கிறது. உலக மகாயுத்தத்தின்போது சுற்றுப்புறமெல்லாம் குண்டுகளினால் அடியோடு அழிந்து போனபோதிலும் மிகச் சிறிய அளவிலே சேதமடைந்த செயின்ட் பால் கதீட்ரல் தெய்வ நம்பிக்கையை உலகுக்குப் பறைசாற்றுவது போல அமைந்திருக்கிறது. இவற்றையும் இன்னும் லண்டனில் அனுபவித்து மகிழ வேண்டிய மற்ற இடங்களையும் போய்ப் பார்த்து விட்டு, லண்டன் சர்வகலா சாலையைச் சேர்ந்த ஒரு மருத்துவக் கல்லூரிக்குள் நுழைவோம்.

அங்கு உடற்கூறு சாஸ்திரம் சம்பந்தமான பிரசங்கத்தை ஒரு அறையில் சில மாணவர்களுடன் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான் நடராஜன். பிரசங்கத்தைக் கேட்கும் போதே கையில் இருந்த சிறிய நோட்டுப் புத்தகத்தில் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டான். பிரசங்கம் முடிந்ததும் மாணவர்கள் வெளியே வந்தார்கள். உடனே இரண்டு பெண்கள் அவனை அணுகினார்கள். ஒருத்தி நான்ஸி; மற்றொருத்தி டயானா. தாங்கள் கேட்ட பிரசங்கத்தைப் பற்றி மூவரும் சிறிது நேரம் சர்ச்சை செய்தார்கள். பின்னர் அவர்கள் விடை பெற்றுக்கொண்டு பிரிந்து சென்றார்கள்.

நடராஜன் நேராகத் தன் அறைக்குப் போனான். அங்கே விமலாவின் கடிதம் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. ஆர்வத்தோடு உறையைப் பிரித்துப் படிக்கலானான் நடராஜன். கடிதத்தின் முதல் பகுதியைப் படிக்கும் போது அவன் முகத்தில் கவலைக் குறி தோன்றியது. பிற்பகுதியைப் படிக்கும் போது முகத்தில் புன்னகை தவழ்ந்தது. பின் குறிப்பைப் படித்ததுமே தன்னையறியாமல் சிரித்து விட்டான். "ஏற்றுக் கொண்டேன் விமலா! உன்னை என்னவோ என்று நினைத்தேன்! ரொம்பப் பொல்லாதவளாக இருக்கிறாய்" என்று உரக்கச் சொல்லி விட்டு மறுபடியும் சிரித்தான். மேஜையருகே உட்கார்ந்து அவளுக்குப் பதில் எழுதினான் :

அன்புள்ள விமலாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். உன்னுடைய எழுத்து நடையைப் பற்றி வருத்தப்பட்டு எழுதியிருக்கிறாய். அவசியமேயில்லை. உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை அப்படியே எழுதுவதுதான் உயர்ந்தது. அதை வேண்டுமென்றே நாடக பாணியில் மிகைப்படுத்தியோ அல்லது குறைவுபடுத்தியோ கடிதத்தில் எழுதுவது தவறு. அத்தானுக்கு நீ எழுதும் கடிதம் உன் உள்ளத்தைப் பிரதிபலிப்பதாகத்தான் இருக்க வேண்டும்.

நான் புறப்பட்ட அன்று நீ ஒரு விஷயம் சொன்னாயே, அது இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. "சீமைக்குப் போன பிறகு இந்தப் பட்டிக் காட்டின் ஞாபகம் இருக்குமா அத்தான்? அங்கு எத்தனையோ பெண்கள், அழகுபடுத்திக் கொள்ளும் கலையில் கைதேர்ந்தவர்கள் இருப்பார்கள்......" என்று சொல்லவில்லையா? நீ சொன்ன அந்த வார்த்தைகள் ரொம்ப ரொம்ப உண்மை விமலா!

இங்கு என்னிடம் நெருங்கிப் பழகும் இரு பெண்கள் இருக்கிறார்கள். ஒருத்தி பெயர் டயானா. மற்றொருத்தி பெயர் நான்ஸி. இரண்டு பேருமே நல்ல அழகு படைத்தவர்கள்தான்.

டயானாவின் கூந்தல் மஞ்சள் நிறமாக இருக்கும். சூரிய ஒளி பட்டால் தங்கம் போல்பளபளவென்று மின்னும். கட்டுக்கோப்பான உடலோடு ஒட்டினாற்போல் எடுப்பான ஆடைகள் அணிந்து அவள் அலட்சியமாக நடந்து வருவதைப் பார்த்தால் அனைவரும் சொக்கிப் போய் விடுவார்கள். தன் உடலழகைப் பற்றி டயானாவுக்கு ரொம்பப் பெருமை!

நான்ஸி இருக்கிறாளே! அவள் டயானாவுக்குச் சளைத்தவளல்ல. அவளும் நல்ல அழகிதான். கூந்தலைப் பின் புறத்தில் ரிப்பனால் இழுத்து முடிந்திருப்பாள். குதிரைக் குட்டியின் வாலைப் போல் அது அவள் நடக்கும் போது அசையும். அவளுடைய கண்ணின் மணிகள் வானத்தின் நீல நிறத்தோடு போட்டியிடும்.


இருவருமே நல்ல அழகிகளாக இருப்பதோடு நற்குணங்கள் நிரம்பிய

வர்களாகவும் இருக்கிறார்கள். சின்னஞ் சிறிய உதவி செய்தாலும் நன்றி தெரிவிக்காமல் இருக்க மாட்டார்கள். அன்பாகப் பேசுவார்கள். பணிவாக நடந்து கொள்வார்கள்.

இவ்வளவெல்லாம் இவர்களிடம் இருந்தும் இந்தப் பெண்களில் ஒருவரையுமே நான் விரும்ப முடியாது விமலா! காரணம் என்ன தெரியுமா? இவர்களிடம் இவ்வளவு இருந்தும் ஒரே ஒரு விஷயம் மட்டும் இல்லை. அது என்ன என்று யோசிக்கிறாயா? அதுதான் என் உயிருக்குயிரான விமலாவிடம் இருக்கும் உயர்ந்த "தமிழ்ப் பண்பாடு!"

அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கும் போது உன்னை மறந்து விடுவேனோ என்ற கவலை உனக்கு வேண்டாம். எவ்வளவுக்கெவ்வளவு இவர்களைப் பார்க்கிறேனோ, பேசிப் பழகுகிறேனோ அவ்வளவுக்கவ்வளவு உன்னுடைய நினைவு எனக்கு இருந்து கொண்டே இருக்கும்.

அப்படி உன்னைப் பற்றி எண்ணும்போது, 'தமிழ் நாட்டுக்கு எப்போது திரும்புவோம்?' என்ற ஏக்கம் ஏற்படும். அப்போதெல்லாம் கம்பன் கவிதைகளையோ பாரதி காவியங்களையோ எடுத்துப் படிக்க ஆரம்பிப்பேன். உடனே தமிழ் நாட்டுக்கு வந்து விடுவேன்!



நேற்று மகாகவி பாரதியாரின் 'அழகுத் தெய்வம்' என்ற பாடலைப் படித்தேன். விமலா! விளையாட்டுக்குச் சொல்கிறேன் என்று நினைக்காதே! அந்தப் பாட்டைப் படித்ததும் எனக்கு என்ன தோன்றிற்று தெரியுமா? 'உன்னைப் பார்க்காமலேயே பாரதியார் அழகுத் தெய்வத்தை எப்படி இவ்வளவு தத்ரூபமாக வர்ணித்திருக்கிறார்?' என்ற வியப்பு ஏற்பட்டது. அதிலும் முக்கியமாக, "பொங்கி வரும் பெருநிலவு போன்ற ஒளி முகமும்" என்ற வரியைப் படித்தபோது உன் முகம்தான் அப்படியே என் கண் முன்னால் வந்து நின்றது! உன்னை அடிக்கடி என் கண் எதிரே கொண்டு வந்து நிறுத்தும் அந்தப் பாடலின் ஒரு பகுதியை இதோ எழுதுகிறேன். நான் மறுபடியும் உன்னை நேரில் சந்திக்கும் போது இதை நல்ல மெட்டில் அமைத்து எனக்குப் பாடிக் காட்ட வேண்டும்!

மங்கியதோர் நிலவினிலே
    கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்
    இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு
    போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
    போற்றவரும் தோற்றம்
துங்கமணி மின்போலும்
    வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
    பாரென்று சொன்னாள்.
அங்கதனிற் கண்விழித்தேன்
    அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வந்தான்
    அதுவென்றே யறிந்தேன்.

பாரதியைப் போலவே நானும் கனவு காண்கிறேன் விமலா! அவர் அழகுத் தெய்வத்தைக் கனவிலே கண்டார். நான் அழகுத் தெய்வத்தின் அவதாரமாகிய என் அருமை விமலாவைத்தான் கனவிலே காண்கிறேன்.

நேற்று இரவு நான் கண்ட அந்த இன்பக் கனவை உனக்குச் சொல்லட்டுமா? "சொல்லுங்கள், அத்தான்!" என்று ஆர்வத்துடன் நீ கேட்பது போல் காதில் விழுகிறது. இதோ சொல்லி விட்டேன்:

இரவு பாரதியின் இந்தப் பாட்டைத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டே தூங்கிப் போய் விட்டேன். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த என்னை இரு புறத்திலும் இரு வீரர்கள் உலுக்கி எழுப்பினார்கள். திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். பண்டை காலத்திய தமிழ் நாட்டு வீரர்களைப் போல் அவர்கள் காட்சி அளித்தார்கள். எனக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது.

"யார் நீங்கள்?" என்று கேட்டேன்.

"நாங்கள் காதல் உலக வீரர்கள். எங்களுடைய அரசி உங்களை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள். மரியாதையாக வந்து விடுகிறீர்களா? அல்லது பலாத்காரமாக அழைத்துச் செல்லவா?" என்று கேட்டார்கள்.

எனக்குப் பயமாகப் போய் விட்டது. "வேண்டாம்! வேண்டாம்! நானே வந்து விடுகிறேன். உங்கள் அரசி யார்? எதற்காக என்னை அழைத்து வரச் சொன்னார்கள்?" என்று கேட்டேன்.

''அழகுத் தெய்வத்தின் அவதாரமாகிய விமலாதேவி எங்கள் அரசி. காதல் உலகத்தின் சக்கரவர்த்தினி. உங்களை எதற்காக அழைத்து வரச் சொன்னார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. கூடிய சீக்கிரம் அவர்களே தெரியப்படுத்துவார்கள்'' என்று ஒரு வீரன் சொல்லி விட்டு மற்றொருவனை அர்த்த புஷ்டியுடன் பார்த்தான். இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை புரிந்து கொண்டார்கள்.

வேறு வழியில்லாமல் அவர்களுடன் சென்றேன். வெளியே கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் ஒரு ரதம் நின்று கொண்டிருந்தது. ரதம் முழுமையும் வெள்ளியால் செய்யப்பட்டிருந்தது. சிறந்த வேலைப்பாடுகள் காணப்பட்டன. ரதத்தின் தூண்களில் காதல் தெய்வங்களான ரதியும் மன்மதனும் காட்சியளித்தார்கள். மேல் விதானத்தில் அவர்கள் மீது மலர் மாறிப் பொழியும்தேவர்களைக் கண்டேன். இந்த அருமையான ரதத்தில் என்னை ஏற்றினார்கள்.


ரதத்தில் பூட்டப்பட்டிருந்த கம்பீரமான நான்கு வெண்புரவிகளும் இப்போது ரதத்தை வேகமாக இழுத்துச் செல்ல ஆரம்பித்தன. திடீரென்று அந்தப் புரவிகளின் இறக்கைகள் விரிந்து அவை பறக்க ஆரம்பித்தன !

சிறிது நேரத்தில் நாங்கள் காதல் உலகுக்கு வந்து விட்டோம். ஒரு மாளிகைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அதில் இருந்த ஒரு பொங்கு புனலில் நான் நீராடினேன். எனக்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த புத்தாடைகளை — பட்டுப் பீதாம்பரங்களையும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டேன். அந்தக் காதல் உலகுக்கு ஏற்றவாறு உடையணிந்த பின் அந்த மாளிகையை விட்டு வெளியே வந்தேன். அந்த உலகின் அழகை, ரசித்துக் கொண்டே நடந்தேன். அடடா ! அந்தக் காதல் உலகை என்னவென்று வர்ணிப்பேன் ! அந்தக் காரியத்தை ஒரு கம்பனோ, பாரதியோ, அல்லது காளிதாசனோ தான் செய்ய முடியும். என்னைப் போன்றவர்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அந்த அழகிய காதல் உலகை அனுபவித்துக் கொண்டே நீண்ட நேரம் நடந்தேன். கடைசியில் களைத்துப் போய் ஒரு தடாகத்தின் கரையில் அமர்ந்தேன்.

காதல் உலகிலே அப்போது மாலைவேளை. மேல் வானத்தில் அஸ்தமன சூரியன் ஒரு மிகப் பெரிய நெருப்புப் பந்தாகச் சிவந்து காணப்பட்டான். தெளிந்த நீர்ப் பரப்பிலே அதன் பிரதிபிம்பம், தண்ணீரில் தீப்பிழம்பு சுடர் விட்டெறிவதுபோல் தோற்றமளித்தது. எனக்குச் சமீபம் இரண்டு அன்னங்கள் ஒன்றையொன்று கொஞ்சிக் கொண்டே உல்லாசமாக நீந்திச் சென்றன. அவற்றுக்கு அருகே தண்ணீரில் என்னுடைய முகமும் தெரிந்தது. அந்தப் பிரதிபிம்பத்தை நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அதற்கு வெகு



சமீபத்தில் மற்றொரு அழகிய முகமும் தோற்றமளித்தது. அது உன்னுடைய முகம்தான் என்று சொல்லவும் வேண்டுமா? உன்னுடைய முகத்தின் அழகைத் தண்ணீரில் வைத்த கண் வாங்காமல் பருகிக் கொண்டிருந்தேன். உனக்கு அது அலுத்துப் போயிருக்க வேண்டும். ஒரு சிறிய கூழாங்கல்லைப் பொறுக்கி நீ தண்ணீரில் போட்டாய். 'லொடக்' என்ற சத்தத்துடன் அது தண்ணீரில் விழுந்து அலைகளை உண்டாக்கியது. அந்தச் சிறிய அலைகள் ஒன்றன் பின்




நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
ET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட் டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய டால்கம் பவுடர்
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
ஏஜண்டுகள்: மெஸர்ஸ் நாமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன், 1. டாக்டர் சத்திரம் லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி * மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, சரத்போஸ் ரோடு, கல்கத்தா-26

ஒன்றாகச் சென்று கொண்டிருந்ததால் உன் முகத்தைத் தண்ணீரில் என்னால் பார்க்க முடியவில்லை. நான் திரும்பிப் பார்த்தேன்.

காதல் உலகின் அரசி என்ற பெயருக்கு ஏற்ப நீ உடையணிந்திருந்தாய். உயர்ந்த பட்டினாலான கச்சு உன் மார்பை அலங்கரித்தது. வண்ணப் பட்டாடை உன் சிற்றிடையிலிருந்து தொங்கியது. கைகளிலும் கழுத்திலும் ஆபரணங்கள் மின்னின. பேசுவதற்கு நா எழாமல் உன் எழில் உருவத்தை உட்கொண்டபடி மெய்மறந்திருந்தேன்.

நான் அப்படி விழிப்பதைப் பார்த்து விட்டு, நீ சிறிய வெள்ளி மணியின் ஓசையைப் போல் கலகலவென்று சிரித்தாய்.



''நான் இங்கு வந்து நிற்பதைக் கூடக் கவனிக்காமல் அப்படி என்ன யோசனை?'' என்று உன் பவழ வாயைத் திறந்து கேட்டாய். வீணையின் நாதத்தைப் போன்ற உன் குரல் இனிமையில் நான் மெய் மறந்து போனேன். பின்னர் ஒரு முயற்சி செய்து உனக்குப் பதிலளித்தேன். ''அந்தத் தெளிந்த நீர்ப்பரப்பிலும் உன் அழகிய முகத்தின் பிரதிபிம்பத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். உன்னைப் பற்றி அல்லாமல் வேறு எதைப் பற்றி, யாரைப் பற்றி நான் யோசிக்க முடியும்?'' என்றேன்.

திடீரென்று எங்கிருந்தோ உன்னை நாணம் வந்து சூழ்ந்து கொண்டது. உன் கண்கள் என்னை விட்டு அகன்றன. தடாகத்தில் உல்லாசமாக நீந்திக் கொண்டிருந்த அன்னப் பறவைகளைப் பார்த்தன. சில விநாடிகளுக்குப் பிறகு ஒரு கள்ளப் பார்வையை என் பக்கமாகச் செலுத்தினாய். நானும் அதே சமயத்தில் உன்னைப் பார்த்தேன். ஒரு கணம் நம் கண்கள் சந்தித்தன. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். அடுத்த கணம் மறுபடியும் நம் பார்வைகள் வேறு பக்கமாகத் திரும்பின. நீ தடாகத்தில் குனிந்து கொண்டிருந்த தாமரை மலரைப் பார்த்தாய். நான் உயரே ஒரு கிளை மீது அமர்ந்திருந்த ஜோடிக் கிளிகளைப் பார்த்தேன். இப்படிச் சிறிது நேரம் நம்முடைய கண்கள் சந்திப்பதும் விலகுவதுமாக இருந்தன.

இதற்குள் சூரியன் மறைந்து விட்டான். தங்கள் காதலனைப் பிரிந்த துக்கத்தில் தடாகத்தில் இருந்த தாமரை மலர்களின் இதழ்கள் மூடிக்கொண்டன. மீண்டும் தங்கள் காதலனை அடைவதற்காக அவை தவம் இருப்பது போல் தோற்றமளித்தன. இரவாகிய மங்கை தன் காதலனை பூரண சந்திரனை வரவேற்கத் தயாரானாள்.

தடாகத்தின் துறையிலே ஒரு படகு இருந்தது. நாம் இருவரும் ஒருவரது உள்ளக்கருத்தை மற்றொருவர் உணர்ந்து கொண்டது போல் அந்தப் படகில் ஏறி எதிர் எதிராக அமர்ந்தோம். முழுவதும் சொர்ணத்தினால் செய்யப்பட்டிருந்த அந்தப் படகின் முகப்பு அன்னப் பட்சியைப் போல் அமைந்திருந்தது. பூர்ண சந்திரனின் கிரணங்கள் பட்டு அந்தத் தங்கப் படகு பிரகாசித்தது. பஞ்சணை மெத்தைமேல் அமர்ந்த நான் படகின் துடுப்புக்களைப் பிடித்துத் தடாகத்தில் அதை மெள்ளச் செலுத்தத் தொடங்கினேன். நீ அருகே இருந்த யாழை எடுத்து மீட்டினாய்.

அந்தக் காதல் உலகத்தில் உள்ள இன்பமெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு வானவளாக நீ அந்தச் சமயத்தில் எனக்குத் தோற்றமளித்தாய். பூரண சந்திரனிடமிருந்து பொங்கி வந்த பெருநிலவு உன் எழிலுருவத்தை மறைக்கும் சல்லாத் துணியாக மாறியது. உன் உடலில் மணம் பரப்புவதற்காகவே மரங்களில் உள்ள மலர்களெல்லாம் மலர்ந்ததாகத் தோன்றியது.

யாழின் இசையோடு சேர்ந்து நீ பாட ஆரம்பித்தாய். நீ பாடிய அந்தப் பாட்டு பாரதியின் '' அழகுத் தெய்வம் '' என்ற பாடல்தான். பாட்டின் அழகிலும் உன் குரலின் இனிமையிலும் கட்டுண்டு நான் படகைச் செலுத்துவதை நிறுத்தி விட்டேன். தூரத்தில் தெரிந்த இரண்டொரு படகுகளும் அசைவின்றி நின்றன. தடாகத்தின் கரையில் இருந்த இரண்டொரு காதல் ஜோடிகளும்

காதல் புரிவதையே மறந்து பாட்டின் இனிமையில் லயித்து விட்டனர்.

திடீரென்று நீ பாடுவதை நிறுத்தினுய். யாழை உன் மென்மையான மடியிலிருந்து இறக்கிக் கீழே வைத்தாய். உனக்கு எதிரே அமர்ந்திருந்த நான் எழுந்து வந்து உன் அருகே அமர்ந்து கொண்டேன். உன் கண்களை ஏறிட்டுப் பார்த்தேன். அதன் ஆழத்தை அளக்க முயற்சி செய்தேன். உன் கரிய விழிகளில் இருந்த என் உருவத்தை உற்றுப் பார்த்தேன். இப்போது நம் பார்வைகள் சற்றுக்கூட அகலவில்லை. அவை ஒன்ருேடொன்று ஒன்றிவிட்டன. ஒருவர் கண்ணை ஒருவர் பார்த்துக் கொண்டே நம் முகங்கள் நெருங்கி நெருங்கி வந்தன. உன் மூச்சுக் காற்று என் கன்னங்களிலே பட்டது.

நான் திடுக்கிட்டுப்போய் விழித்துக் கொண்டேன்!

விமலா! முற்றுப் பெருத என் கனவை உன் கடிதத்தின் மூலம் முற்றுப் பெறும்படி செய்து விட்டாய்! என் உள்ளம் இன்பக் கடலில் மூழ்கித் தவிக்கிறது.

அத்தான் ஏதேதோ பிதற்றுகிருர் என்று எண்ணுதே விமலா! இந்தக் கடிதத்தை இன்னும் சில நாட்கள் அல்லது மாதங்கள் கழித்து மறுபடியும் படித்துப் பார்! அப்போது அத்தான் பிதற்றவில்லை, உன் மனத்தின் உள்ளே இருந்து எழுந்த உணர்ச்சிகளைத் தான் எழுதியிருக்கிருர் என்பதை உணர்ந்து கொள்வாய்.

மாமாவின் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். அவர் உடல் நலமில்லாமை பற்றி அப்பாவுக்கும் எழுதியிருக்கிறேன். முடிந்தால் ஒரு முறை திருச்சிக்குப் போய் வருமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

உன் அன்புள்ள அத்தான்,
நடராஜன்.

நடராஜன் இந்தக் கடிதத்தை ஒரு முறை படித்தான். பின்னர் அப்பாவுக்கு மாமாவின் உடல் நிலையைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதினுன். இரு கடிதங்களையும் தனித்தனியே உறையிலிட்டு விலாசம் எழுதினுன்.

விலாசத்தை எழுதி முடிக்கும் தறுவாயில் அவன் அறைக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தான் நடராஜன். அங்கு டயாளு நின்று கொண்டிருந்தாள்.

அத்தியாயம் 8

விபரீதம்

புகைப்படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் சேகர்.

"'எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது' என்றீர்களே? யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டாள் மல்லிகா.

"எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. நிச்சயப் படுத்திக்கொண்டு அப்புறம் உனக்குச் சொல்கிறேன். அதுவரைக்கும் இந்தப் புகைப்படம் என்னிடமே இருக்கட்டும்" என்ருன் சேகர்.

"நிச்சயமாகத் தெரியா விட்டால் பரவாயில்லை. யாரை, எங்கே பார்த்தீர்கள். தயவு செய்து சொல்லுங்கள்!" என்று அளவு கடந்த ஆர்வத்துடன் கமலம் கேட்டாள்.

"இந்த விஷயத்தில் நிச்சயமாகத் தெரியாதவரையில் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை, அம்மா! பெரியண்ணனும் கண்ணப்பனும் எத்தகைய சூழ்நிலையில் திடீரென்று மறைந்து போனுர்கள் என்பதை மல்லிகா எனக்குச் சொன்னுள். அப்படியிருக்கும்போது நான் எதையாவது சொல்லி வைத்தால் வீண் சந்தேகத்துக்கு இடம் உண்டாகும். தவருக எதையாவது சொல்லிவிட்டு உங்களுக்குத் துன்பத்தை அளிக்க நான் விரும்பவில்லை" என்ருன் சேகர்.

கமலம் சிறிது யோசித்துப் பார்த்தாள். அவன் சொல்வதில் உண்மை இருப்பதை உணர்ந்தாள். அவர் எங்கு வேண்டுமானுலும் இருக்கட்டும். எப்படி வேண்டுமானுலும் இருக்கட்டும். உயிரோடு சௌக்கியமாக இருந்தால் போதும். இப்போது அவர் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு அவரை அணுகினுல் நிச்சயம்சந்தேகம் ஏற்படும். அதனுல் அவருக்கு மேலும் என்னென்ன துன்பங்கள் ஏற்படுமோ? யார் கண்டது? ஒருவேளை அதன் மூலமாகப் போலீஸாருக்குக் கூட விஷயம் தெரிந்து விடலாம். அதை எண்ணியபோது கமலத்தின் உடல் பயத்தினுல் நடுங்கியது. சேகரை அதன் பின் அவள் ஒன்றுமே கேட்கவில்லை. ஆனுல் அதே சமயத்தில் அவனிடம் ஒருவிதப் பற்றுதலும் உண்டாயிற்று. தன் கணவனைப் பற்றி அவன் ஏதோ தெரிந்து கொண்டிருக்கிருன் என்ற அசட்டு நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது. சேகரை அவள் மகிழ்வோடு வரவேற்று உபசரித்தாள்.

"மாமா! மாமா! என்னையும் ஒரு போட்டோ எடுங்கள் மாமா! அக்காவை மட்டும் நிறைய போட்டோ எடுத்தேளே?" என்று குறைப்பட்டுக் கொண்டாள் சிறுமி சரஸ்வதி.

"அப்படியே செய்கிறேன் தாயே! உடனே மகாராணியை போட்டோ எடுத்து விடுகிறேன்" என்றான் சேகர், நான்கு விரல்களால் வாயைப் பொத்திப் பயப்படுவது போல் பாசாங்கு செய்து கொண்டே.

எல்லோரும் கலகல வென்று சிரித்தார்கள். போட்டோ எடுத்தான் சேகர். மூவரையும் சேர்த்து வைத்தும் தனித்தனியாகவும் எடுத்தான்.

"மாமா! மாமா! எல்லோரையும் போட்டோ எடுத்தீர்கள். ஆனால் உங்களை யாரும் எடுக்கவில்லையே? ஐயோ பாவம்! நான் வேண்டுமானால் எடுக்கட்டுமா?" என்று கேட்டாள் சரஸ்வதி.

"வேண்டாம் தாயே, வேண்டாம்! உங்களுக்கு அவ்வளவு சிரமம் கொடுக்க மாட்டேன். அப்படிக் கொடுத்தால் என் காமிரா குட்டிச்சுவர்தான்!"

"அதெல்லாம் முடியாது! நீங்களும் போட்டோ எடுத்துக் கொண்டுதான் ஆகணும்!" என்றாள் சரஸ்வதி.

"சரி, அப்படியே செய்வோம்" என்று சொல்லிவிட்டுச் சேகர் தான் கொண்டு வந்திருந்த பெரிய தோல் பையிலிருந்து ஒரு 'காமிரா ஸ்டாண்டை' எடுத்து நிறுத்தினான். அதில் காமிராவைப் பொருத்தினான். தனக்கு நடுவில் இடம் விடும்படி சொல்லிவிட்டு மற்றவர்களை நிற்க வைத்துக் காமிராவைச் சரி செய்தான். ஒரு விசையை அழுத்தி விட்டுத் தானும் ஓடி வந்து அவர்களுடன் நின்று கொண்டான். சிறிது நேரம் 'கிர்ர்ர்' என்ற சத்தம் கேட்டது. பிறகு 'கிளிக்' என்று போட்டோ எடுத்தது.

சரஸ்வதி ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போனாள். "அடே! இந்தக் காமிரா தானாகவே போட்டோ எடுக்கிறதே!" என்று சொல்லிக் கையைக் கன்னத்தில் வைத்து வியந்தாள். மல்லிகாவும் கமலமும்கூட வியந்துதான் போனார்கள்.

இப்படிச் சிறிதுநேரம் குதூகலமாகக் கழித்த பிறகு சேகர் விடைபெற்றுக் கொண்டு சென்றான். அவன் போன பிறகு மல்லிகா தன் தாயாரைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

"அம்மா! நேற்று என்னவோ கோபித்துக் கொண்டாயே? எவ்வளவு நல்ல மனிதர் பார்த்தாயா?" என்றாள்.

"ரொம்ப நல்ல மனிதர்தான். தங்கமானவர்தான். இருந்தாலும் நேற்று சொன்னதையே இன்றும் திரும்பச் சொல்கிறேன். வீட்டுக்கு வந்து அவர் பேசிப் பழகுவது வேறு. நீ தனியாக அவருடன் ஆற்றங்கரையிலும் செண்பகக் காட்டிலும் பேசிப் பழகுவதுவேறு. கிராமத்தார் நாலு பேர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? ஊராரின் ஏச்சுக்கல்லவா இடமளித்தவர்களாவோம்? இந்த விபரீதமெல்லாம் வேண்டவே வேண்டாம்!" என்றாள் கமலம்.

"போ, அம்மா! ஊராரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் பயந்து நாம் வாழ முடியுமா? நமக்குச் சரியென்று தோன்றுவதைத்தான் செய்ய முடியும்."

"நீ நினைப்பது தப்பு, மல்லிகா! நீ சொல்வதெல்லாம் பேசும்போது பிர



மாதமாகத்தான் இருக்கும். ஆனால் நடைமுறையில் ஒன்றும் சரிப்பட்டு வராது. ஊரில் மானமாக மரியாதையாக வாழ வேண்டுமானால் ஓரளவுக்கு ஊராரின் எண்ணத்துக்குத் தகுந்த மாதிரி நமது நடத்தையை ஒழுங்கு படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்."

"எனக்குப் புரியவில்லை, அம்மா! நாம் உழைக்கிறோம், ஊதியம் அளிக்கிறார்கள். அவ்வளவுதானே? நம்மைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை?"

கமலம் சிரித்தாள். விரக்தி அடைந்த உள்ளத்தின் வெறுப்பு நிறைந்த, ஏளனம் மிகுந்த சிரிப்பு அது.

"உனக்குப் பதினேழு வயதாகியும் இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய், மல்லிகா. நீயும் நானும் உழைக்கத் தயாராக இருக்கிறோம். உண்மைதான். ஆனால் அந்த உழைப்பை ஏற்றுக் கொள்ள யாராவது வேண்டாமா? உழைப்புக்கு ஏற்ற கூலியைத் தர யாரா

வது முன்வர வேண்டாமா? அதை யார் செய்வார்கள்? ஊரார்தானே அதைச் செய்தாக வேண்டும்?

“நம்முடைய உழைப்பு இல்லாமல் ஊரார் வாழ முடியும் மல்லிகா! ஆனால் அவர்கள் அளிக்கும் ஊதியம் இல்லாமல் நம்மால் வாழ முடியாது! சிறிது நேரம் அமைதியாக யோசித்துப் பார்த்தால் உண்மை உனக்கு விளங்கும்.”

மல்லிகா யோசித்தாள். சில மாதங்களுக்கு முன்னால் செண்பகபுரத்தில் ‘டேரா’ போட்டிருந்த ஜானகிராம் டாக்கீஸில் தங்கை சரஸ்வதியுடன் ஒரு திரைப்படம் பார்த்தாள் மல்லிகா. அந்தத் திரைப்படத்தில் ஒரு ராஜகுமாரி உல்லாசமாகப் பாடினாள். சந்தோஷமாக ஆடினாள். கட்டழகன் ஒருவனைச் சந்தித்தாள். காதல் புரிந்தாள். அவனுக்குக் கஷ்டம் வந்த போது போனால் போகிறது என்று இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டுச் சோகக் குரலில் ஒரு பாட்டு பாடினாள். கட்டழகன் மாய மந்திரசக்தியால் தனக்கு வந்த கஷ்டங்களை வெற்றி கொண்டான். தன்னை எதிர்த்தவர்களைத் துவம்சம் செய்தான். காதலியின் கரம் பிடித்தான். ராஜகுமாரி பேரின்பம் அடைந்தாள்.

அந்தத் திரைப்படத்தைப் பார்த்ததிலிருந்து மல்லிகாவுக்குத் தான் நடத்தி வரும் வாழ்க்கையில் வெறுப்பே ஏற்பட்டு விட்டது. பிறந்தால் சினிமா நட்சத்திரமாகப் பிறக்க வேண்டும். உல்லாசமாக ஆடிப் பாடிக் காலத்தைக் கடத்த வேண்டும். இது என்ன வாழ்க்கை? நாள் முழுதும் உழைத்து உழைத்து என்னத்தைக் காண்கிறோம்? ஒரே துன்பமும் துயரமும் தான்!

இந்தத் திரைப்படத்தை எடுக்கும் போது நிஜமாகவே கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் இடையே காதல் ஏற்பட்டு அசல் வாழ்க்கையிலும் அந்த சினிமா நட்சத்திரங்கள் கல்யாணம் செய்து கொண்டார்களாம்.

அதனை அறிந்ததிலிருந்து மல்லிகாவுக்குத் தான் முன்பு கொண்டிருந்த ஆசை பன்மடங்காகப் பெருகியது. இந்த எண்ணத்தில் ஊறிப் போயிருந்த அவளால் தாயாருடைய கூற்றை ஒப்புக் கொள்ள முடியவில்லை.

மல்லிகா திரைப்பட நட்சத்திரமாகி விட வேண்டும் என்பதில் அளவு கடந்த ஆர்வத்துடனும் ஆவலுடனும் இருந்தாள். அதற்குரிய சந்தர்ப்பமும் இப்போது ஏற்பட்டிருந்தது. திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்த சேகர் அவள்மீது அன்பு செலுத்தினான். அவளும் சேகர்மீது தன் உயிரையே வைத்திருந்தாள். ஆனால் பாவம்! அந்தப் பேதைப் பெண் தன் லட்சியத்தை அடைவதிலேதான் ஆர்வம் காட்டினாளே ஒழிய, அந்தப் பாதையில், இடையிடையே தோண்டப்பட்டிருந்த படுகுழிகளைக் கவனிக்கவில்லை. எத்தனை முறை ஆழமான குழிகளில் விழுந்து விழுந்து எழுந்திருக்க வேண்டும் என்பதை அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

பிரகாசமான ஒரு ஒளி நேரடியாகக் கண்களில் விழும்போது, அந்த ஒளியைத் தவிர வேறு எதுவுமே நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. அப்படிக் கண்களைக் குருடாக்கும் பிரகாசத்துடன் சினிமா நட்சத்திரம் என்னும் மல்லிகாவினுடைய லட்சியம் திகழ்ந்தது.

தன் அபிலாஷைகளைச் சேகரிடம் எடுத்துச் சொன்னாள் மல்லிகா. அஸ்தமன சூரியனின் அழகை அனுபவித்துக் கொண்டே இருவரும் ஆற்றங்கரையோரமாக நடந்து சென்றார்கள். அவள் சொல்வதையெல்லாம் மௌனமாக அனுதாபத்தோடு கேட்டுக்கொண்டே வந்தான்சேகர். கடைசியில் தன்னுடைய நிலையை விளக்கினான். “நான் இப்போது ‘காமிராமேனா’கத்தான் இருக்கிறேன். திரைப்படங்கள் தயாரிக்கும் அளவுக்கு எனக்கு இப்போது வசதியில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் நானே படாதிபதியாகி விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். அப்படி நானே சொந்தமாகப் படம் தயாரிக்கும்போது நீதான் அதில் கதாநாயகி பாகத்தை ஏற்று நடிக்கப் போகிறாய். ஆனால் அதற்கு நீ இன்னும் ஓரிரண்டு ஆண்டுகள் காத்திருக்கும்படி நேரிடலாம்” என்று சொல்லிவிட்டுச் சேகர் நின்றான். பின்னர் மல்லிகாவை நேருக்கு நேராகப் பார்த்து நின்று கொண்டான். தன் தலையைக் கவிழ்த்து அவள் முகத்தை நோக்கினான். “காத்திருப்பாயா, மல்லிகா?” என்றான்.

மல்லிகா அண்ணாந்து பார்த்தாள். சேகரின் கண்களைப் பார்த்துக் கொண்டே, “உங்களுக்காக யுகம் யுகமாகக் காத்திருக்கத் தயார்” என்றாள். சேகர் தனது பத்து விரல்களாலும் அவளுடைய இரு கன்னங்களையும் பற்றினான். இன்ப வெள்ளத்திலே மூழ்கிய அந்தக் காதலர்கள், கமலம் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்த அந்த விபரீதம் அப்போது உருவாகிக் கொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை.

சற்றுத் தூரத்தில் கிராமத் தலையாரி வீரப்பன் அவர்களை அருவருப்பும் ஆச்சரியமும் நிறைந்த கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். **(தொடரும்)**


அவன் நிமிர்ந்து உட்காரப் பார்க்கிறான் !
வாஸ்தவம்தான்! அவன் பெற்றோர்களுக்கு அவன் வளர்ச்சியில்தான் என்ன பெருமை...அவர்கள் க்ளாக்ஸோவை வாழ்த்துகிறார்கள்! பிறந்த சமயத்தில் எவ்வளவு சிறியவனாயும், சோனியாயும் இருந்தான் என்பதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் நீங்கள் நிச்சயம் நம்பமாட்டீர்கள். டாக்டர் அவனுக்கு க்ளாக்ஸோ கொடுக்கச் சொன்னதிலிருந்து, அவன் அபார வளர்ச்சி அடைந்துள்ளான். இப்பொழுது அவன் எடை ஒழுங்காக அதிகரித்து வருகிறது. அவன் சந்தோஷத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் கேட்பானேன்—க்ளாக்ஸோவிற்கு நன்றி.
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச் சிறந்த பால் உணவு
க்ளாக்ஸோ லாபரட்டரீஸ (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புது டில்லி

வேர்க்குரு

தொல்லையை ஒழிக்கும் ஜோடி!

இதமளிப்பதும், கிருமிகளை ஒழிப்பதுமான ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப்பு, வேர்க்குரு தொல்லைக்குக் காரணமான அடைபட்ட சரும துவாரங்களை சுத்தம் செய்கிறது.

உடம்பில் தூவிக்கொள்ள சுகமான ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரை ஸ்நானத்திற்குப்பின் உபயோகித்தால் அது உங்களை நாள் முழுதும் சுகமாயும் புத்துணர்ச்சியுடனும் வைக்கும்.



ஜான்ஸன்ஸ்

ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர் — சேர்ந்து வேலை செய்யும் ஜோடி

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

அரவணையூட்டிய அமுதன்

கையில் பிடித்த சிற்றுளியும் சுத்தியும் பிடித்தபடியே யிருந்தன. அறிவின் சஞ்சாரம் இசுபரம் இரண்டுக்குமிடையே உருவில்லாது ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. உச்சிக்கேறிக் கொண்டிருந்த சூரிய வெப்பம் அவன் உடலில் உறைக்கவில்லை. அக்கம் பக்கங்களி லிருந்து எழுந்து கொண்டிருந்த 'பமர் பமர்' என்ற சிற்றுளிகளின் தொடரொலிகளும் கூட அவன் செவிகளுக்கு ஏறவில்லை. சாதா ரணக் குடும்பப் பிரச்னைகளா யிருந்தால், சில விநாடிகளிலோ, ஜாமப் பொழுதிலோ ஒரு முடிவுக்கு வந்திருக்க முடியும். பரி பக்குவத் துக்கு வந்தும் வராமலுமுள்ள இதயப்பரி யின் தாறுமாறான ஓட்டத்தைச் சவுக்கடி கொடுத்தா திருப்ப முடியும்? இவ்வளவும் ஒருகாலத்தில் ஒரு சிற்பக் கலைஞனின் உள்ளத் துக்குள் எழும்பித் தணிந்த மன அலைகள். அவன் தான் சரித்திர ஏடுகளில் வந்தும் வரா மலுமுள்ள 'வடுக நம்பி' எனப் பெயர் கொண்டவன்.

அப்போது திருவரங்கன் ஆலயத்தின் கோசாலையும் துலாபார மண்டபமும் நிர் மாணமாகிக் கொண்டிருந்தன. உள்ளப் பாங்கையும், ஊறிய நிலைகளையும் ஊக்கி வைத்த காலத்தில் உழைப்பாளிகளின் உற்சா கத்துக்குக் குறைவேது? கோயிலின் நெடு மதில்களுக்கும், அகளங்கன் திருவீதிக்குமிடையே யிருந்த விஸ்தாரமான கொட்டாரத்தில் ஏறக்குறைய ஐம்பது சிற்பிகள் உட்கார்ந்து பெரும் கற்பாறைகளைக் கலைச் செல்வங்களாக உருவாக்கும் பணியில் ஊன்றியிருந்தனர்.

சிற்பியாண்டான் 'குருகூர் நம்பி' யென் னும் கிழச் சிற்பிதான் அவர்களுக்கெல்லாம் தலைவன். அவனுக்கு உருப்படியான வேலைகள் எதுவுமில்லை. மற்றையச் சிற்பிகளின் வேலை களைக் கண்காணிப்பதும், அன்றாடக் கூலி களை யளந்து கணக்குக் கொடுப்பதும்தான் அவனது அலுவல்கள். வெகு தூரத்துக்கு அப்பால் உட்கார்ந்திருந்த அவனுக்கு, உரு வாக்கி வைத்த படிமம்போல் சமைந்திருந்த வடுக நம்பியின் தோற்றம் தெரிந்தது. கைக்கோலை ஊன்றியவாறு அவன் அங்கே வந்து சேர்ந்தான்.

''என்ன வடுகு! இன்றைக்கு ஏதாவது ஆத்ம விசாரம்வலுவோ?'' என்று கேட்டான் இலேசாக இளித்தவாறே.



கிழவனின் குரல் வெளிப்பட்டதும்தான் வடுக நம்பியின் சிந்தனை தளர்ந்தது. நீண்ட பெரு மூச்சை விடுத்துவிட்டு, எழுந்து நின்ற வாறு ஆண்டானின் முகம் நோக்கினான்.

கிழவன் அவன் கையிலிருந்த சுத்தியைக் கையில் வாங்கி, அவன் உட்கார்ந்திருந்த பாறைக்கல்லின்மீது தட்டினான். 'ணங் ணங்!' என்ற வெண்கலநாதம் அதனின்றும் பிறந்தது! அப்போது அவ்விருவர் முகத்திலும் வியப்புச் செறிந்தது. கிழவன் அவனைநோக்கி, ''தம்பி! இந்தக் கல் வேண்டாம். அதோ கிடக்குது பாரு—ஆறடிக்கல்லு. அதை யெடுத் துக்கொள்'' என்றான். வடுகநம்பி மலங்க மலங்க விழித்தபடியே நின்றான்.

கிழவன் மீண்டும், ''ஆமாம், தம்பி! இது பேசினதைக் கேட்டியா? இது தோஷம் தாங்கின கல்லு! முகப்புக்கு உதவாது'' என்று கூறியவாறே திரும்பிச் சென்றான்.

ஆண்டான் சென்றபின் வெகுநேரம் வரை யிலும்கூட வடுகநம்பிக்கு எதிலும் நாட்டம் செல்லவில்லை. அவனது பழைய விசாரங்கள் தொடர்ந்து விட்டன. இருந்தாலும், 'தோஷம் தாங்கின கல்' என்ற செய்தி மட்டி லும் ஒருபுறத்தில் மனத்திடையே குறு குறுத் தது. கையில் உளி பிடித்த நாளாக, கல் லுக்கும் ஒரு தோஷமுண்டு என்ற அதி சயத்தை அவன் அறிந்ததில்லை, கேட்டது மில்லை. அவ்வியப்புச் செய்தி தொடர்ந்து அவன் மனத்தில் பெரும் ஆர்வத்தை எழுப்பி விட்டது. வேறொரு கல்லை யெடுத்துப் பொளி வதற்கு முன்னால், இந்தக் கல்லுக்கு உள்ள தோஷம் என்னவென்பதை அறிந்து கொள்ள வேண்டாமா?

முடிவாக, வடுக நம்பியின் நெஞ்சில் ஆர்வ மும் துணிச்சலும் ஒன்றாக இணைந்தன. சாதா ரணமாகவே, வேண்டாமென்ற செயலை விருப்பாகச் செய்வதில்தானே மனித உள்ளத் துக்கும் ஒரு அலாதியான சுவை ஊறுகிறது! ஆண்டான் வெகுதூரத்தில் வேறொரு சிற்பி யிடம் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. பரபரப்பாக எழுந்து நின்று மீண்டும் சுத்தி யால் இரண்டு தடவைகள் கல்லைத் தட்டி னான். கணீரென்ற ஒலி அவன் உள்ளத்தை யும் உடலையும் சிலிர்க்கச் செய்தது. அக்கல்லை வெறித்து நோக்கியபடியே சற்று நேரம் நின்றான். பின்னர், கையில் வெட்டிரும்பை யெடுத்துக் கரிக்கோடு படிந்திருந்த அளவின் மீது வைத்துப் பொளியத் தொடங்கி விட் டான். 'பமர் பம.'ரென்ற ஓசையை யொட்டித் தீப் பொறிகள் தெறித்தன. துண்டுகள் சிதறி, கருமையும், வெண்மையும் கலந்த பொறிகள் உதிர்ந்தன. சிறிது நேர முயற்சிக்குள் ளாகவே அப்பெரும் பாறை நெக்கு தளர்ந்து, இரண்டு துண்டங்களாக விலகி விட்டது. அவ் வெடிப்பினின்றும் ஒரு ஜீவன் திடீரென்று வெளியே தாவிக் குதித்தது!

அடுத்த கணம்—வடுகநம்பி தன் வயதையும் மறந்தவனைத் துள்ளியெழுந்தான். அவன் விழிகள் வெறித்துவெறித்து அந்த ஜந்துவை நோக்கின. ஏறக்குறைய மூன்று அங்குல பரிமாணத்திலிருந்த அத்தவளை உருவம்—தூய

வெண்ணிற உடலும், மேல்புறத்தே நெருப்பு மணிகள் பதித்தது போன்ற இரு விழிகளும், பாய்ந்து செல்லத்தக்க பின்னங் கால்களும் கொண்டிருந்தது. உலகத்தையும், காற்றையும், சூரிய ஒளியையும் முதன் முதலாக அறிந்து உணர்ந்த அச்சிருஷ்டி விநோதத்தைக் கண்டு அவன் உள்ளத்துள் வியப்பு மூட்டியது. அவன் நிற்கும் சிலையாக ஒன்றி விட்டான். அந்தத் தேரை தத்திக் குதித்த வண்ணம் நாலாபுறங்களிலும் நடை பழகத் தொடங்கியது!

வடுகநம்பியின் கண்கள் பிளந்திருந்த கல் முகப்புக்களை உற்று விழித்தன. எத்தகைய விசித்திரமான வாசம் அதற்கு! ஒரு சாண் அகலம்கூட இராத இயற்கையான பள்ளம். அதிலிருந்த ஈரப் பசையும், மேலே தெறித்திருந்த நீரும்தான் அதற்குக் காற்று, ஆகாரம், வளர்ச்சி எல்லாம். மற்றப்படி, அதன் உற்பத்தி பற்றி யாருக்குத் தெரியும்? அதற்குத் தாய் யார்; தகப்பன் யார்?

உடல் சிலிர்க்க, உள்ளம் பொரும ஊன்றி நின்றான் நம்பி. இதயக் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த வாழ்க்கைப் படலங்களுடன் ஆன்ம விசாரணையும் ஒன்றுகூடிப் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தன. எதிரெதிரான வாதப் பிரதிவாதங்களில் மனச் சர்ச்சை ஈடுபட்டு விட்டது.

ஏறக்குறைய பதினைந்தாம் வயதில் சிற்றுளியும், சுத்தியலும் கையில் பிடித்த அவன் கீழே வைத்த நாளில்லை. உள்ளங் கைகளில் படிந்திருக்கும் தழும்புகளெல்லாம் எத்தனை அழகுப் பிம்பங்களையும், ஆபரண வெட்டுக்களையும் சிருஷ்டித்து வைத்த முத்திரைகளோ! அன்று முதல் இன்று வரையில் அவனது சொந்த வாழ்வில் ஏற்பட்டுள்ள பந்தங்களும், பொறுப்புக்களும் எத்தனை வகைகள்? ஒருநாள் ஓய்வைக் கருதினாலும், உள்ளடுப்பு புகைய வழியில்லை. இந்த நிலையில் தன் மனையும், தன்னைச் சேர்ந்த மூன்று நான்கு பிறவிகளையும் இதுகாறும் கடைத்தேற்றி வந்தாகி விட்டது. இவ்வளவும் ஏன்? இப்போது வெளியான இந்த வெண் தேரைக்கு யார் உழைத்துப் போட்டு ஊண் அளித்தார்கள்? மூச்சுவிடக் காற்றும், குடிக்க நீரும் யார் கொடுத்தார்கள்?

எத்தகைய கபடமான வஞ்சனைகள்! தான் படைக்கும் சிருஷ்டிகளிடமே இவ்வளவு ஓரவஞ்சனையா? ஒன்றுக்குப் பொறுப்பையும், பந்தங்களையும் சுமத்தி, அரைவயிற்றுப் போஷிப்புக்கும் அல்லல்பட ஆட்டி வைப்பதில் ஏற்படும் கொடூரச் சித்தம் ஒரு புறம். மற்றொன்றுக்கோ இருக்க இருப்பிடமே, காற்றும் புகாத கடின பாறைக்குள் இருந்த பொழுதிலும், நீரும் கூட உணவும் கொடுத்துக் காக்கும் பெருமை ஒருபுறம்! பிறவி எடுத்தது முதல் — அருபமாக ஒளிந்திருக்கும் 'அவனை' அழகுற உருவாக்கி, அவன் சக்தியை வியந்து புகழ்பாடி, கடமையே கருத்தாகக் கொள்ளும் மனிதனுக்கு அவனிடும் கட்டளை — உழைப்பு, உழைப்பு! அவனைப் பற்றிய எண்ணமும் சிந்தையுமற்ற இத் தேரைப் பிறவியின்பால் அவன் கொண்டுள்ள சித்தமோ — சுயக் கடமை! ஏன், அவனது ஓரவஞ்சகம் நிறைந்த செயலை நன்றாகப் பார்ப்பதில்தான் என்ன தவறு? உலகமும் அறிய வேண்டாமா?

இந்த அற்ப ஜந்துவான மூன்று அங்குலத் தேரைக்கு அவன் அளிக்கும் காருண்யத்தை நான்குமுழ மனிதனுக்கும் தான் அளிக்கட்டுமே? அவனுக்காக இந்த மனிதன் செய்துள்ள சாதனைகளுக்கு நன்றிக்கடனாகத்தான் அது இருக்கட்டுமே?

அடுத்த கணம் — வடுகநம்பியின் கரங்களிலிருந்த ஆயுதங்கள் இரண்டும் கீழே விழுந்தன. விழிகளிலும், உள்ளத்திலும் வைராக்கியம் தெறித்தது! சிற்றுச் சார்பில் முடிந்து வைத்திருந்த கட்டுச் சோற்றையும் திரும்பிப் பாராது கிளம்பி விட்டான். பிற்பகல் முழுமையும் நடந்து நடந்து நகர் எல்லையைக் கடந்தான். நாலா புறங்களிலும் நெடிது வளர்ந்து கிடந்த நாணற்காட்டின் மத்தியில், கொள்ளிடப் படுகையை யொட்டின காட்டுக்குள் வந்து சேர்ந்தான். ஆளரவமற்ற அங்கே வந்து அவனைத் தேடுவோரும் கூப்பிடுவோரும் இருக்கவே முடியாது! இனியென்ன கவலை? கீழேயிருந்த வெண்ணிற மணலை மூட்டாகக் குவித்து, அதன்மீது தலையைச் சாய்த்துக்கொண்டு படுத்தான். நெஞ்சில் உறைந்துவிட்ட வைராக்கியம் விநாடிக்கு விநாடி இறுகத் தொடங்கி விட்டது!

* * *

கி.பி. பதிமூன்றும் நூற்றாண்டின் சரித்திர நிகழ்ச்சிகளில் திருவரங்கத்தின் மகிமைகள் பலவும் பிரசித்தம் கொண்டு விட்டன. ஆனால், வடுகநம்பியைப் பற்றிய விவரமான வரலாறுகளுக்கு மட்டில் அவ்வேடுகளில் இடமில்லாது போய்விட்டது! இருந்தும், பரம்பரைச் செவிமுறையாக, இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும்கூட அச்சிற்பியைப் பற்றின செய்திகள் திருவரங்கத்தில் அடிபடாமல் இல்லை.

அப்போது 'பாஷ்யக்கார பட்டர், கோயிலண்ணன்' என்ற சிறப்புப் பெயர்கள் கொண்ட உடையவர் சுவாமிகளின் காலம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

உடையவர் சுவாமியின் உன்னத மேம்பார்வைகளால் திருவரங்க ஆலயத்தின் நிர்வாக முறைகள் சீர் பெற்றிருந்தன. ஆலயத்தின் பூசை முறை, வழிபாடுகள் முதல், திருப்பணிக் கைங்கரியங்கள் வரையில் உடையவரால் கடமை, காலம், ஏவல்கள் நிர்ணயிக்கப் பெற்று, 'கொத்துக்கள்' என்ற பத்துப் பிரிவுகளின்படி நடந்து வந்தன. ஒவ்வொரு கொத்துக்கும், ஒவ்வொரு நாட்டாண்மைக்காரர் நியமனம் பெற்றிருந்தனர். அப்பிரிவுகளில் ஐந்தாம் கொத்தான சிற்ப வேலைகளுக்குச் சிற்பியாண்டானாக நியமனம் பெற்றவன்தான் குருகூர் நம்பி. கட்டடத் திருப்பணிகள் சம்பந்தமானவை யாவும் அவ்வயோதிகச் சிற்பியின் மேற்பார்வையில் விடப் பெற்றிருந்தன.

எல்லாப் பணிகளையும் பற்றிய அன்றாடச் செய்திகளையும் அந்தந்தத் தலைவரும் உடையவர் சுவாமியின் கருத்துக்கு எடுத்துச் செல்லுவது வழக்கம். தெய்வத் தொண்டுகள் புரிவதில் எவரேனும் அபசாரங்கள் செய்

இருப்பினும், உடையவரின் தீர்ப்பின்படி பரிகாரங்களும் பெறுவர்.

அன்று, சிற்பியாண்டான் குருகூர் நம்பியின் மூலம் உடையவரின் கவனத்துக்கு வந்த செய்தி, வடுகநம்பியின் மாயமான மறைவு தான்! அதுவும், மூன்று தினங்களுக்குப் பின்பும் அவனைப்பற்றிய எச்செய்தியும் கிடைக்காது போன பின்னரே அவரது கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது. அப்போதுதான், முன்பின் பார்த்தறியாத வடுக நம்பியின் எளிய வாழ்வு, தூய நடத்தை, சலிப்பற்ற உழைப்பு, ஒப்பற்ற கைத்திறன் அனைத்தையும் அவர் விசேஷமாக அறிந்தார். இத்தகைய சிற்பக் கலைஞனைக் காணாமலே இழந்து விட்டதின் நஷ்டம் அவருக்குப் பெரும் வருத்தமாக உறுத்தியது. முடிவாக, உடையவர் சுவாமியின் ஆணையின்மீது, வடுகநம்பியைத் தேடி வர இரு ஏவலர்கள் முனைந்து சென்றனர்.

* * *



சோதனை தொடங்கியது!

மணலில் சயனித்திருந்த வடுகநம்பியின் மனப் போக்குக்கும், மறைபொருளாகி நிற்கும் மாயவனின் சித்தத்துக்குமிடையே போட்டிகள்! ஒரு நாள், இரண்டு நாள், மூன்றாம் நாளும் அநேகமாகக் கழிந்து விட்டது.

ஆஜானுபாகுவென இருந்த அவனது அங்கத் தோற்றம் அரணைபோன்று குறுகி விட்டது. ஆயுதம் பிடித்துப் பழகிய கரங்கள் மூடி மூடித் திறந்தன. கால்களில் சிறு உதறல் கண்டது. இரைப்பையின் ஈரம் கருகிற்று. ஆனால், அவனது மன உறுதியில் ஆழம் காண முடியாத அகழி தோன்றியிருந்தது.

அந்நான்காம் நாளிரவு அவன் உடலில் புரண்டசையச் சக்தியில்லை. பெருங்குடல் சிறு குடலைப் புசித்து விட்டது! சுவாச கோசங்கள் இணைறின. விழிகளின் எதிரே அந்தகாரம் சூழ்ந்தது. புள்ளினங்களின் பெரும் ஆர்ப்பாட்ட ஓசைகளும்கூடச் செவியில் புகவில்லை. சற்றைக்கொருதரம் சிறு சுவாசம் மெல்லிய இழையாக வந்து கொண்டிருந்தது. ஆன்மா அம் மனிதக் கூட்டிடம் இறுதி விடை கோரியது.

ஒரு கன்னங்கரிய உருவம் அவனது மூடிய இமைகளுள்ளும்கூடத் தெரியும் வண்ணம் வந்து சேர்ந்தது! அதன் கரங்களில் வெண்ணிற மலைபோல் தெரிந்த அன்னக் கவியல். அதன் செவ்விய அதரங்களிலோ விஷமக் கலை செறிந்த குறுநகை!

அவனது தளிர்க்கரத்திலிருந்த அமுது வடுக நம்பியின் திறந்த வாய் நோக்கி வந்து புகுந்தது—இல்லை, அவன் ஊட்டுவித்தான் பரிவு கொண்டு! முதற்கவளம் சென்றவிடம் தெரியவில்லை. பிராணனுக்கினிக்கு முதல் ஆஹுதி! இரண்டாம் கவளம் உள்நோக்கி வருவதற்கு முன், அவ்வக்கினி கொந்தளிப்புக் கொண்டு சீறியது! மற்றொன்று, மற்றொன்று: சிறு குடலின் சிக்கல் பிரிந்தது. ஐந்தாம் கவளம் சுவாச கோசங்களைச் சமனம் செய்வித்தது. கடைசியான ஆறும் கவளமோ, ஆன்மாவைத் தழுவி மறித்து விட்டது!

அவனது ஒட்டிய கண்ணிமைகள் எழுந்தன. அப்போதுதான் அவனது விழிகளுக்கும் எதிரே நிற்கும் அந்தக் கரியவனின் ஆனந்த உருத் தெரிந்தது!

அவன் — அண்ட சராசரங்களையே போதையில் மயக்கும் வண்ணம், 'கலகல'வென்ற நகைப்பைச் சொரிந்து நின்றான்!

வடுகநம்பியின் உடல் அசைந்தது. இதென்ன விந்தை! உந்தியின் உட்புறமிருந்து வரும் சுவாசத்திலொரு மணமா? இதுகாறும் முகர்ந்தறியா — சுவைத்தறியா மணமல்லவா நாவிலும்கூட! அவனது கண்ணிமைகள் சிறகடிக்கும் பறவை போன்று துடித்தபடி எதிரேயிருந்த உருவை உற்று விழித்தன. இழந்த நினைவும் இயல்புக்கு வந்து விட்டது — அவன் கொண்டிருந்த வைராக்கியத்துக்கு வெற்றி!

அடுத்தகணம், அவன் எழுந்து உட்கார்ந்தான். கூடவே நாவுக்கும் சக்தி வந்து விட்டது. "வந்தாயா? வா வா அப்படி வழிக்கு! உன்னைத்தான் — உனது வஞ்சகப் போக்கைப் பற்றித்தான் நினைத்தபடியிருந்தேன். இந்தக் கடைசித்தருணம் வரையில் உன் நெஞ்சில் ஈரம் ஊறவில்லையே?" என்றான் அவன் துணிச்சலான துடுக்குடன்.

அக்கரிய நிறத்தான் தொடர்நகையாகச் சிரித்தான் பதிலுக்கு.

"ஓஹோ! சிரித்து மழுப்புகிறாயா? நீ மகாநெஞ்சழுத்தக்காரன்! இப்போது ஏதோ என்னைத் திருப்தி செய்து விட்டதாக எண்ணி விடாதே. ஏமாந்தவன் நானில்லை! இந்த உலகில் நீ எனக்கு வைத்துள்ள பந்தபாசங்கள் எல்லாவற்றுக்கும் நீதான் பொறுப்பு. அந்த வெண் தேரைக்கு என்ன மகத்துவம் நீ வைத்துள்ளாயோ, அதையே எனக்கும் நீ வைத்தாக வேண்டும். இல்லையானால், ஆத்மாவான நீயே இக் கூட்டை விட்டுப் போய்விடு. நீ இருப்பதற்கு இடமாயில்லை? உன் சூதுவாதுகளை உலகமும் நன்றாகத் தெரிந்து கொள்ளட்டும்! இந்த இடத்தை விட்டு இனி ஓரடியும் நகரேன்!" இவ்வளவு மிடுக்கான வார்த்தைகளும் வடுக நம்பியிடமிருந்து பொரிந்து கிளம்பின. அதைத் தொடர்ந்து,

அவன் காலை நீட்டியவாறு மீண்டும் பள்ளி கொண்டு விட்டான்! பரமன் சிரித்தான்!

* * *

வைகறை பிறந்தது. அறுவகை வாத்தியங்களும் அதிர்ந்தெழ, ஆழ்வாராதிகளும் அடியார்களும் திருப்பள்ளியெழுச்சி இசைக்க, திருவரங்கனின் பள்ளியறைக் கபாடங்கள் திறக்கப் பெற்றன. சேவார்த்திகள் பயபக்தியுடன் ஒருங்கே குழுமினர். முதல்நாள் அர்த்த ஜாமத்தில் பரமனுக்குப் படைப்பித்த அரவணையமுதின் அருள் பிரசாதம் சாமானியமாகக் கிடைக்கக்கூடிய பொருளா?

உட்புற அறையின் பளிங்குக் கதவைத் திறந்து விட்டு உட்சென்றார் பெரியபட்டர் சுவாமி. அங்கே—தென்பட்ட காட்சி அவரைத் திகைத்துத் திடுக்குறச் செய்து விட்டது! பரமனும் பாவையருமான திருவுருவங்களுக்கெதிரே வழக்கமாக வைக்கப்பட்டிருந்த அரவணையின்மீது இரு கைகளை வைத்து அமுக்கி யெடுத்திருந்த அடையாளம் இருக்கக் கண்டார். எடுத்த கரங்களின் விரல் பதிவுகள் எஞ்சிய திருவமுதில் பதித்திருந்தன! அவர் உடலில் வியர்வை வெள்ளம் சொரிய, விருவிருப்பான பதற்றம் ஏற்பட்டு விட்டது. பாரளந்த பரமனுக்கெனப் படைத்திருந்த அரவணைக்கு யாரோ அபசாரம் புரிந்துவிட்டனர்!

ஏதோ ஒரு நாள் நடந்து விட்டதாகக் கருதி, இவ்வபசாரத்தை மூடி வைக்க முடியவில்லை. மறு தினம், அதற்கும் மறு தினம் இதே நிலை ஏற்பட்டிருப்பது கண்டு அவர் பெரும் பதற்றம் கொண்டு விட்டார்.

பெரியபட்டர் சுவாமியின் தலைமையில் முறைமைக்காரர் அனைவரும் ஒன்று கூடி விவாதித்தனர். முடிவாக, அவர்களால் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்னையை உடையவர்பிரானின் திருவுள்ளத்துக்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தனர்.

நான்கு நாளையச் செய்திகளையும் ஒருவாறு கேட்டறிந்த உடையவர், முதலில் நம்ப மாட்டாது திகைத்தார். பின்னர் தீர விசாரணையைத் தொடக்கினார். அவர்கள் கூறிய பதிலுரைகள் முழுவதும், யாரோ ஒருவர் மறைந்திருந்து செய்யும் சதியென்ற முறையிலேயே ஐயப்பாடுகள் அறையப் பெற்றன.

* * *

வழக்கம்போல் அன்றிரவும் அர்த்த ஜாமப் பூஜைகள் நடந்தேறின. அரவணை தாங்கி வந்த பரிசாரகரும், அர்ச்சகரும் நெஞ்சிற் கொண்ட பெரும் பீதியுடனேயே அவற்றைப் பள்ளியறையினுள் சாதித்து விட்டு வெளிவந்தனர். அப்போது உடையவர் சுவாமியின் ஆக்ஞை அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது! அப்பள்ளியறையின் கதவுகள் பூட்டப் பெற்றபின், தம்மையும் ஆலயத்தினுள்ளேயே விட்டுப் பூட்டிச் செல்லுமாறு அவர்களுக்கு ஆணையிட்டார். ஏவலரும், காவலரும் திகைத்தனர். ஆனாலும், ஆண்டானின் ஆக்ஞைப்படி நடப்பது தவிர வேறென்ன செய்ய இயலும்?

முன்னிரவு கழிந்தது. பூர்வபட்சத்தின் தசமிச் சந்திரனும் தன் பணி முடித்துவிட்டு மறைந்து விட்டான். யோக நிலையில் ஊடுருவிய விழிகளும், ஊன்றிய கருத்துமாக இருந்த உடையவர் சுவாமியின் எதிரே அது காறும் ஏதும் விசேஷமில்லை. மேல்வானத்தில் 'பளி'ரென்ற சுக்கிரோதயம் கிளம்பியது. அப்போதுதான்—ஓருருவம் மனித நிழல்போல் அரவமின்றிய மென்மையான நடையாகக் கதவுப்புறமிருந்து வந்து கொண்டிருப்பது அவரது விழிகளுக்குத் தெரிந்தது.



பக்தர் :— மழை பெய்ய வேணுமென்று பரமனை இப்படி வேண்டிக் கொண்டிருக்கீங்களே! யாராவது குடையை எடுத்துக்கிட்டு வந்திருக்கீங்களா?

மறுகணம் உடையவர் எழுந்து விட்டார். முண்டாக கட்டிய அவ்வுரு பெரு நடையோடு முன்பே எட்டிப் பிடித்து விட்டார், கையுங் களவுமாக! அக் கரங்களில் ஏந்தி யிருந்த அரவணையின் மணம் அள்ளிச் சொரிந்தது.

"அப்பனே! அவசரமேன்? தாங்கள் யார்?"

தடைப்பெற்றுவிட்ட அக்கரிய உருவினன் சிறுநகை புரிந்தான். "நான் யாரென்பதைத் தெரிவிக்க உமக்கு விளக்கம் தேவையிராதே! நீர் அனுமானித்துள்ளபடி நான்—நான்தான்!"

"பிரபோ! அடியேனுக்குத் தங்கள் திருமேனியழகைச் சாதிக்கும் தாங்கள், இவ்வேளையில், இந்நிலையில் ஈடுபடக் காரணமாகிய அப்பெரும் பாக்யவானை அறிய அவாக்கொண்டே தங்களை வினவுகிறேன்."

"அவனை யறிவிக்க வேண்டுமா? என் அடிச்சுவடு பற்றி வாரும்!"

கரியவன் முன் நடக்க, உடையவர் பின் தொடர, அவர்கள் கொள்ளிடக்கரை சேர்ந்தனர். எத்தகைய ஆச்சரியம்! இடைப் பாதையில் இயற்கையாக இருக்கிடும் இடைஞ்சலும்கூட இடர்ப்படா நிலைக்கு அவ்வழித் துணைவனின் மகாசக்திதான் என்னே!

அங்கே—வெண்ணிற மணலில் மல்லாந்து படுத்திருந்த மனித உருக் கண்டு உடையவர் மருண்டு நின்று விட்டார். அவனோ, நீட்டிய காலையும் மடக்கினானில்லை!

"வந்தியா? ஏனய்யா இன்று இத்தனை நாழிகை? உனக்கும் மனிதவாடை வந்துவிட்டதோ?"—அவன் அதிகார தோரணையில் அலறினான். அவ்விநாடியே உடையவர் சுவாமி உள்ளம் நெகிழ, மெய்சோர விலவிலத்து நின்றார். அப்போதுதான் அவருக்கும் ஒரு விஷயம் அறிவுக்கெட்டியது. பல தினங்களாக ஊரைச் சலித்துத் தேடிக்கொண்டிருக்கும் சிற்பியல்லவா இங்கே இருப்பவன்! இவனுக்கா இத்தகைய மகோன்னத பாக்கியம்? இவனுக்கா இப்பரமாத்ம சொரூ

பத்தையே பலியாளனாக்கிக் கொல்லும் பண்பாடு?

அக்கரியவன் குறுநகை புரிந்தவாறு கையிலிருந்த அமுதை அவன் வாயினுள் ஊட்டுவித்தான் அளவற்ற அகமகிழ்வு அவன் முகத்தே சொரிந்தது அப்போது! ஆதங்கத்துடன் ஆறு கவளங்கள் உள்ளே சென்றன.

உடையவர் சுவாமி பெரும் பரபரப்புக் கொண்டவராகி, அச் சிற்பியின் கரம் பற்றினர். ''அப்பா! நீ பிரபஞ்சத்துக்கே ஒரு மகாபாக்கியசாலி யென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனாலும், இப்போது நீ சாதித்து வரும் வைராக்கியம் மிகக் கொடூரமானது. அண்ட சராசரங்களுக்கும் அமுதூட்டி அருள் பாலிக்கும் அரங்கமாமணியவனை, கேவலம் அவலப்பிறவிகளான நாம் அற்ப ஏவலின் மூலம் அவன் புகழை மதிப்பிடுவது மகா அபசாரம். வேண்டாம்! இவ்விநாடி முதல் இவ்வேலை நான் செய்யச் சித்தமாகவுள்ளேன். எழுந்து என்னுடன் வா!''

வடுகநம்பி 'வெடுக்'கென்று நகைத்தான். அதில் ஏளனம் வெட்டி விழுந்தது! ''ஏன்? அத்தகைய ஆதார சக்தியான அவனுக்கே தனது பள்ளி யரவணையைத் தள்ளியெழுந்து வருவதற்குள் வெள்ளி யெழுந்து விடும்போது, இன்னும் உமது கண்காணிப்பின் கீழ் எவ்வளவு அழகான கவனிப்பு இருக்குமென்று எனக்குத் தெரியாதா?''

உடையவர் சுவாமியின் உள்ளத்துக்குள் அவனது சொற்கள் கொடுமுட்களாகக் குத்தின! அவன் தம் ஆதீனத்தின் கீழ் தாம் வருத்த நந்தாம் கொத்தின் ஒரு ஊழியனுகவா பேசுகின்றுன்? பரமனின் முன்னிலையில் அவன் வெறி கொண்டல்லவா பிதற்றுகிறுன்! அவரது முகம் லச்சையும், அவமதிப்பும் கொண்டு சுருங்கியது. அவர் நெடுமூச்செறிந்தவாறு, ''அப்பனே! உனது முடிவான கருத்துத்தான்—கோரிக்கைதான் என்னவென்கிருய்?'' என்ருர் வினயத்துடன்.

''அப்படிக் கேளுங்கள்! இதோ இருக்கும் பரமன் எப்படி அந்தக் காற்றும் புகாக் கருங்கல் பாறைக்குள்ளிருக்கும் தேரைக்கு மட்டிலும் காற்றும், நீரும், உணவும் கொடுத்து ரட்சிக்கிறுனென்பதை முதலில் கேட்டுக் கூறும்!''

''அப்பா, உன் சஞ்சலத்தைத் தெளிவிப்பது சிறிது கடினம்தான். பரம அணுவினுள்ளும் நிறைந்து கிடப்போனுகிய இப்பரம்பொருளின் சொரூபத்தையும், செயலையும் ஆராய்ந்து விவரிக்க நாம் அருகதையில்லை. ஆனாலும், அவனது சிருஷ்டிகள் ஒவ்வொன்றுக்கும் 'ஊழ்வினைப் பயன்' என ஒன்றுண்டல்லவா? அதை யொட்டித்தான் அதனதன் ஜீவனோபாயங்கள் நிர்ணயமாகும். அவற்றையெல்லாம் விளக்க இப்போது தருணமில்லை. நீ என்னுடன் வந்து விடு!'' இவ்வாறாக உடையவர் சுவாமி உள்ளமுருகக் கூறினர்.

அவன் மீண்டும் 'கலகல'வென நகைத்தான். ''சுவாமி! தங்களையும், என்னையும் அத்தேரையையும் படைத்த ஆண்டான் இதோ இருக்கின்றுன். தங்களால் கூறமுடியாததை அவனாவது தன் திருவாய் திறந்து கூறுகின்றுனு, பாரும்—அவன் மகா அழுத்தன்!'

இவ்வளவு நேரமாக நிகழ்ந்த விவாதங்களைக் கேட்டபடியே நின்ற அப்பரமன், பரம சாதுப்போல் புன்னகை பூத்து நின்றான்!

உடையவரின் விழிகளில் நீர்மல்க, குறுகிய உடலும், குவித்த கரமுமாகப் பரமனின் பக்கல் திரும்பி அத்திருமுகம் நோக்கினார். "மகாப் பிரபோ! இச்சிற்பியின் நிந்தை மொழிகளுக்கும், மௌடீக வாதத்துக்கும், திருச்செவி சாய்த்து நிற்கும் தங்களின் சத்துவ குணங்களைச் சிறப்புக் கூற அடியேனுக்கு நாவன்மை யேது? நான் அற்பத் துரும்பு" என்றார் இதயம் நெகிழ.

பரமன் வாய் திறந்தான்! "வடுகநம்பி மௌடீகனல்லன். பரிபக்குவம் பெற்றுவிட்ட ஞானி! அவன் இதயம், உலக இயல்புக்கும், மனித இயல்புக்கும் அப்பாற்பட்டு விட்டது. அவன் தன் உடல் உழைப்பைக் கடமை வினையாகக் கருதி அலுத்துப் புரிந்ததில்லை. உழைப்பையும் உள்ளத்தையும் ஒருங்கு பிணைத்துப் பணியாற்றியவன். சிறிய உரு, பெரிய உருவாக அவன் இதுகாறும் சிருஷ்டித்துள்ள என் உருவப் படிமங்கள் அனந்தம்! அல்லும் பகலுமாக அவன் என்னுருவில் உள்ளமுருகி, மெய்மறந்து ஒருப்பட்டவன். அத்தனை உருவம் அவனது பரிபக்குவ நிலையை வெளி உலகுக்கு அறிவிக்கும் சாதனமாகி விட்டது!

"அவனது விந்தையான வாதத்தில் அகந்தையில்லை. அவன் நிந்தையாகக் கூறியவை யனைத்தும் என் சிந்தைக்குகந்த துதிகள்! அவன் பக்கலில் நான் ஓடி வருவதும், எனக்கெனப் படைத்த அரவணையைச் சுமந்து வந்து அவனுக்கு ஊட்டுவிப்பதும், அடியார்க்கு அடியானான என் கடன்! இவ்வடுக நம்பிபோன்ற விவாதிகள் தோன்றுங்கால் தான் என்னைப் பற்றிய சிந்தைகளும், சிறப்பும் உலகத்தவர் அறிய இயலும்!"

ஆகா! வடுகநம்பி ஏன் எழுந்து விட்டான்? அவன் உடலில் இதுகாறும் இருந்திராத இவ்வளவு பரபரப்புக்களும் இப்போது எப்படி ஏற்பட்டன? அவன் விழிகளிலிருந்து அருவியாகப் பெருகி வழியும் இவ்வளவு நீர்த் தாரைகளும் எதனால் ஏற்பட்டவை? எல்லாம் பரமன் கூறிய சமாதான மொழிகளின் சக்திதாமோ?

உடையவர் சுவாமி தம் இரு கரங்களையும் தலைக்கு மேல் குவித்துப் புளகாங்கிதம்கொண்டார். "பரமாத்மா! அரவணையூட்டிய அமுதனே! தங்கள் திருவுருவைக் காணும் பாக்கியமும், திருவாய் மொழி கேட்கும் அருட் செல்வமும் கிடைக்கச் செய்த இச் சிற்பியே அடியேனுக்கும் ஆசானாகி விட்டான்!" இவ்வாறு கூறியவாறு எண்சாண் உடலையும் பூமியில் கிடத்திப் பரமனின் பாத கமலங்கள் நோக்கிக் கரம் நீட்டினார். அப்போது அவர் கரங்களுக்குக்கிடைத்த பொருள் வடுக நம்பியின் குவித்த கரங்கள்தாம்!

அரவணையூட்டிய அமுதன், பொறுப்பு நீங்கிய களிப்பில் எங்கிருந்தோ சிரித்தான். ஒலிதான் கேட்டது. அவன் உருவை மாயை மறைத்து விட்டது!

அவ்விருவர் உடல்களும் பூமியினின்றும் எழுந்து நிற்கையில் குணதிசை வானத்தின் அடிவிளிம்பில் பரமனின் செங்கமலப் பாத ரேகைகள் தெரிந்தன!

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

55. முடிவளர — நரை மாற

“இந்த ஏற்பாடே எனக்குப் பிடிக்கவில்லை. மகாசங்கடம். இதற்கு சமாராதனை, ஸந்தர்ப்பணை, அன்னமிடல் ஆகிபெறல் என்று இப்படிப் பதினாயிரம் வர்ணனைகள்.”

“என்ன ஐயா இந்த ஏற்பாட்டில் நீர் காணும் குறைபாடு?”

“இதோ பாரும்! சாப்பிட உட்கார்ந்து இருபது நிமிஷமாயிற்று. பருப்பு, பச்சடி, அவியல், பொரியல், கூட்டு, பாயசம் என்று ஏதேதோ பரிமாறிக்கொண்டே போகிறார்கள். இன்னும் சாதம் வருவதற்கான அறிகுறியே இல்லை. வயிறு கிள்ளக் கிள்ள இப்படிக் காத்திருப்பதை......”

“ஆமாமப்பா! எடுத்த உடனேயே அன்னத்தைப் பரிமாறும் வழக்கம் சில இடங்களில் உண்டு. அப்படியானாலாவது ஏதோ—முதல் பசி தீர இரண்டு கவளம் சாப்பிடலாமே!”

“உம்! இக்கரைக்கு அக்கரை பச்சை. நான் நீங்கள் சொன்ன வகையைச் சேர்ந்தவன். ஆனால் என்ன? அதிலும் தான் கஷ்டமிருக்கிறது. சோறு பரிமாறின பிறகு சாறு வருவதற்குள் ஒரு யுகம் காத்திருக்க வேண்டும். அதற்குள் சாதம் ஆறி அவலாய்ப் போகும். வெறுஞ்சோற்றைத் தின்ன முடியுமா?”

“அது மாத்திரமா, சுவாமி? வேறொரு தகராறும் இருக்கிறது. இந்த சமாராதனை முறையில் என்ன என்ன சமையல் என்பது தெரிந்து விடுகிறது. நமக்கு இஷ்டமான ‘அயிட்ட’த்துக்கு வயிற்றில் இடம் ‘ரிஸர்வ்’ பண்ணிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. மற்றைய முறையில், பசியின் ஆத்திரத்தில் பருப்பு, மோர்க்குழம்பு சாதத்தில் வயிற்றை நிரப்பிக் கொண்டு, பிறகு பரமான்னம், சித்ரான்னம், பக்ஷணங்கள் வரும் போது வயிற்றில் இடமில்லாமல் ஏமாற்றமடைய நேருவதுண்டு. அந்த ஏமாற்றத்தை விட இப்போது சிறிது பொறுத்திருப்பதுஎவ்வளவோ நல்லது.”

“ஆமாம்! சிறிது பொறுத்திருப்பதால் பசி அதிகமானால் நல்லதுதானே! இன்னொரு துண்டுவல்வா, இன்னொரு லட்டு இடையில்இவிப்புக்கு மாற்றுஇரண்டு.”

“என்னமோ! சொந்த அநுபவத்தை யொட்டிப் பேசுகிறீர்கள்!”

“ஓய்! நீர் மட்டும் என்ன ஐயா......?

“அதோ! அதோ! அன்னம் வருகிறது......?”

இப்படி ஒரு சம்பாஷணை என் கற்பனையில் உதித்தது.

“என்னய்யா? முடி விஷயம் முடியாத விஷயம் என்று எதுகை மோனையுடன் அடுக்கு மொழியில் எழுதியதை அநுசரித்து இப்படி எழுதிக் கொண்டு போகிறீர்களே! பொட்டோ, பொடுகோ, அல்லது சுண்டுதானோ! அஃதொன்றுமில்லாமலேயோ, முடி உதிருகிறது. அதை நிறுத்த என்ன செய்யலாம் என்று ‘டக், டக்’ என்று விஷயத்தை விளக்காமல் காக்க வைத்துக் கதைக்கிறீரே” என்று சில நேயர்கள் - கடுமை தொனிக்கக் கேட்க ஆரம்பித்து விட்டனர். சொல்ல வேண்டியதைச் சொல்லித் தானாக வேண்டும். சொல்லத்தான் போகிறேன். இதோ சொல்லியும் விடுகிறேன்.

பொட்டுப் பொடுகுகளால் முடி உதிர்வதாயின் அதைக் குணப்படுத்துவதுதானே முதலில் செய்ய வேண்டியது? ஆகவே, அவ்விஷயத்தை முழுவதும் விளக்கி விட்டேன். பொட்டு, பொடுகு குணமான பிறகு உதிர்ந்த முடிகள் மறுபடியும் முளைக்க என்ன செய்யலாம் என்பது அடுத்த பிரச்னை. இதற்குப் பல உபாயங்களை அநுசரிக்கலாம். ஆனால் பெருவாரியானவர்களுக்குத் தவறாமல் குணம் பயந்ததை முதலில் சொல்லி விடுகிறேன். அது தான் தினசரி தடவி முடி சீவிக் கொள்ள நீலி பிருங்காதி என்ற தைலத்தைத் தொடர்ந்து உபயோகித்து வருவது. அத்தைலத்தைச் செய்யும் முறையையும் சொல்லி விடுகிறேன். தைலத்தைக் காய்ச்சிக் கொள்வது சிறிது சிரமம் தான். அதனால் என்ன? வருஷாந்தரத்துக்கு வேண்டிய அப்பளம் கறிவடகம் இவற்றையும் சுண்டை வற்றல், மணத்தக்காளி வற்றல் ஆகியவற்றையும் ஒரே தரமாகச் செய்து “ஸ்டாக்” பண்ணிக் கொள்வதில்லையா? ஏன்? இங்கே இவற்றைத் தயாரித்து, தாமே தயாரித்துக் கொள்ள வசதியில்லாத பம்பாயிலுள்ள மகளுக்கும் தில்லியுள்ள மருமகளுக்கும் அனுப்பி வைப்போர் இல்லையா? அவ்விதமே இத்தைலத்தையும் தயாரித்து அனுப்பலாமே!

அட! அது வேறு விஷயம் ஐயா. இந்தத் தைலத்தைக் காய்ச்சப் பச்சிலைகள் சில காலத்தில்தான் கிடைக்கும்.

சில காலத்தில் கிடைக்காது. அதற்கு என்ன செய்வது ?

இந்தத் தைலத்தையும் பச்சிலை கிடைக்கும் காலத்தில் தயாரித்துக் கொண்டு, கிடைக்காத காலத்திலும் ஆண்டு வரலாம். தயாரித்துக் கொள்ள வசதி இல்லாதவருக்கும் கொடுத்து அனுப்பலாம். ஆகவே தைலத்தைச் செய்யும் முறையை எழுதுகிறேன்.

நீலிப்ருங்காதித் தைலம் : அவுரி — இதைச் சிலர் நீலி என்பர். இதன் இலை, கரிசலாங்கண்ணி, முடக்கித்தான், பச்சை நெல்லிக்காய் ஆகியவற்றைத் தனித் தனியாக இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு படி.

பச்சை நெல்லிக்காய் கிடைக்காத பக்ஷம் உலர்ந்ததின் ½ வீசையை எடுத்து, ஒன்றிரண்டாக இடித்து 4 படி ஜலம் விட்டு ஒரு படியாகக் கஷாயம் காய்ச்சி மருந்தைக் கசக்கிப் பிழிந்து களைந்து விட்டு, கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளலாம்.

இந்தச் சாறுகளுடன் வெள்ளை ஆட்டின் பால், தேங்காய்ப்பால், பசுவின் பால், எருமைப்பால் ஆகியவை வகைக்கு ஒரு படி விதம் கூட்டிக் கொள்ளவும்.

இவற்றுடன் நல்லெண்ணெய் வீசை 2ம், அதிமதுரம், குன்றியின் உட்பருப்பு, ஸௌருமாக்கல் என்னும் அஞ்சனக்கல் ஆகியவற்றை வகைக்கு ஒரு பலம் விதமும் மேற்சொன்ன பாலில் ஒன்றை விட்டு மைபோல் அரைத்துக் கல்கமாகக் கூட்டிக் கொள்ளவும். சாறுகள் 4, பால் 4, எண்ணெய் கல்கம் யாவற்றையும் ஒன்றாய்க் கூட்டி அடுப்பில் ஏற்றிக் காய்ச்சவும்.

ஜலாம்சமெல்லாம் கண்டி, கல்கத்திலுள்ள ஈரமும் வற்றி, கல்கம் மணல் போல் வரும்போது இறக்கித் தைலத்தை வடிகட்டி எடுத்து உபயோகிக்கவும்.

இதைத் தொட்டுத் தலைக்குத் தடவும் உள்ளங்கையில் முடி வளரும், முடி உதிர்ந்த தலையைப் பற்றிச் சொல்லவும் வேணுமா என்று சாத்திரத்தில் சொல்லி இருக்கிறது. உள்ளங் கையில் முடி வளருவதில்லை. ஆனால் தலையில் உதிரும் முடி நிற்கிறது. உதிர்ந்தவைகளும் முளைக்கின்றன.

ஆம்ராஸ்தியாதி தைலம் : மாங்கொட்டையை வெய்யிலில் உலர்த்திய பின் எடுத்த அதன் உட்பருப்பு, இரும்பின் அரப்பொடி, ஸௌருமாக்கல் ஆகியவை வகைக்கு ஒரு பலம். கடுக்காயின் தோல், தானிக்காயின் தோல், கொட்டை நீக்கிய நெல்லி முள்ளி ஆகியவை வகைக்கு அரைப் பலம். இவற்றைத் தண்ணீர் விட்டு அரைத்து அரை வீசை நல்லெண்ணெயில் கலந்து கொள்ளவும்.

கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றை வகைக்கு நாலு பலம்

பாட்டி :—நாமெல்லாம் பிறருக்கு உதவி செய்வதற்கே பிறந்திருக்கிறோம் !



பையன் : அப்படின்னா பிறத்தியாரெல்லாம் எதற்காகப் பிறந்திருக்கிறார்கள் பாட்டி ?

விதம் எடுத்துப் பெருந்தூளாக இடித்து ஆறுபடி ஜலத்தில் இட்டு ஒன்றரைப்படி கஷாயமாகக் காய்ச்சி எடுத்து மேற் சொன்ன எண்ணெய் கல்கத்துடன் கூட்டி அடுப்பில் ஏற்றிக் காய்ச்சவும். ஜலமெல்லாம் கண்டிக் கல்கம் சேறு போல் குழம்பி நிற்கும் நிலையில் யாவற்றையும் ஒரு இரும்புப் பாத்திரத்தில் இட்டு இரும்பு மூடி கொண்டு மூடி, நெல்லில் நான்கு மாதங்கள் புதைத்து வைக்கவும்.

பிறகு இதை எடுத்து, தைலம், சளி போலுள்ள கல்கம் யாவற்றையும் ஒன்றாய் அடுப்பில் ஏற்றி மறுபடியும் காய்ச்சவும். கல்கம் மணல்போல் வரும்போது இறக்கி வடிகட்டி வைத்துக் கொண்டு தினசரி முடி சீவிக் கொள்ள உபயோகித்து வந்தால் இளநரை மாறும். இதுவும் அனுபவத்தில் நல்ல பலனைப் பெருவாரியானவருக்கும் கொடுத்திருக்கிறது.

இது காய்ச்சும் போது ஏராளமாக நுரையுடன் அடங்காமல் பொங்கி அடுப்பில்வழியும் இயல்புள்ளதென்பதை ஞாபகத்தில் வைத்திருத்தல் அவசியம். ஒரு சிறிய அகல் விளக்களவு தீயிட்டாலும் அடங்காமல் பொங்கி வரும். கல்கம் பாத்திரத்தின் அடியில் பிடிக்கும். இதைத் தவிர்க்கக் கிளறினால் அதிகம் பொங்கும். தீயிடவும்முடியாது. தீயிடாவிட்டால் தைலம் காய்ச்சி முடியாது. இந் நிலையில் என்ன செய்வது ? மிகவும் கஷ்டப்பட்டுத்தான் காய்ச்சி முடிக்க வேணும். அரை மணி நேரத்தில் முடிக்கக்கூடிய வேலையை இரண்டு தினங்கள் அடுப்பின் அருகிலேயே இருந்து முடிக்க வேண்டும். எப்படியோ ஆபத்தில்லாமல் முடிந்தால் போதும் என்ற அளவுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டு விடும். முடி வளரப் போகிறது என்ற மகிழ்ச்சியில், அலுப்பும் சலிப்பும் ஏற்படாத வண்ணம் தைலத்தைக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவே தோன்றும்.

சூப்பர்வைசர் கண்ணாயிரம் தொழிற்சாலைக்குக் கிளம்பும்போது, தூறல் சற்றே ஓய்ந்திருந்தது. சிற்றுண்டியை டப்பாவில் அடக்கம் செய்து கொண்டிருந்த செல்லம், அபூர்வமாக அணியும் உயர்தர ஆடைகளைத் தன் கணவர் உற்சாகத்தோடு உடுத்துவது கண்டு அதிசயித்தாள்.

இன்று, தொழிற்சாலை மானேஜர் அருள்சாமி உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெறும் தினம். எனவே, அமோகமான பிரிவுபசாரமும் தேநீர் விருந்தும் நிகழ்த்த ஊழியர்கள் திட்டமிட்டிருந்தனர்.

சமையலறைவரை வந்து டப்பாவை வாங்கிக்கொண்ட கண்ணாயிரம் திடீரென குணம் மாறி, ''உடம்பு நல்லபடியா ஆபீசுக்கு ஒழுங்கா நான் போகறது ஆகலியா உனக்கு'' என்று உறுமினான். அவன் கையிலிருந்த டப்பா மின்னல் வேகத்தில் தரைமீது மோதி சிற்றுண்டியை சிதற அடித்தது. செல்லம் வாயெடுப்பதற்குள் அவன் வெளியேறிவிட்டான்......

வான வில்

கண்ணாயிரத்தின் விசித்திர சித்தம் இன்று நேற்றையக் கதையல்ல. தொழிற்சாலை விட்டதும் நேராக வீட்டுக்கு வருபவன் அவனல்ல. அன்றாடம் சினிமா கடைசி ஆட்டம் பார்த்துவிட்டு நேரங்கழித்து வந்து, சாப்பாடாகி விட்டது என்று கூறிக் கடுகடுத்துவிட்டுப் படுப்பது அவன் வழக்கம். செல்லத்தைக்



கண்டு இரங்கிய அடுத்த வீட்டு அமீனா ஒருநாள் அவளிடம் கூறினாள்: ''தொழிற்சாலை விட்டதும் நேரா அவரை வீட்டுக்கு வரவழைக்கிற வழியும் ஒங்கிட்ட இருக்கணும். நான் சொல்றபடி செய்...''. அணியும் சேலையிலும், பழகும் நேயத்திலும், சமைக்கும் உணவிலும் புதுமை புகுத்தும்படி மன்றாடினாள் அமீனா.

நாள் தவறாமல் டப்பாவில் மோர்சாதம் இட்டுக் கொடுப்பதன் தவறை உணர்ந்துகொண்டாள் செல்லம். ஆனால், ''சினிமாக்கும் அதுக்கும் இதுக்கும் போனதுபோக, மீதிப் பணத்திலே தெனந்தெனம் நெய்ப் பலகாரம் தயாரிக்கக் கட்டுமா'' என்றாள். பிறகு அமீனா விளக்கிக் கூறியபின் எல்லாமே சுலபமாகப்பட்டது. அப்புறம் ஏழு நாட்கள்தாம்! எப்படி மாறிப்போய்விட்டாள் செல்லம் — புதிய சேலை . . . புதிய வர்ணம் . . . புதிய சமையல் . . . !

ஆம், டப்பாவிலும் புதுப்புது ஆகாரங்கள் இடம்பெற்றன. கணவரும் அவற்றை ரசித்ததாகப் புலப்பட்டது. ஆனால் எட்டாவது நாள், அலமாரியிலிருந்த டால்டா டின்னை அவள் கவனித்துவிட்டாள். உடனே அவள் கனவும், அந்த சிற்றுண்டி டப்பாவும் சிதறின......

DL. 335A-19 TM

அதே தினம் பிற்பகல். இளவெய்யிலில் காய்ந்துகொண்டிருந்தது. மாலை முதலாட்டம் போவதற்காக நண்பர்களுடன் சினிமா டிக்கெட்டு வாங்கியிருந்தான் கண்ணாயிரம். தொழிற்சாலை நிர்வாகிகள் அன்று ஒரு மணி முன்னதாகவே கடையைக் கட்டிவிட்டு பிரிவுபசார வைபவத்தைத் துவக்கியிருந்தனர். அருள்சாமியின் சேவையைப் பாராட்டிப் பலர் பேசினர். நானாவித பட்சணங்கள் பின்தொடர்ந்தன.

"ஏது, வகையறுக்கள் பலமாக இருக்கிறதே. ஆனாலே இழுக்குது. எண்ணெய் வாடையில்லாதது நல்லது!" என்றார் ஒரு போர்மன்.

"எல்லாவற்றையும் டால்டாவில் தயாரித்தோம்" என்றார் கன்னினர். அதிர்ச்சியடைந்த கண்ணாயிரம் கேட்டான்: "என்னய்யா, இப்பத்தான் உடல் நலனைப்பற்றி மானேஜர் பேசினாரு. உடனே டால்டாப் பலகாரமா? ஒத்துக்குமய்யா உடம்புக்கு?"

"பொரிக்கறதுக்கும் தித்திப்புப் பண்டங்களுக்கும், மட்டுமே நம்ம ஊட்டுலே உபயோகிப்பாங்க. இங்கே என்னடான்னு எல்லாத்தையும் டால்டாவிலே..." என்று இழுத்தார் போர்மன்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தொழிற்சாலை மெடிகல் ஆபீஸர், கண்ணாயிரத்தைப் பார்த்தவாறு பதிலளித்தார்: "நீங்கள் நினைப்பது சரியல்ல. நெய்யிலுள்ள அதே அளவு வைடமின் 'ஏ'யும், அதோடு வைடமின் 'டி'யும் டால்டாவில் சேர்க்கப்படுகின்றன. ஆகவே, நோய்நொடி வாராமல் திடமாக இருக்கவும், பல்லும் எலும்பும் வலுவாக இருக்கவும் உதவுகிறது டால்டா வனஸ்பதி."



மேலும், போர்மனிடம் திரும்பி டாக்டர் கூறினார்: "எல்லாச் சமையலுக்கும் ஏற்றது டால்டா. விசேஷ நாட்களோ, சாதாரண நாட்களோ, எவ்வித சமையலுக்கும் பயன்படும். புத்தம்புதிய தாவரக் கொழுப்புக்களிலிருந்து அது தயாரிக்கப்படுகிறது. எங்கள் வீட்டில் பூராவும் பயன்படுவது டால்டா!"

ருசிபார்த்த போர்மனும் பிறகு ஒத்துக்கொண்டார்: "ஆமாம். ஜோராத்தான் இருக்கு. நம்ப பெண்சாதிகிட்ட சொல்லணும்!"

சாய்ந்து உட்கார்ந்திருந்த கண்ணாயிரம், எதிரே பரிமாறப்பட்ட மைசூர் பாக், ஜிலேபி, பஜ்ஜி, பூரி உருளைக்கிழங்கு, புளியோதரை, வறுவல் முதலியவற்றைப் பார்த்ததும் சொக்கிவிட்டான். அவற்றின் இனிய சுவை மனதில் வீட்டு நினைவையும் மனைவியின் உருவத்தையும் கிளறின. "பாவம், செல்லம் — அன்புடன் அவள் அளித்த உயர்தர உணவை உதறிவிட்டோமே...!" என்று துடித்தது அவனுள்ளம்.

மானேஜரிடம் கைகுலுக்கிவிட்டு, கண்ணாயிரம் அவசரமாக சில பட்சணங்களைப் பொட்டணமாகக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். வெளியே இளவெய்யிலும் சிறு தூற்றலும் இழைந்த வர்ண ஜாலம்!

"பிக்சர் மறந்துட்டியா, கண்ணாயிரம்? எங்கே புறப்பட்டே?" என்று இடைமறித்தான் ஒரு நண்பன். சிரித்துக்கொண்ட கண்ணாயிரம் சினிமா டிக்கெட்டை அவன் கையில் திணித்துவிட்டு விரைந்தான். போகும் வழியில் கடைத்தெருவிலிருந்து ஒரு மல்லிகைச் செண்டும், பேரிச்சை மர அடையாளமிட்ட டின் ஒன்றும் அவன் கரத்தை அடைந்தன; எதிர்வானத்தில் ரம்மியமான வானவில் ஒன்று தனது ஏழு வர்ணத் தோகையை விரித்து அவனை வரவேற்றது!



"காலையில் வந்துள்ள கடிதத்துக்கு என்ன பதில் எழுதுவது?" இந்தப் பிரச்னை தான் தர்மராஜனுடைய இதய வேதனையின் காரணகர்த்தாவாக அமைந்திருந்தது.

தன்னுடைய மனக் கஷ்டத்துக்குக் காரணமாக இருந்த அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை எடுத்துப் படித்தார் அவர்.

"ஸ்ரீ தர்மராஜன் அவர்களுக்கு,

முன்பின் தங்களை நான் அறிந்தவனல்ல. ஆனாலும் மணப் பருவத்தில் இருக்கும் என்னுடைய புதல்வியின் நலனை வேண்டி, துணிவுடன் இதனை எழுத முன் வந்தேன். என்னுடைய குமாரி சௌ. ரஞ்சனியைச் சிரஞ்சீவி கோபாலனுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்ற உத்தேசம் எங்களுக்கு இருக்கிறது. சிரஞ்சீவி கோபாலன் தங்களுடைய மாஜி மாப்பிள்ளை என்று விசாரித்ததில் தெரிய வந்தது. தங்கள் குமாரத்தி சாவித்திரியை அவர் கரம் பற்றிய பின், இரண்டு வருட கால தாம்பத்திய வாழ்வின் இறுதிக்குள்ளேயே அவளை இழந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன்.

ரஞ்சனி தற்செயலாகக் கோபாலனைச் சந்திக்க நேரிட்டது. அது முதல் அவருக்குத் தான் மாலையிடுவேன் என்று பிடிவாதமாக இருக்கிறாள் அவள். ஆகவே இரண்டாம் தாரம் ஆனாலும் பரவாயில்லை; சிறு வயது தானே என்ற ஆறுதலின் மேல் அழகரான கோபாலனுக்கு என் மகளை மணம் முடிக்க விரும்புகிறேன். எனக்கு இருப்பது ஒரே பெண். என்னுடைய அளவற்ற ஆஸ்தி-பூஸ்திகளுக்கு அவளே அதிபதி. அழகிலும் அறிவிலும் சிறந்த அவள் கண் கலங்க எங்கள் மனம் சகியாது.

கோபாலனுடைய குணாதிசயங்களை அறிவதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன். சீர் செனத்திகளைப் பற்றி நான் அக்கறைப்படவில்லை. என் செல்வ மகளின் சுகவாழ்வே பிரதானமாகக் கருதுகிறேன். நேரில் வந்து தங்களிடம் விவரம் கேட்டுப் போக முடியாமல், பல அவசரக் காரியங்கள் குறுக்கிடுகின்றன. அதனால் தயவுசெய்து என்னுடைய புதல்வியின் இல்வாழ்வு கோபாலனுடன் இணைந்து வரமுடியுமா என்பதை, கோபாலனுடைய குணங்களைக் கொண்டு கடிதம் மூலம் தெரிவிக்கவும். இரண்டு வருட காலப் பழக்கத்தில் மாப்பிள்ளையைத் தாங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

தங்கள் பதில் கண்டு முகூர்த்தம் குறிப்பிட வேண்டும்.

ராமநாதன்."

கோபாலன்!

அந்தப் பெயரை நினைத்த மாத்திரத்திலேயே தர்மராஜனுடைய அகக் கண் முன்பு ஆஜானுபாகுவான, கம்பீரமான உருவம் காட்சியளித்தது.

செந்தாமரை போன்ற நிறமுள்ள செழிப்பான உடல் அமைப்பு, சதா புன்சிரிப்புத் தவழும் முகம், அலை அலையாகப் படிய வாரி விடப்பட்ட அழகிய கிராப்புத் தலை, எடுப்பான நாசி, அறிவுச் சுடர் விடும் தீட்சண்யமான விழிகள்.

இத்தனையும் சேர்ந்து கோபாலனை ஓர் அழகனாக அமைத்திருந்தன.

ஆனால்...ஆனால்...

இலந்தைப் பழம் கூடத்தான் வெளிப் பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கிறது! அதன் உள்ளே பார்த்தாலோ?......

அழகிய அந்த உடலுக்குள்ளே இருக்கும் இதயம்தான் எத்தனை கொடூரமானது? அப்பப்பா! அதை நினைத்தாலே நெஞ்சம் பதறித் துடிக்கிறதே!

* * *

சாவித்திரி! ஏழைமையான சூழ்நிலையிலே உள்ள ஒரு எளியவனுடைய பெண்ணாக அவள் அவதரித்தபோது, 'ஐயோ! இதுவும் பெண்ணா?' என்று அவளைப் பெற்றவன் அலுத்துக் கொள்ளவில்லை.

'ஐந்தாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது. இந்தப் பெண்தான் நமக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுக்கப் போகிறாள்!' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டான்.

கொள்ளை அழகுடன் பொலிந்த குழந்தை சாவித்திரி தன் குமுதச் செவ்வாய் திறந்து மகிழ்வுடன் சிரிக்கும்போது தர்மராஜனுடைய உடல் சிலிர்க்கும். ஆசையுடன் அவளைத் தூக்கி அன்புடன் முத்தமிடுவார்.

அதிகக் குழந்தைகள் ஆக ஆக வெறுப்பு ஏற்பட்டு விடும்; அடுத்துப் பிறந்த குழந்தையை எடுத்துக் கொஞ்ச மாட்டார்கள் என்பதனால் அழகாகச் சிருஷ்டித்து விட்டால் எப்படியும் தூக்கிக் கொஞ்சுவார்கள் என்றுதானோ என்னவோ, இறைவன் பின்னர் பிறக்கும் குழந்தைகளை மிக்க எழிலுடையதாய்ப் படைக்கிறான் போலும்!

எல்லாக் குழந்தைகளையும்விட ஒரு படி உயர்த்தியாக அவளை நினைத்து, அதிகச் செல்வத்துடனும் பாசத்துடனும் வளர்த்தார் தர்மராஜன்.

அதனால்தானோ என்னவோ, அவள் இன்று எட்டாத கனியாகப் போய்விட்டாள்.

குழந்தைகள் வளர்ந்தார்கள்; ஏதோ சில வகுப்புகள் படித்தார்கள்; உரிய காலத்தில்

முதல் நான்கு பெண்களுக்கும் தம் சக்திக்குத் தக்கபடி வரனைப் பார்த்து அவர் மணம் முடித்து வைத்தார்.

சாவித்திரியை மட்டும் எஸ். எஸ். எல். ஸி. வரை படிக்கவைக்க விரும்பினார் தர்மராஜன். கை சளைத்திருந்த போதும், கடன் வாங்கி அவளைப் படிக்க வைத்ததை அவ்வளவாக விரும்பாத தாய், தடுத்துப் பார்த்தாள்; பயன் இல்லை.

ஆனால் மாகாணத்துக்கே முதன்மையாக அவள் தேர்ச்சி பெற்றபோது மகிழ்ச்சிப் பெருக்கால் பூரித்தார்கள் பெற்றோர்கள்.

தொடர்ந்து மேல் படிப்புக்கு அவளை அனுப்பியிருந்தால் .....

கண்களில் துளித்த நீரை விரலால் சுண்டி விட்டுக் கொண்டார் தர்மராஜன்.

எதிரே சுவரில் மாட்டியிருந்த சாவித்திரியின் புகைப்படத்தை, மணக்கோலத்துடன் அவளும் கோபாலனுமாக எடுத்துக் கொண்ட படத்தை எடுத்துக் கையில் வைத்து ஒரு கணம் உற்றுப் பார்த்தார்.

மீண்டும் சிந்தனைக் கடலில் மூழ்குவிக்க ஆரம்பித்தது அவர் உள்ளம்.

மனைவியின் தொந்தரவு பொறுக்க முடியாமல், மகளின் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, அவள் மண வாழ்க்கைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார் தர்மராஜன்.

எங்கெங்கோ அலைந்து தேடி, கோபாலனைமாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்தார். தாயும் மகனுமாக இரண்டே பேர்கள்தான். பிக்கல் பிடுங்கல் இல்லை. சுமாராகச் சொத்துக்களும் இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக அவனது அழகு ததும்பிய ஆஜானுபாகுவான உருவம் அவரைக் கவர்ந்தது.



மணமாகிச் சில மாதங்கள்கூட மகிழ்வுடன் குடும்பம் நடத்தவில்லை சாவித்திரி. கள்ளமில்லா வெள்ளை உள்ளம் படைத்த அவளைக் கைப்பாவையென ஆட்டி வைத்தனர், தாயும் மகனுமாக. கொள்ளை அழகு ததும்பி வழிந்த அவளுடைய எழிலுருவம் எலும்புக் கூடாக, வற்றி உலர்ந்து காணப்பட்டது. சீர், செனத்திகள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி செய்யவில்லை என்ற குற்றத்தைச் சுட்டிக் காட்டி மாமியார் அவளைப் பிடுங்கி எடுத்தாள். அந்த வேதனையிலே உள்ளம் உளுத்து, உடல் வற்றிப் போன சாவித்திரி, தன் துயரை மனத்துக்குள்ளேயே வைத்து மறுகினாள்.

ஏழைமையான பிறந்தகத்திலே, தன் துயரைத் துடைக்க வழி எங்கே ஏற்படப் போகிறது என்று நினைத்தாளோ என்னவோ?

'ஐயோ, சாவித்திரி! ஒரு வார்த்தை என்னிடம் கோடி காட்டியிருந்தால், தலையை அடகு வைத்தாவது உன் மாமியாரைத் திருப்தி செய்து, உன் வாழ்வை வளப்படுத்தி விருப்பேனே! கடைசி வரையில் எல்லாவற்றையும் மூடி வைத்தே கழுத்தறுப்பு செய்து விட்டாயே, அம்மா!'

தர்மராஜனின் நெஞ்சம் அலறியது.

அரசல் புரசலாக, மகள் புக்ககத்திலே படும் கஷ்டம் அவர் காதுகளுக்கு எட்டிய போது, பொன் வைக்குமிடத்தில் பூ வைத்தாவது நிரப்பலாம் என்று ஏதோ தம் சக்திக்குத் தக்கபடி சில பாத்திரங்களையும் பண்டங்களையும், சாவித்திரிக்குப் பட்டுப் புடவையையும் எடுத்துக் கொண்டு அவளைக் காணச் சென்றார் அவர்.

போன இடத்திலே, சேற்றிலே செந்தாமரை போன்று அத்தனை துன்ப நினைவுகளிலும், இன்பம் தரக் கூடிய செய்தியொன்று கிடைத்தது அவருக்கு.

சாவித்திரி இரண்டு மாதங்களாக ஸ்நானம் செய்யவில்லை என்பதை அறிந்து கொண்டவுடன் ஆனந்தமேலீட்டால் அவர் நெஞ்சம் நிறைந்துகிடந்தது.

இல்லறத்திலே ஏற்படும் எந்த விதப் பூசல்களும், பிறக்கப்போகும் குழந்தையின் மூலம் தகர்ந்து போகும் என்ற உண்மையை அவர் அனுபவம் நிறைந்த அறிவு அறிந்திருந்தது. ஆகையால் சாவித்திரியின் கலிதீரும் காலம் நெருங்கி வந்து விட்டது என்று களிப்புடன் திரும்பினார் அவர்.

சில மாதங்கள் சென்றன. சாவித்திரியின் பூச்சூட்டல் வைபவத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் அவர் முனைந்திருந்த சமயம்:-

ஒரு நாள்:

பேரிடி போல அந்தச் செய்தி வந்து சேர்ந்தது. பத்தரைக் கூப்பிட்டுப் பொன் காப்பு செய்ய அச்சாரம் கொடுத்துக் கொண்டிருந்தார். தபால்காரன் அலட்சியமாக விட்டு எறிந்து சென்ற கவரை மனைவி கொண்டு வந்து கையில் கொடுத்தாள்.

மேல் விலாசத்திலே மகளின் கையெழுத்தைக் கண்டு பரபரப்புடன்—ஆவலும் ஆனந்தமும் உந்தித் தள்ள—அதைப் பிரித்தார்.

''அன்புள்ள அப்பா!

இதை எழுதும்போது என் மனம் படும் பாட்டை விட, இதைப் படிக்கும்போது, தாங்கள் படும் பாட்டை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. என்ன செய்வது? எது வரினும் அனுபவிக்க நாம் தயாராக என்றும் இருக்க வேண்டும் என்று நீங்களே அடிக்கடி சொல்வீர்களே!

எப்படி எழுதுவது என்றே எனக்குப் புரியவில்லை. என்னை......அக்கினி சாட்சியாகத் தொட்டுத் தாலி கட்டிய மனைவியாக......அல்லும் பகலும் அவரே சதம் என்றிருந்த என்னை அவர் சந்தேகிக்கிறார். யாரோ அவர் உள்ளத்திலே விஷ வித்தை ஊன்றி விட்டார்கள்; அது நன்றாக வளர்ந்து கப்பும் கிளையுமாக உருவெடுத்து விட்டது. அந்த



நியூஸிலந்து பிரதமர் வால்டர் நாஷ் இந்தியாவுக்குச் சமீபத்தில் விஜயம் செய்தார். புது தில்லி ராஷ்டிரபதி பவனத்தில் அவருக்கு நடந்த வரவேற்பு உபசாரத்தில் குமாரி சுதா துரைசாமியின் பரதநாட்டியம் நடைபெற்றது. இந்தியப் பிரதமர் நேருஜி இந்த வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார். பிரதமர் நேருஜியையும் நடனமாடிய குமாரி சுதா துரைசாமியையும் படத்தில் காணலாம்.

விஷ விருக்ஷத்தைப் பிளக்க என் உறுதி மொழி என்ற கோடரியால் இயலவில்லை.

என்னை அவர் செய்த எத்தனையோ விதக் கொடுமைகளைக் கூடப் பொறுத்துக் கொண்டேன். உள்ளத்தில் உரமுள்ள வரை உடலுக்கு ஏற்படும் எந்தவிதத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளலாம். உள்ளமே உளுத்து விடும்படியான நிலை ஏற்பட்டால்......

ஆம்; அவர் சொன்ன அந்த ஒரே சொல் என் உள்ளப் பேழையை உருவில்லாமல் உடைத்து விட்டது.

நான் பெண்ணுயப் பிறந்ததின் பேற்றைச் சுமந்து நிற்கும் பெருமை அவருடையதல்ல என்று அவர் கூறியபோது நான் துடிதுடித்துப் போனேன். கொண்ட கணவரின் வாயாலேயே இத்தகைய அபாண்டத்தைக் கேட்ட பின்பும் நான் ஏன் வாழ வேண்டும்?

என்னுடைய ஒரே முடிவைத் தேடிக் கொண்டு அதன் மூலம் என் உடலும் உள்ளமும் தூய்மையானவை என்பதை அவருக்கு நிரூபிக்கப் போகிறேன். சீதாதேவி அக்கினிப் பிரவேசம் செய்து தானே, தன் கற்பை நிலைநாட்டினுள். அந்த மரபில் உதித்தவள் அல்லவோ நானும்!

மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு அம்மாவுக்கு ஆறுதல் கூறுங்கள்.

மறு ஜன்மம் எடுத்தால், தங்களுக்கே மகளாகப் பிறந்து 'இவரு'க்கே மனைவியாக அமைந்து......

ஹூம்... பொல்லாத மனத்தின் எண்ணங்களுக்கு முடிவேது?

நான் வருகிறேன்.

என்னுடைய இந்த முடிவுக்கு இவர் காரணமல்ல. இதையே பல முறை உங்களுக்கு வற்புறுத்திச் சொல்கிறேன். என் விதிப்பயன் இது. வீணாக அவரை நோகாதீர்கள்.

அன்பு மகள், சாவித்திரி.

பின் குறிப்பு: படித்தபின், உடனே இதைத் தீயிலிட்டுப் பொசுக்கி விடவும். மகளின் கடைசி விருப்பமான இதைக் கட்டாயம் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.''

'ஐயோ, சாவித்திரி' என்று அலறிவிட்டார்.

''என்ன ஐயா?'' பரபரப்புடன் பத்தர் அவரிடம் வினவிய போது தான் நிலைமையை உணர்ந்தார் அவர்.

''ஒன்றுமில்லை, பத்தரே! கிணற்றிலே நீர் இறைக்கும்போது சாவித்திரி தவறி விழுந்து விட்டாளாம். உடனே எடுத்து விட்டார்களாம்... ஆனாலும் உயிருக்குப் பயம்தானும்... உடனே போக வேண்டும்!'' என்று சமாளித்தவாறே, மனைவியிடம் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பத்தரை அனுப்பி வைத்தார்.

அருகிலுள்ள கிராமம் தான் அவளின் புக்ககம். ஆனாலும் அவர்கள் பஸ் பிடித்துப் போவதற்குள் காரியம் மிஞ்சிவிட்டிருந்தது.

நீலம் பாய்ந்த சாவித்திரியின் உடலை, ரேழியில் கிடத்தி யிருந்தார்கள். தாய்மையின் பூரிப்பிலே மின்னிக் கொண்டிருந்த அந்தப் பொன் உடலைப் பார்த்த பெற்ற வயிறு பற்றி எரிந்தது.

கையிலே கடிதத்துடனும், கண்களிலே கண்ணீருடனும் சிலையாய் அமர்ந்திருந்த கோபாலன் அவரைக் கண்டதும், குலுங்கக் குலுங்க அழுதான்.

அத்தனையும் வேஷம்! மாய்மாலக்காரன்! கண்ணீர்கூட வருகிறதா அவனுக்கு!

சாவித்திரி! பெண் தெய்வம் அவள்! தாளாத வயிற்று நோவு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகப் போலீசுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டுத் தன் வாழ்வை முடித்துக் கொண்டு விட்டாள்.

கோபாலனை ஏறெடுத்தும் பாராமல், மகளின் இறுதிச் சடங்கு முடியும்வரையில் அங்கிருந்து விட்டு, தம் ஊர் வந்தவர்தான். நேற்றுவரை அவனைப் பற்றி அவர் சிந்திக்கக் கூட இல்லை!

இன்று வந்துள்ள இந்தக் கடிதம் அவர் மனத்தின் அடித்தளத்திலே புதைந்து கிடந்த எதையெல்லாமோ கிளப்பி விட்டதே!

ஆயாசத்துடன் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டார் தர்மராஜன், கண்களை மூடியபடி.

'' அப்பா !''

அந்தக் குரல்— அன்பு ததும்ப அவரை அழைக்கும் குரல் — சாவித்திரியினுடையது தான் அல்லவா ?

குழந்தை புது மெருகோடு, வெற்றிலைச் சிவப்பேறிய இதழ்களில் தவழும் புன்முறுவ


அழகு திலகங்களாக விளங்க
வசீகரிக்கும் இளமைப் பொலிவுடன் காண் போரை பிரமிக்கவையுங்கள். சருமத்தை நேர்த்தியாக சுத்தம் செய்வதும், பவுடர் தடவிக் கொள்ள சிறந்த ஆதாரமாக உதவும் " 'ஹாஸலீன்' ஸ்னோ " உபயோகித்து எப்பொழுதும் குளுமையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருங்கள். மற்றும் அது திருட இயலாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
" 'ஹாஸலீன்' ஸ்னோ"
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

ஒரு பணக்காரர் வீட்டுக் குழந்தையை ஏழையைப் பற்றி வியாசம் எழுதச் சொன்னார் பள்ளி ஆசிரியர்.

குழந்தை எழுதியது:



"ஒரே ஒரு ஊரில் ஒரு ஏழைக் குடும்பம் இருந்தது. அந்தக் குடும்பத்தின் தாய் ஏழை. தகப்பனார் ஏழை. குழந்தைகள் எல்லோரும் ஏழை. வீட்டு வேலைக்காரர்கள் ஏழை. கார் டிரைவர் ஏழை. தோட்டக்காரர்களும் ஏழை......"

லோடு, மிகுந்த அன்புடனும் ஆசையுடனும் அழைத்தாள் அவள்.

"என்னம்மா?"

"இன்று வந்த கடிதத்துக்கு என்ன பதில் எழுதப் போகிறீர்கள், அப்பா?"

"ஏனம்மா இப்படிக் கேட்கிறாய்? உண்மையைப் பட்டவர்த்தனமாக எழுதிவிட வேண்டியதுதானே?"

சாவித்திரி சற்று யோசித்தாள்.

"வேண்டாம், அப்பா! அவருக்கு மாலை விடப் போகும் பெண் பாக்கியம் செய்தவள். இதையே எழுதி விடுங்கள்!"

அவளுடைய சொற்கள் அவரைத் திகைப் படையச் செய்தன. "என்ன அப்பா விழிக்கிறீர்கள்? மொத்தத்தில் அவர் மிக நல்லவர். தயாள குணம் படைத்த தன்மானமுள்ள மனிதர். சூழ்நிலையும், என் துரதிருஷ்டமும் அவரை மாற்றி விட்டன. என் மறைவு அவர் கண்களைத் திறந்து விட்டது. 'அநியாயமாக உன்னைக் கொன்று விட்டேன் பாவி! இனி எனக்கு விமோசனம் ஏது?' என்று அலறிய வண்ணம், மயானத்தை விட்டு அவர் வர மறுத்தபோது, பலரும்மாகச் சேர்ந்து அவரைப் பலவந்தமாக வீட்டுக்கு அழைத்து வந்ததை அறியவில்லையா நீங்கள்!

"'சாவித்திரி! என் அருமை மாணிக்கமே! அகாரணமாக உன்னைச் சந்தேகித்து வதைத்து விட்டேன். இன்று உணர்கிறேன், உன் தாய்மையை. உடனே என்னிடம் ஓடி வரமாட்டாயா?' என்று ஒரு மாதம் வரை பித்துப் பிடித்தவர் போல் அவர் புலம்பிக்கொண்டிருந்ததைக் கேட்ட பிறகுமா இன்னும் உங்கள் எண்ணம் மாறவில்லை?

"சில காலமாகத்தான் உடலும் உள்ளமும் தேறி வருகிறார் அவர். அவருக்கு இன்பமளிப்பதே என் ஆத்ம சாந்தி.

"நான் சொன்னபடியே அவருக்குப் பதில் எழுதிவிடுங்கள். ஆகட்டும் என்று சொல்லுங்கள், அப்பா!"

"ஆகட்டும், அம்மா!"

"சத்தியமாகச் செய்வீர்களா, அப்பா?"

"இதோ, வேண்டுமானால் கையடித்துத் தரட்டுமா, சாவித்திரி!"

அடித்த கை 'படார்' என்று சுவிச்சின் கையில் மோத, அந்த உணர்வால் உந்தப் பட்டுச் 'சட்'டென்று எழுந்தார் தர்மராஜன்.

அப்படியானால் இதுவரையில் நிகழ்ந்ததெல்லாம் வீண் மனப் பிரமையா? அல்லது உண்மையிலேயே சாவித்திரியின் ஆவிதான் அவரிடம் வந்து பேசியதா? ஆகா! பாரத நாட்டுப் பண்பு மாறாத பெண்ணைப்பெற்ற நான் அல்லவோ பாக்கியசாலி!

'சாவித்திரி! நீதான் போய் விட்டாய். உன் உள்ளத்திலே இன்று எழுந்த எண்ணம் இருக்கிறதே, அது ஒவ்வொரு பெண்ணின் இதயத்திலும் இருக்கிறது அம்மா! தெய்வமாகிப் பின்பும், தன் கொழுநனைத் தெய்வமாகத் தொழும் பெண்கள் நிறைந்த நம் பண்பான நாட்டிலே, கோபாலனைப் போன்றதொரு கணவனை அடையக் கொடுத்து வைத்திருக்கத்தான் வேண்டும்!

உன் விருப்பப்படியே, அந்த ஒரே சொல்லை "உமது மகள் கோபாலனுக்கு மாலையிடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றே எழுதி விடுகிறேன்.

மறுகணம், பேனாவையும் காகிதத்தையும் எடுத்துக் கொண்டு கடிதத்துக்குப் பதில் எழுத உட்கார்ந்தார் நிம்மதியுடன்.

* * *

இரண்டு வாரங்கள் கழித்து வந்த கடிதத்தைக் கண்ட தர்மராஜன் திகைத்துப் போய்ச் சிலையாய் அமர்ந்து விட்டார்.

"ஸ்ரீ தர்மராஜனுக்கு,

தங்களுடைய இரத்தினச் சுருக்கமான கடிதம் கண்டு பேருவகை கொண்டோம். உடனே கோபாலனைச் சந்திக்க அவருடைய ஊர் சென்றேன்.

அவரைக் கண்டு என் புதல்வியின் விருப்பத்தை வெளியிட்டேன்.

சாவித்திரியை மாலையிட்ட கரங்கள் இனி எவளுக்கும் மாலையிடாது என்று அவர் கண்டிப்பாகக்கூறிவிட்டு, அங்கிருந்துவெளியே சென்று விட்டார்.

என் மகள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் போலும்!

ராமநாதன்


விவரிக்க இயலாததொரு உணர்ச்சி வசத்தில், தர்மராஜனின் உடலும் உள்ளமும் படபடத்தன.

'சாவித்திரி! நீ விரும்பியபடி இன்பமயமான வாழ்வு உன் கணவனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே, அம்மா! அவன் இருந்தியும் நமக்குப் பயனில்லையே...... !'


புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.


ஸீலிட்ட டின் சுத்தத்திற்கு உத்தரவாதம்
நியாய விலை அதை
மேலானதாகச் செய்கிறது.
துஷார்
வனஸ்பதி
விடமின்கள் சேர்க்கப்பட்டது
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ்
லிட்., கர்நூல்
TI-4/57

பிரயாணிகளின் தோழன்



மலிவுப் பதிப்பு, மலிவுப் பதிப்பு என்று போட்டி போட்டுக் கொண்டு வாங்கிப் படிக்கிறீர்களே (தவறு; வாங்குகிறீர்களே என்பதோடு நிறுத்தி இருக்க வேண்டும். எத்தனை பேர்கள் முழுவதும் படிக்கிறார்களோ, புஸ்தகத்துக்குத்தான் வெளிச்சம்!) உங்கள் கண்களிலே ஆண்டு ஆண்டுகளாய்த் தென்படும் நூல் ஒன்றைப் 'படுமலிவுப் பதிப்பு' என்று அங்கீகரித்து அழைக்கத் தோன்றவில்லையே!

நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா? இட நெருக்கடியையும், மூட்டைக் கடியையும், எதிர் பாராத விபத்துக்களையும் கண்டு அஞ்சாது நாம் மேற்கொள்ளும் ரயில் பிரயாணத்தின் இன்றியமையாத தேவையான ரயில்வே கால அட்டவணையைத்தான் சொல்லுகிறேன்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே, இருப்புப் பாதை முளைத்த நாள் முதலாய், ரயில்வேக்காரர்கள் பிரகர மலிவுப் பாதை வகுத்து விட்டார்கள் என்பதை மணியடித்துச் சொல்லுவேன். வெளியீட்டு விழா, பாராட்டுப் பிரசங்கம் என்ற சம்பிரதாயச் சடங்கு ஒன்றுமின்றி அடக்க விலையில் வருடத்துக்கு இருமுறை அட்டவணை நூல் வெளியிட்டு வருகின்ற அடக்கமான தொண்டை இன்ஜின் போலக் கூவிப் போற்றுவேன்; இந்த மகத்தான பணிக்காக ரயில்வேக்கு ஒரு பொன் பத்திரமோ, தாம்பர ஆடையோ (மன்னிக்கவும், உலோகங்கள் இடம் மாறி விட்டன!) வழங்கலாம்.

கனமாக நூற்றைம்பது பக்கங்கள்; அழகான இருவர்ண மேலட்டை; அகத்தே பிரயாணிகளுக்குத் தேவையான எத்தனையோ குறிப்புகள்; விதிகள். பட்டி தொட்டிகளெல்லாம் ஓடுகின்ற, ஊருகின்ற எத்தனையோ ரயில்களின் ஓட்டத்தை வருணிக்கும் கால அட்டவணை; பிற பிராந்திய வண்டிகளின் கால அட்டவணைச் சுருக்கம்; பூரான் நெளிவது போன்று ரயில் பாதை மார்க்கப்படம் ஒன்று; எங்கு சென்றாலும் தங்குவதற்கு வசதியான ஹோட்டல்களின் விளம்பரத் தொகுதிகள். (இந்த விளம்பரப் பக்கங்கள் நமது விருந்தாளிகளின் கண்களில் மட்டும் ஏனோ படுவதில்லை!) இவ்வளவும் அடங்கிய களஞ்சியம் இருபத்தி ஐந்து நயாபைசா செலவில் கிட்டி விடும். ஆனால் அதன் உபயோகத்தையும், மதிப்பையும் ரூபாய்க் கணக்கில் கூட அளவிட முடியாது.

காஷ்மீரோ, குற்றாலமோ, அஜந்தாவோ, அணைத்திட்டமோ — எங்கு செல்வதற்காக ரயில் பிரயாணம் தொடங்கினாலும் கைச் செலவுக்குக் கடனும், மூட்டை கட்ட இரவல் ஹோல்டாலும், ஏற்பாடு செய்வதை விட, முதன் முதலில் தேவையானது கால அட்டவணைப் புஸ்தகம்தான். குழப்பத்தில் ஆரம்பித்துக் திருமணத்தில் முடியும் துப்பறியும் நாவலோ, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி மத்திய சர்க்காரின் பிரசார இலாகாவின் வெளியீடோ—எதுவுமே பிரயாணம் ஆரம்பமான பிறகு பொழுது போக்குக்கு உகந்தவை. ஆனால் கால அட்டவணையோ பிரயாணம் துவங்குவதற்கு நாலு நாட்கள் முன்னதாகவே நமது 'விருந்தோம்பிக்கு' நமது வரவைக் குறித்து எச்சரிக்கைக் கடிதம் போடும் கட்டத்திலேயே தேவைப்படுகிறது. நாளையும் கோளையும் பார்த்துத் திருமணத்துக்கு முகூர்த்தம் நிச்சயம் செய்வதுபோல், அட்டவணையைக் குறுக்கும்நெடுக்கும் ஆய்ந்து ரயில்களைக் கணக்கிட்டு, முடிச்சிட்டுப் பிரயாணத் திட்டத்தை அமைக்க வேண்டிய அவசியத்தைக் கருதும்போது, 'விவாகத்தை நடத்திப்பார்;பிரயாணத்தைச் செய்து பார்' என்பது எவ்வளவு பொருத்தமான பழமொழி என்பது புலனாகும். அட்டவணையில் இட்டப்பட்ட பிரகாரம் வண்டிகள் வருவதோ போவதோ இல்லை என்பது அநுபவ உண்மையானாலும் அட்டவணையைப் பிரயாண வேதமாகக் கொள்ளாமல் இருக்க முடியாது! ஆனால் வண்டிகள் கால அட்டவணையையும் காலத்தையும் கடந்து ஓடினால் அதற்கு நிர்வாகம் ஜவாப்தாரி அல்ல; ஆமாம்; அட்டவணையை எடுத்தவுடனேயே முதல் பக்கத்தில் இப்படிக் கூறுவதைக் கண்டு ரயில்வேக்காரர்கள் பொறுப்பற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாது!

கால அட்டவணைக் கருவூலத்திலே எத்தனையோ விலைமதிக்க முடியாத விஷயங்கள் அடங்கிக் கிடக்கின்றன. (நான் குறிப்பிடுவது நகை விளம்பரமல்ல!) டிக்கட் விற்கப்படும் ஜன்னல் கதவுகள் எப்போது திறந்து கொள்ளும், ரிசர்வேஷனுக்காக எவ்வளவு மணி முன்னதாக க்யூவில் நிற்க வேண்டும், எந்த ஸ்டேஷன்களில் அவசரச் சாப்பாடும், சிற்றுண்டியும் கிடைக்கும், சாமான்கள் 'புக்' செய்யும் விதம், அவுட்—ஏஜன்ஸி பஸ் கால அட்டவணை இன்னும் எத்தனையோ அரிய பெரிய உண்மைகள் பக்கங்களிலே சிதறிக் கிடக்கின்றன. உடம்பிலே உயிர் கலந்து பிரிவதுபோல் வண்டித் தொடரிலே 'உண்டிரதம்'(Dining Car என்பதற்கு அடியேனது மொழி பெயர்ப்பு; ஆட்சிச் சொற்கள் அகராதி அடிப்படையல்ல)



எங்கு சேர்ந்து எங்கு முடிவடையும் என்ற சுவையான தகவல்; மற்றும் பல அறிவிப்புகள், விதிகள், நிபந்தனைகள், சட்டங்கள்! இவற்றை மணிப் பிரவாள மொழிபெயர்ப்புத் தமிழில் படிக்கும்போது ரயில்வேக்காரர்கள் தங்களை அறியாமல் புரியும் ஹாஸ்யத் தொண்டை யாரே பாராட்டாமல் இருக்க முடியும்? ஆனால் ஒன்று. தமிழில் ஆட்சி முறை என்பதெல்லாம் சமீபத்திய முயற்சி. எத்தனையோ வருடங்களாக ரயில் பெட்டிகளிலும், பலகைகளிலும் தமிழ் 'ஆட்சி' செய்து வருவது கண்கூடு. அபாய அறிவிப்புச் சங்கிலி அருகே உள்ள எச்சரிக்கைப் பலகையை எந்தத் தமிழனாவது மறந்து விட முடியுமா?

கட்டுப்பாடு அற்ற குடும்பத்தில் குழந்தைகள் பெருகிக் கிடப்பது போலும், காலேஜ் சாத்திய மறுநாள் வண்டிகளில் ஏற்படும் ஜனநெரிசல் போலும், இத்தனை விஷயங்கள் அட்டவணையில் அடங்கித் திணறிய போதிலும், அதனைப் புரட்டித் தெரிந்து கொள்வது என்பது சுலபமான காரியமல்ல; அகராதியைப் பிரித்துச் சொற்களின் உச்சரிப்பைப் புரிந்து கொள்வதற்குத் தேவைப்படும் தனி ஞானம் இதற்கும் வேண்டும். அட்டவணை திருப்புவதும் சித்திரம் போல் கைப்பழக்கம்தான். கால அட்டவணையின் ஏடுகளிலே கண் பதித்து வண்டியின் போக்குவரத்தை ஊர்ஜிதம் செய்வது என்பது எளிதான செயலல்ல. மூல காவியங்களுக்கு விளக்கமும் உரையும் வெளியிடுவது போல, இந்த 'கைடு'களைச் சுலபமாக்கும் வழிகாட்டியோ, திறவுகோலோ பிரசுரமானால் தேவலாம் என்று தோன்றுகிறது. சர்வீஸ் கமிஷன்முன் ஆஜராகும் வருங்கால நிர்வாகிகளிடம் என்னென்னவோ கேள்விகள் கேட்டு அவர்கள் வேடிக்கையாகப் பதில் சொல்வதாக வருடா வருடம் பத்திரிகைகளில் நகைச்சுவை நறுக்குச் செய்திகளை, அலுக்காமல் படிக்கிறோம். சிப்பியிலே முத்துப் போல, தரம் மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்கக் கமிஷன், அட்டவணையின் உதவியை நாடலாம். பொது அறிவு நூல்களைக் கரைத்துக் குடித்துவிட்டு வயிறு கலங்க, கால் நடுங்க வந்து நிற்கும் பேர்வழியின் முன் ரயில்வே அட்டவணையை விட்டெறிந்து, திருநெல்வேலியிலிருந்து மானாமதுரைக்குச் செல்லும் இரு வண்டிகளின் நேரத்தை ஜங்ஷன் வாரியாகக் குறிப்பிடவும் என்ற கேள்வியை மட்டும் கேட்டு வைத்தால்! பாதையைவிட்டு இறங்கி, மண்ணில் புதைந்து விட்ட இன்ஜின்போல, ஸ்தம்பித்து நின்று விடுவர். பக்கங்களைப் புரட்டி எண்களின் இந்திர ஜாலத்தைக் கண்டு திகைத்து நிற்கையில், காலமும் கடிகார எண்களை விழுங்க, பேட்டி நேரம் ஓடிவிடும்!



அட்டவணையை உபயோகிக்கச் சில அடிப்படை ஞானம் தேவை. வாய்ப்பாடு இன்றிக் கணக்குப் போட முடியாது. நிலக்கரியும் நீருமின்றி ரயில்வண்டி ஓடாது; அதுபோல் கணித ஞானம் இல்லாமல் அட்டவணைக்குள் அணுவளவும் புக இயலாது. போலீஸ் இலாகாவுக்கும் டெலிபோன் கருவிக்கும் எண்ணே பிரதானம். போதும் போதாததற்கு இந்த ரயில்வே ஆசாமிகளும் எண்ணிக்கையைப் போட்டுக் குழப்புகின்றனர். ஒரு ஸ்டேஷன் மாஸ்டரை வினயத்துடன் அணுகி, மேல் பஞ்சமத்தில் அவர் நடத்தும் டெலிபோன் சம்பாஷணையின் ரீங்காரம் ஓய்ந்த பிறகு, 'ஏன் ஸார்? ஜனதா எத்தனை மணி நேரம் லேட்டு' என்று கேளுங்கள். '605தானே? 175 நிமிஷம் லேட்டு' என்று தயங்காமல் தாமத அறிக்கை விடுவார்.

அடுத்தபடியாக ரயில் கடிகைக் கணக்குப் போடத் தெரியவேண்டும். சாதாரண கடிகாரத்துக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்கிறீர்களா? இந்திய ஸ்டாண்டர்டு மணி தான் அடிப்படை என்றாலும் ரயில் கடிகாரம் 'இருபத்திநாலு எண்கீழ் கணக்கு' வகையைச் சார்ந்தது. 14—21 மணி வண்டி என்றால் தலையைச் சொறிய வேண்டாம். அதிலிருந்து 12ஐக் கழித்துப் பிற்பகல் 2—21 மணியைக் குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது அம்சம் சுருக்கிய வார்த்தைகள். இரண்டடிக் குறளில் எத்தனையோ கருத்துக்கள் பொதிந்து கிடப்பதுபோல இந்தச் சங்கேத எழுத்துக்களில் எண்ணிலடங்காச் செய்திகள் சுருங்கிக் கிடக்கின்றன. சிலஸ்டேஷன்களுக்கு எதிரே சப்த ஸ்வரங்களும் பிரசன்னமாயிருப்பதைக் கண்டு அது சங்கீத ஸ்தலமோ என்று ஐயுற வேண்டாம். ரிஷபம் 'ரிடயரிங் ரூம்' வசதியைக் குறிக்கும். பொ. சி. என்பது ஒரு தலைவரது சுருக்கப் பெயரோ என்ற திகைப்பு ஏற்படுகிறது! ஆனால்பொதுச் சிற்றுண்டிசாலையின் குறுகிய அவதாரமே அது. கா. உ. என்றால், புதிதாகக் கிளம்பிய கட்சியின் பெயரோ என்றுசிந்தை கலங்க வேண்டாம். காய்கறி உணவுச்சாலையின்திரிபு. அதாவது சைவ உணவு என்பதைத்தான் ரயில் பாஷையில் அப்படிக் கூறுகிறார்கள்!

இவ்வாறு கணிதம், சங்கேதம், கடிகை என்ற மூச்சிலங்களையும் தெரிந்து கொண்டு விட்டீர்களா? அப்படியானால் நீங்கள் 'அட்டவணை ஞானி'யாகி விட்டீர்கள் என்று அர்த்தம். சரி; இப்போது திருவாரூரில் நடைபெறும் மும்மூர்த்திகள் திருவிழாவுக்குப் போகத் தீர்மானிக்கிறீர்கள் என்று கொள்வோம். திருச்சி டவுனிலிருந்து திருவாரூர் செல்லும் வண்டி மார்க்கங்களை ஆராய்வோமா? கால அட்டவணைப் புஸ்தகத்தையும், பேப்பரையும் பென்ஸிலையும் கையில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஏப்ரல் 1லிருந்து புதிய 'டைம்டேபிளை'யா! பழைய அட்டவணையைப் புரட்டுகிறீர்களே!

12-37க்கும் 14-15க்கும் இரு வண்டிகள் இருக்கின்றன. அவை திருச்சி சந்திப்பை 12-55க்கும் 14-39க்கும் அடைகின்றன. திருச்சி எதிரே பெரிய எழுத்திலே இரட்டை வரிசை வண்டி நேரம் காணப்படுகிறதே

என்று கலங்க வேண்டாம். 'சேர்' என்றால் நிறையல்ல. சேரும் நேரம். 'புற' என்றால் புறம்போக்கல்ல. புறப்படும் நேரம். இதைப் புரிந்து கொள்ள போதிசத்தவ மாதிரிலே தாட வேண்டாம். சுருக்க வார்த்தைகள் பட்டியலைப் பார்த்தால் போதும்.

இப்போது ஜங்ஷனிலிருந்து தஞ்சைபோகும் வண்டி நேரம் கண்டு பிடிப்பது நமது லக்ஷியம். திருச்சி சந்திப்புக்குக் கீழ கோடிட்டுப் பல மார்க்கங்களையும் அதன் டேபிள் எண்ணையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் அல்லவா? தஞ்சை வழிக்கு 16A என்ற டேபிளைத் தஞ்சமடைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள் கிறோம். கைடை ஒருமுறை தலைகீழாகத் திருப்பிப் பொருளடக்கம் பக்கத்தைத் தேடிக் கண்டு பிடித்து முதலில் 16A இருக்கும் ஏட்டைக் குறித்துக் கொள்வதற்குள் பல நிமி ஷங்கள் ஓடி விடுகின்றன.

82-ம் பக்கத்தில் டேபிள் 16A காட்சி அளிக்கிறதா? தஞ்சைக்குத் தொடர் வண்டி பார்ப்போமா? அட எழவே! டவுனிலிருந்து ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்த வண்டி நேரம் மறந்து விட்டதே! சரி, பின்னட்டைத் திருப்பு. டேபிள் 19-ல் ஒரு அவசர ஓட்டம்! ஆம், 12-55க்கும் 14-39க்கும் வருகிறோம்.

'என்னய்யா டிக்கெட் இல்லாத பிரயாணி போல் விழிக்கிறீர்கள்? திருவாரூர் எந்த மார்க்கம் என்பது உமது பேரறிவுக்கு எட்ட வில்லையா? அட்டவணை இறுதியில் காணப் படும் 'மாப்'பைப் பிரியும். அப்படியும் புரிய வில்லையா? பக்கத்திலுள்ள தஞ்சை ஜில்லா பேர்வழியைக் கேளுமய்யா.

'தஞ்சை – நாகூர் மார்க்கம்தானே.'

'ஆமாம்! அதுவேதான். டேபிள் 29ஐத் திருப்பும். அதற்கா இவ்வளவு நாழி? பக்கம் 112 உமது கண்ணில் படவில்லையா?'

'ஐயையோ இது என்ன! கோடம்பாக்கம் ஸ்டேஷனில் ப்ளாட்பாரத் திவுக்கு இருபுற மும் வண்டி ஓடுவதுபோல், ஸ்டேஷன் பெயர் வரிசைக்கு இருபுறமும் வண்டி நேர விவரம் காண்பிக்கப்பட்டிருக்கிறதே. எதைப் படிக்க? இடது புறம் பார்த்தால் காலை 8-மணிக்குத் தஞ்சையை விட்டுப் புறப்படும் வண்டி திருவா ரூருக்கு காலை 6 மணிக்குப் போய்ச் சேருவது அதிசயமாக இருக்கிறதே.'

'ஓய், உமது தலையில் ஏதாவது இருக் கிறதா? தலைப்பைப் படியும். மேல்நோக்கி வாசிக்க என்று போட்டிருக்கும்போது கீழ் நோக்கிப் படிக்கிறீரே! இந்த இடதுசாரி டேபிள் திருவாரூரிலிருந்து தஞ்சை வருகிறவர் களுக்கு. தஞ்சையிலிருந்து புறப்படுகிறவர்கள் வலது புறம் வந்து கீழ்நோக்கிப் படிக்கவும்.'

'இது என்னய்யா புதிர்! 'இப்படிப் பார்த்தால் ராவுத்தர் குதிரை' என்று பழ மொழி சொல்வாங்களே. அதுபோலல்லவா இருக்கிறது:' என்கிறீர்களா? இதுதான் அட்டவணை ஐயா, அட்டவணை! இதற்கெல் லாம் தனி அனுபவம் வேணும்.

தஞ்சாவூர் ஸ்டேஷனிலேயே நின்று விட் டோமே! திருவாரூர் வண்டியைப் பிடிக்க வேண்டு மல்லவா? அது சரி, தஞ்சையை எத்தனை மணிக்கு அடைந்தோம்? மறந்துவிட் டதா! அட மோசமான மனுஷா, உம்மைக் கொண்டு போய் எங்காவது சரித்திர உபாத்தி யாயராகப் போட வேண்டும். 14.50க்கும் 16-91க்கும் வந்தோமா? 15-22க்கும் 17-00க்கும் இணைப்பு வண்டிகள் உள்ளன. முந்திரிப் பருப்பு, கதம்ப வியாபாரிகளுக்குத் தப்பி இந்த வண்டியில் ஏறினால் நீடாமங்கலத் தில் தங்கிய நேரம் போக 17-30க்கும் 19-16க்கும் திருவாரூரின் புதிப்பிக்கப்பட்ட ஸ்டேஷனில் காலை வைக்கிறோம். 71 மைல் பிரயாணத்துக்கு 6-30மணிநேர அவஸ்தை- அதுவும் உடனுக்குடன் தாமதமின்றித் தொடர் வண்டி கிடைத்தால்! இரண்டு இடத்திலே ஏறி இறங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள்!!

'ஸார், திருவாரூருக்கு இருட்டுகிற வேளை யில் அல்லவா போய்ச் சேருகிறது. சற்று முன்பாகப் போகக்கூடிய வண்டி ஏதாவது பாருங்கள்.'

'அட பாவி மனிதா! மீண்டும் மூன்று டேபிளைப் புரட்டி மனக்கணக்கு போட்டு... அப்பப்பா! என்னால் முடியாது ஐயா, முடியாது. பக்கத்திலுள்ள ஸ்டேஷன் மாஸ் டரை அணுகி விசாரித்துக் கொள்ளும்.'


அட்டவணை இருந்தால் மட்டும் பிரயாணம் சுலபமாகி விடும் என்பதல்ல. வாசிக்கத் தெரியாதவனிடம் வீணை இருந்து என்ன பயன்? பிரயாணிகளின் தோழனாகிய அட்ட வணை ஒரு செய்திப் பொக்கிஷம். ஆனால் அதைப் படித்து அறிந்து கொள்வது என்பது உண்மையாகவே ஒரு தனிக் கலை.

"உங்கள் பற்களை பாதுகாருங்கள்!"

விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்



Wisdom REGD.



நீடித்து
உழைக்கும்
டூத் ப்ரஷ்

SOA

சாந்தி எங்கே?



ஸ்ரீமதி ஏ.வி.ஆர். சுந்தரம்

சித்திரை மாதம் வெய்யில் மிகவும் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. திருச்சானூர் சத்திரத்தின் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள் பார்வதம்மாள். அவள் வயதில் சிறியவளாகக் காணப்பட்டாலும் சோகத்தின் ரேகைகள் அவள் நெற்றியில் படர்ந்திருந்தபடியாலும், ஆங்காங்கே தலைமயிரிலும் நரை கண்டிருந்தபடியாலும் உண்மையான வயதை விடச் சற்று அதிகமாகவே காண்பித்தது. சத்திரத்தின் எதிரில் பெரியகுளம் — காற்று வரும் பொழுதெல்லாம் ஜலத்தின் மேல் பட்டு வந்து 'ஜில்' லென்று அவள் முகத்தில் குளுமையை அளித்தது. சிந்தனை அவளை இழுத்துச் சென்றது.

என்ன ஆச்சரியம்! பொறுக்க முடியாத வெய்யிலிலும் இந்த நீர்மேல் காற்றுப் பட்டு நம் மேல் பட்டால் அந்த நிமிஷம் ஒரு குளிர்ச்சியான உணர்ச்சி! ஆம்! நம் வாழ்க்கையும் அப்படித் தானே இருக்கிறது. தாங்க முடியாத சோகத்தின் நடுவில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடந்தால் சோகத்தைத் தாற்காலிகமாகத் தணிக்கின்றன அல்லவா? என்னே இயற்கையின் அருமையான போதனைகள்!

ராஜ்யத்தைப் பற்றிக் கொண்டு தம்பியானவன் அண்ணனைக் காட்டுக்கு விரட்டினான். அந்தக் காட்டில் நின்ற மரங்களிலும், ஓடிய ஓடங்களிலும் பாடங்களைக் கற்றுக் கொண்டான் அந்தமகாராஜாவான அண்ணன்! 'துக்கங்கள் இனிக்கின்றன' என்று கண்டானும்! அந்த ஆங்கிலக் கவி இப்படி எழுதிய கற்பனைதான் எவ்வளவு உண்மை!

பார்வதம்மாள் சிறிய வயதிலேயேநாகராஜனுக்கு வாழ்க்கைப் பட்டாள். அவள் வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ கல்லும், முள்ளும் இருந்தன. என்ன இருந்து என்ன? குழந்தைகளையும் பெற்றாள். அவர்களும் பெரியவர்களாகித் தத்தம் இல்லங்களுக்குப் போய் வாழ்க்கையை நடத்தி வந்திருந்தார்கள். பார்வதம் மட்டும் நாகராஜனைப் பிரியவே யில்லை. பெண்ணோ, பிள்ளையோ அழைத்தாலும் கூட அவள் போகவே மாட்டாள். நாகராஜனைத் தன்னைத் தவிர யாருக்குமே கவனிக்கத் தெரியாது என்று நினைத்துக் கொள்வதில் அவளுக்கு ஒரு பெருமை! நாகராஜனுக்கு அவள் நினைத்துக் கொண்டிருப்பது முற்றிலும்பிரமை என்று நன்றாகத்தெரியும். ஆயினும் அவள் நினைத்துக் கொண்டு சந்தோஷப்படுவதைக் கெடுப்பதற்கு இஷ்டமில்லாமல் அப்படியே நடந்து கொள்வான். 'இப்படியும் ஒரு விசித்திரப் பிறவியுண்டா? குழந்தைகள், பெண், பிள்ளை பேரக் குழந்தைகள் இப்படியெல்லாம் ஏற்பட்டால் பாசம் அந்தப் பக்கம் அல்லவோ இருக்கும்? இவளுக்கு அவர்கள் மேல் ஆசைகள் இருந்தும், பற்று இல்லாமல் விவேகமாய் நடந்து கொள்கிறாள். கடமைகளைச் சரிவரச் செய்கிறாள். ஆனால் நம்மிடமோ, அளவற்ற பாசத்தை வைத்திருக்கிறாளே! ஆண்டவனே! நீதான் அவளுக்குத் துணை' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான். இப்படியிருக்கும் சமயம் ஒரு நாள் சற்றும் எதிர்பாராமல் நாகராஜன் அகால

மரணம் அடைந்தான். பார்வதம்மாளின் மனத்துடிப்பை எழுதப் பிரயத்தனப்படுவது சாத்தியமல்லவே.

ஆயிற்று. ஓராண்டு ஓடிப் போயிற்று. பார்வதம் எப்படி அந்த ஓராண்டைப் பொறுத்தாள் என்று கேட்பதைவிட எப்படி அவள் ஜீவித்திருந்தாள் என்று கேட்கலாம்! காலன் மறுபடியும் அங்கே அணுகவே பயந்து கொண்டு ஓடிவிட்டான் போலும்!

ஆண்டவன் சந்நிதியில் சாந்தியடையலாம் என்ற நோக்கத்துடன் அவள் திருமலைக்குச் சென்று சத்திரத்தின் திண்ணையில் படுத்துக் கொண்டு தன் சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டாள். குளிர்ந்த காற்று அடிக்கவே, தன்னையறியாமல் நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டாள்.



* * *

இமாசல பர்வதங்கள் உயர்ந்து நின்றன. அவைகளின் சிகரமெல்லாம் பனிக் கட்டிகள். பக்கத்தில் புனிதமான கங்காதேவி சலனமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தாள். ஆங்காங்கே தபஸ்விகள் கண்களை மூடிக் கொண்டு தபஸில் ஈடுபட்டிருந்தார்கள். கைலை நாதன் பக்கத்தில் பார்வதி தேவியுடன் வீற்றிருந்தான். அப்போது அங்கே நந்தி தேவன் வந்து நமஸ்கரித்து, 'பிரபோ! வெளியே சில ஸ்திரீகள் வந்து காத்திருக்கிறார்கள். தங்களைக் கண்டு உடனே பேச வேண்டுமென்று ஆத்திரத்துடன் முறையிடுகிறார்கள். என்ன உத்தரவு?'' என்றுகேட்டான்.

''நந்திகேசுவரா! என்னை மனமோடு பார்க்க வேண்டும் என்று இச்சைப்பட்ட எவரையும் நான் பார்க்க மறுக்க மாட்டேன். ஸ்திரீகள் என்றால் பச்சாத்தாபம் இன்னும் அதிகம். ஆகையால் அவர்களை உடனே ஒவ்வொருவராய் என்னிடம் அழைத்துக் கொண்டு வா'' என்றார் பார்வதி நாதன்.

நந்திகேசுவரன் வெளியே சென்று ஒரு யௌவன ஸ்திரீயை அழைத்து வந்தான். அழகுத் தெய்வம் எனக் கூறலாம். அத்தனைய அழகு வாய்ந்தவள். கையில் ஒரு பச்சைப் பாலகன். முகத்தில் ராஜ களை. நிச்சயம் அவள் ஒரு ராஜ வம்சத்தைச் சார்ந்தவள் என்பதைப் பறைசாற்றியது அவளது தோற்றம். கொடி போன்ற தேகத்தில் துல்லியமான ஆடையைத் தவிர ஒரு ஆபரணமும் இல்லை. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் அருவியெனக் கொட்டியது.

''யாரம்மா, நீ? உன்னைப் பார்த்தால் புத்தர்பிரான் மனைவியாயிருந்த யசோதரை மாதிரியல்லவோ இருக்கிறது! ஏன் இந்தக் கோலமும் இந்தத் துக்கமும்?''

''சகலமும் அறிந்த ஆண்டவனே! நீரா இந்தக் கேள்வி கேட்பது? உங்களிடம் என்னைப் போல ஸ்திரீகளுக்கு ஏற்படும் துன்பத்துக்கு வழி தெரிந்து கொள்வதற்கே நான் இங்கு வந்தேன். நான் புத்த பிரானின் மனைவி. ஆனால் என்னைக் கைப் பிடித்து மணம் புரிந்து ராஜயோகமாய்க் காப்பாற்றிய போது அவர் புத்த பிரான் அல்ல. இளவரசன் சித்தார்த்தன் என்று சொல்வார்கள். அன்பே உருவாயிருந்தார். ஆனால் திடீரென்று ஒருநாள் சாந்தி தேடுவதற்காக உலகத்தைத் துறந்தார். எப்படி? இரவோடு இரவாக என்னையும் இந்தப் பச்சைக் குழந்தையையும் விட்டுவிட்டுத் தன் வயோதிகத் தகப்பனாரையும் விட்டுச் சொல்லாமல் ஓடினார். ஆனால் இன்று அவர் மகானாகப் போற்றப்படுகிறார். அவதார புருஷராகக் கருதப்படுகிறார். வாஸ்தவம் தான். ஆனால் யாராவது என்னைப் பற்றிச் சற்று யோசித்தார்களா? அன்றைக்கு மறு நாள் காலையில் வழக்கம் போல நான் எழுந்து என் நாயகனின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்கப் பார்த்தபொழுது அங்கு அவரைக் காண வில்லை. வேறு எங்கு தேடியும் அரண்மனையில் இல்லை. குழந்தையோ வீறிட்டு அழுகிறது. என் மனம் மணலில் விழுந்த புழுப்போல் துடித்துத் துடித்து எரிந்தது. எப்படி இந்தப் பிரிவை நான் சகித்தேன்? இது என்ன கொடுமை? பிறகு நான் என்னையே தேற்றிக் கொண்டு அவர் மகானாக எய்தியதைத் தெரிந்து பெருமை கொண்டேன். ஆயினும் முதலில் என் சாந்தியைப் பணயம் வைத்தல்லவோ அவர் சாந்தி தேடினார்? ஏ, பரமேசுவரா! உங்களுக்கு மூன்று கண்கள்

"எங்கே அவசரமாகப் போறீங்க?"
"எனக்கு இன்னைக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கு!"



"ஓகோ! ஜனனப் பதிவு ஆபீசுக்கா?"
"இல்லே! நட்டுவனுக்குத் தெரியப் படுத்தப் போகிறேன்!"

இருக்கின்றனவே! எங்களுக்கு இப் பிரிவுக் கஷ்டம் இல்லாமல் செய்யக் கூடாதா?"

எம்பெருமான் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருக்கும்போது மற்றொரு பெண்மணி வந்தாள். அவளும் மிக்க அழகு வாய்ந்தவளாக இருந்தாள். "பிரபோ! யசோதரை சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த ஆண்களுக்கு இந்த ஆணவம் உண்டு. நீங்கள் என்றைக்கு இந்தச் சகிப்புத்தன்மையைக் கொடுத்து, குழந்தைகளைச் சுமந்து பெற்றுப் பாடுபட்டு வளர்க்கும் வேலையை எங்களுக்கு ஏற்படுத்தினீர்களோ அன்றிலிருந்தே எங்களுக்குச் சோதனைதான்! அந்தப் பொறுமையை அவர்கள் உபயோகித்துக்கொண்டு எங்களை என்ன துன்பத்துக்கு ஆளாக்குகிறார்கள் தெரியுமா?"

"நான்தான் தமயந்தி. நிடத தேசத்து நள மகாராஜாவின் மனைவி. என்னை அவர் மனமாரக் காதலித்ததும், தேவர்களுக்கு முன்பாக நான் அவரை என் மணாளராகத் தேர்ந்தெடுத்த சமாசாரமும் தங்களுக்குத் தெரிந்ததுதான். அவருக்கு ஒரு சமயம் ஏற்பட்ட துன்பத்தைக் கூடவே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் அவருடன் காட்டுக்குச் சென்றேன். ஆனால் அவர் என்ன செய்தார்? நடுநிசியில் அந்தக் காட்டில் என் புடவையைக் கூடப் பாதியைக் கிழித்துக் கொண்டு என்னைத் தனியே விட்டுவிட்டுத்தானே சென்றார்? சற்றுக் கண்ணயர்ந்த சமயம் பார்த்துப் போனாரே. நான் எழுந்திருந்து என்ன பாடு பட்டேன்? என்ன துடிதுடித்தேன்? இப்படிக் கொடுமை செய்யலாமா?"

சந்திரமௌளீச்வரன் தலையை இலேசாக ஆட்டினார். அப்பொழுது அங்கு ஓடி வந்தாள் சகுந்தலை. "உங்களுக்கு இன்னும் ஒரு உதாரணம் நான் இருக்கிறேன். என்னைத் துஷ்யந்த மகாராஜன் காதலித்து, காந்தர்வ மணம் புரிந்ததும், பிறகு என்னைத் துறந்ததும், ராஜ சபை முன்னிலையில் நான் அவமானப் பட்டதும் உலகமறிந்த விஷயம். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? கணவன் என்று நாங்கள் உயிருக்கு மேல் மதிக்கும் பொழுது எங்களை அவர்கள் இப்படித் தவிக்க விட்டுப் பிரியலாமா? நாங்கள் என்ன அபசாரம் இழைத்தோம் சொல்லுங்கள்!" என்று கர்ஜித்தாள்.

அந்தச் சமயத்தில் அங்கே பார்வதம்மாளும் கண்ணும் கண்ணீருமாகத் தோன்றி, "நான் என்ன சொல்வது? இவர்களே இப்படித் துக்கப்படும் பொழுது எனக்கு என்ன விடை? அவர்களுடைய கணவன்மார்கள் பிரிந்தாலும் உயிருடன் இருக்கிறார்கள். பிறகு சேர்ந்தார்கள். எனக்குக் காலனையல்லவா கொண்டு போய்விட்டான்! நான் என்ன பாபம் செய்தேன்?" என்று அலறினாள்.

அவர்கள் எல்லோரையும் பார்த்து ஆண்டவன் அமைதியாக அமரச் சொல்லிப் பின்வருமாறு கூறினார் :—

"மாது சிரோமணிகளே! நீங்கள் கேட்பது மிகவும் நியாயம். ஆனால் ஒன்று. உங்களை விட்டுப் பிரிந்த கணவன்மார்கள் உங்களைத் துன்புறுத்தும் நோக்கத்துடன் செய்யவில்லை. அவனவன் என்ன பாடுபட்டான் என்பது எனக்குத் தெரியும். நீங்களே சிந்தித்துப் பார்த்தால் பிறகு நன்மை ஏற்படுவதற்காகவே முன்பு ஒரு துன்பம் நேரிடும் என்பதை அறிந்து கொள்வீர்கள்.

"பார்வதம்! நீ துக்கிக்காதே. அன்று மன்மதனை என் மூன்றாவது கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினேன். அந்தச் சமயத்தில் ரதி தேவி என்னைச் சரண் புகுந்து நாதனைத் தரும்படி வேண்டினாள். கொடுத்தேன். உலகத்துக்கு அவன் சக்தியும் அவளுக்கு மட்டும் அவன் ரூபமும் கொடுத்தேன். அதே போல உனக்கும் உன் நாயகன் என்றும் உனக்குள் இருப்பதாக அறிந்து கொள். விதிவசத்தால் அவன் உலகத்திலிருந்து போய்விட்டபடியால் அவன் மறைவு மற்றவர்களுக்குத்தான் தோன்றும். ஆனால் என்றும் உனக்குள் இருப்பதாக நினைத்துக் கொண்டிரு."

கோவில் மணி 'ஓம், ஓம்' என்று ஒலித்தது. "அம்மா! நேரம் ஆகி விட்டதே. இப்படித் தூங்கி விட்டீர்களே! கோவிலுக்குப் போய் ஆண்டவன் தரிசனம் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டே கண்ணை மூடிக் கொண்டு விட்டீர்கள்" என்று சந்திரத்து வேலைக்காரி எழுப்பவே, பார்வதம் விழித்துக் கொண்டாள். 'ஹா! என்ன கனவு' என்று நினைத்தபடி போய்ச் சுத்தம் செய்து கொண்டு மலைக்குப்போய்க் கோவிலுக்குச் சென்றாள்.

அங்கே பெருமாள் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தார். வலக்கை அவர் பாதங்களைச் சுட்டிக் காண்பித்தது. 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று கீதையில் சொன்னது போல, பகவான் தன்னைச் சரணம் அடைந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார். அதுதான் கடவுள் தனக்குக் கொடுக்கும் பதில் என்று புரிந்து கொண்டாள். இரண்டு கைகளையும் விட்ட பிறகுதானே திரௌபதிக்குக் கண்ணன் அருள் புரிந்தார்?

துக்கங்களைக் கொடுத்துத்தான் கடவுள் பக்தர்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார் அல்லவா? இதை நினைத்தாள் பார்வதம்மாள். சாந்தி அடைந்தாள்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor : T. Sadasivam



No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

